வீரசிம்மன்

(ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ்ஸீஸர்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1955
MADRAS

தமிழாக்கம் :

கவிஞர் அ. கு. ஆதித்தர்.

ஸ்ரீமகள் கம்பெனி,
122, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை—1.

உரிமை ஆசிரியர்து.

O111,2JSH,J
31N55

105755

விலை ரூபாய் இரண்டு.

Sri Pandaari Press, 26, Broadway, Madras-1.

முன்னுரை.

கல்விநாயகன் கருணைநாயகன்
நல்விவேகத்தை நல்கும்நாயகன்,
சொல்விற்பனம்நற் சுகமும்தந்தவன்
பல்விதத்தினும் என்னைப்பாலிப்பனால்.

பத்தாவதாண்டுமுதற் பற்றிய வழிபடு தெய்வம், வாழ்வுக்கு உறுதிப்பொருள்தந்த இருமுது குரவர், தமிழ்நெறி ஓதிவைத்த சற்குணச் சான்றோர், மேல்நெறி விளக்கிய முத்து ஞானியர் இன்னார் திருவருளைத் தலைமேல் தாங்கி நின்று இவ்வினையை ஆற்றுகின்றேன்.

தமிழ் வளந்தந்த கம்பநாடர், கதைவளந் தந்த ஷேக்ஸ்பியர் இருபெருங்கவிஞர் திருவடிகளிலும் விழுந்து விழுந்து வணங்கி எழுதத் தொடங்குகின்றேன்.

தானாக ஒன்று கற்பனை செய்வதினும், பெரும் புலவரைத் தமிழ்நாடு துய்த்து நிற்கச் செய்தல் நல்ல ஒரு பணியாகும் எனக்கருதி இத்துறையில் அடிவைத்தவன் ஆனேன்.

முன்னர் **கற்புக்கனல்** (Rape of Lucrecea) **உத்தமன் (Othello)** என இரு நூல்களை மொழிபெயர்த்து ; அந்நெறிபற்றியே இன்று உரை நடையில், ஜூலியஸ்ஸீஸர் **வீரசிம்மன்** என வெளியிடப் படுகின்றது.

ஷேக்ஸ்பியரின் சிறந்த நாடகங்களாகக் கருதப்படுகின்ற நான்கினுக்கும் **ஜூலியஸ்ஸீஸர்** எள்ளளவும் இளைத்ததன்று; மேலும், பெருமிதம் என்னும் வீரச்சுவைக்கு இதனினும் சிறந்த ஒரு இலக்கியம் காண்பது அரிதாகும் என்று உணர்ந்து, அதனைத் தமிழ் மக்கள் தமிழில் கற்று இன்புற வேண்டும் என எண்ணி எழுதத் துணிந்தனன்.

பெயர்கள் மட்டும் தமிழர் நெஞ்சத்தில் வேர் ஊன்றத்தக்க முறையில் உரு மாறி நிற்கின்றனவே அன்றி; மேலைப் புலவர் கருத்து அவ்வாறே பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது. உவமை, மரபுகள் தமிழ் நாடு ஒப்பும் முறையில் உருக் காட்டுகின்றன.

என் அறிவின் ஆற்றலாலன்று; பெரும்புலவர் மீது யான்கொண்ட பித்தினால் இதனை ஆற்றுகின்றேனாதலின், ஆங்காங்குள்ள வழுக்களை ஆன்றோர் மனத்திற் கொள்ளாதிருக்க வேண்டுகின்றேன்.

21—12—1951 ஆகிய எனது ஐம்பத்தொன்றாவது பிறந்த நாளில் இந்நூல் வெளி வருகின்றது. வெளி வருவதற்கு என்னுடன் ஒத்துழைத்த ஸ்ரீமகள் கம்பெனியாருக்கு என் நன்றி என்றும் உரித்தாகுக!

கவிஞர். அ. கு. ஆதித்தர்.

கதையும் கவிஞரும்

கதை.

கிறிஸ்து பெருமானுக்கு அறுபது ஆண்டுகட்குமுன் ரோமாபுரித் தலைவனாக வாழ்ந்த ஜூலியஸ்ஸீஸர் பற்றிய சிறு குறிப்புகளைக் கொண்டு வான்பெருங்கவி ஷேக்ஸ்பியரால் 1607-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட நாடகம் இது.

உடல் பொருள் ஆவி மூன்றும் நாட்டுக்கே என எண்ணிப் பிறர் கருத்தை எதிர்நோக்காது தான் நினைத்தவாறு நடந்தான் வீரசிம்மன். இவன் கொண்ட பேராதிக்கத்தைக் கண்ட காசியர் நெஞ்சில் அழுக்காறுற்றார்; பரதர் முதலிய நன்மக்கள் உள்ளத்தையும் மாசுபடுத்தினார்; துச்சனால் குத்திக்கொன்றார்.

வீரசிம்மனின் தகுதி அறிந்த ஆநந்தர் உண்மையை ஊருக்கு எடுத்துரைத்தார். உண்மையறிந்த மக்கள் கொலைஞரைப் பழிவாங்கத் துணிந்தனர்; கொலைஞரோ தம்மைத் தாமே மாய்த்து இறந்தனர்—இதுவே கதைச்சுருக்கம்.

கவிஞர்.

கவிஞர் வரலாறு முன்னர் **உத்தமனில்** கூறப்பட்டிருக்கிறது. மேலும், பெருங் கவிஞரைப் பிறந்தநாள் இறந்தநாள் பற்றிப் பேசுதல் புலமை உலகுக்கு ஒவ்வாது. அவர் காட்டியுள்ள உருப்படிகளின் இயல்பை அறிந்தே மதித்தல் வேண்டும். அந்நெறியில் வீரசிம்மனில் கவிஞர் எவ்வாறு விளங்குகிறார்?

கலாபூரணி தன் கணவனை நோக்கி "யாவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்னை உந்தி, எனக்கு ஏதோ உரைக்கின்றது. தாங்கள் இன்று ஒரு பக்கமும் செல்ல வேண்டா" என்று கூறித் தடுப்பதாகக் கற்புச் செல்வத்தின் தூய நிலையைக் காட்டுகிறார்.

"செல்லுவான் வீரசிம்மன். தீங்கு என உருவானவை என் முதுகை நோக்குமே அன்றி முகத்தைநோக்கி நிற்க ஆற்றுமோ?" என்று வீரசிம்மன் வாய் விள்கின்றது.

Massala	...	மாசாலர்
Young Cato	...	காத்தகுமாரன்
Volumnius	...	வேல்மானவர்

ஊழியர்

Varro	...	வேரியர்
Clitus	...	காளியர்
Cladius	...	களத்திறர்
Strato	...	சரதர்
Lucius	....	உலூகன்
Dardanius	...	தார்மீகர்
Pandarus	...	பண்டையர்
Marullus	...	மருதன்
Flavius	...	விழாவன்

இடங்கள்

Rome	...	ரோமாபுரி
Sardis	...	சதுரகிரி
Philippi	....	பலிபுரம்
Tiber	....	தீபநதி

வீரசிம்மன்

(ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் ஸீஸர்)

களம் 1. காட்சி 1.

இடம் :—(ரோமாபுரி வீதி. விழாவன், மருதன் என இரு சிப்பாய்களும் சில பொது மக்களும் வருகின்றனர்.)

விழாவன் : வேலையில்லாச் சோம்பேறிகள்! வீடுகளுக்குப் போங்கள்! இன்று என்ன விடுமுறையா? இன்று வேலைநாளில் வறிதே வரலாமோ? அடைப்பை எங்கே? கைக்கருவி எங்கே? நீ என்ன தொழில் செய்பவன்?

ஒருவன் : ஐயா, யான் ஒரு தச்சன்,

மருதன் : தச்சன்! கையிலே சாமான் கிடையாது, முழக்கோல் கிடையாது, வெள்ளாடை அணிந்து வெளிக்கிளம்பி விட்டான்! (அடுத்தவனை) நீ என்ன வேலை செய்கிறவன்?

மற்றவன் : ஐயா, நான் மிதி-அடி-வேலைக்காரன். ஏ.......... செம்மான்.

மருதன் : என்ன அது? நல்ல விளக்கமாய்ச் சொல்.

மற்றவன் : மிதி-அடி-வேலைக்காரன்.

மருதன் : அதென்ன மிதி-அடி-வேலை? அடியில்லாமல் இப்படி அலைகிறீர்களோ?

மற்ற : நல்ல புது அடி வைத்திருக்கிறேன். சுவாமி, தங்களுக்கும் ஒன்று போட்டுக் கொள்ளலாம்.

மரு : எனக்கும் ஒரு அடி போடுகிறதா? அதென்னடா. வம்புத தனமா யிருக்கிறதே!

மற்ற : உங்கள் மிதியடிக்குப் புது அடி.

விழா : நீ செருப்புத் தைக்கிறவனு?

மற்ற: ஆமாம் ஐயா. தோல் குத்துத் தையல்தான் அடியேனுக்குப் பிழைப்பு. பெண்டாட்டி, பிள்ளை, வேறு வியாபாரம் யாது கிடையாது. கிழிந்த செருப்புக்கு நான்தான் சிறந்த வைத்தியன். கழித்து ஒதுக்கப்படாமல் அவை எல்லாம் என்னால் உழைக்கின்றன. என் கைவேலையால்தான் நல்ல நாகரிகமான நடை ஏறுகிறது!

விழா: சரி, இன்று ஏன் வேலைக்குப் போகவில்லை? ஏன் இவர்கள் இவ்வாறு தெருவைச் சுற்றி உலாவுகிறார்கள்?

மற்ற: இவர்கள் இப்படி அலைந்தால்தானே அடியேனுக்கு நல்ல வேலை கிடைக்கும். இன்று வீரசிம்மரின் வெற்றிவிழாவைக் கண்டு களிக்க விடுமுறைகொண்டு, இப்படிக் கூடிநிற்கிறார்கள். யானும் வந்தேன்.

மரு: கண்டு களிப்பதற்கு என்ன உண்டு? எந்தக் கோட்டையை அவர் பிடித்து வெற்றி கண்டார்? பகைப்புல மக்களை அடக்கி, அவர்களின் திரண்ட செல்வத்தைத் தேரில் ஏற்றி, ரோமாபுரி கொண்டு சேர்த்துத் தமது வீர வெற்றியை விளக்கினாரோ? நீங்கள் உண்மையை உணரும் ஆற்றல் அற்றவர்கள்! விலங்கினத்திலும் இழிந்தவர்கள்! கல்தூண்! மட்குவியல்! இரக்கமற்ற நெஞ்சத்தினர், ரோமாபுரியின் கொடியர்! அன்று பாம்பையனைப் பார்த்தவர்கள் நீங்கள்!! ரோமாபுரியின் தெருவில் அவன் பவனி வரும்பொழுது நீங்கள் உங்கள் கைக்குழந்தைகளுடன் மாடங்களிலும் மாளிகைகளிலும், கூடங்களிலும் கூரைகளிலும், சுவர்களிலும் அரண்களிலும், மனைகளின் புறத்திலும் முகட்டிலும் அவனைக்காணும் பேராவலுற்றுக் காத்து நின்றீர்கள்; அவனைக் கண்டு களித்தீர்கள். ஒரு முறையோ இரு முறையோ? பன்முறை! அதனை மறந்தீர்கள்! அவனுடைய தேரைக் கண்டதும் நீங்கள் செய்த ஆரவாரத்தால் தீபநதி பொங்கி எழுந்து கரைபுரண்டு ஓடிற்று! இன்று ஏன் உங்கட்குப் பட்டு பீதாம்பரங்கள்? இன்று ஏன் உங்கட்கு விடுமுறை வேடிக்கை? பாம்பையன் வழியில் பெருமித வெற்றிகண்ட ஒருவன் வருகிறான் என நறுமலர், தூவி வரவேற்கின்றீர்களோ! அகல்வீர், அகல்வீர்!! தத்தம் மனைகளுக்குச் சென்று, உங்களைச் சூழ்ந்துள்ள தீவினைகள் எல்லாம் நீங்க வேண்டும் என்று தெய்வத்தை நோக்கித் தொழுது நில்லுங்கள்.

விழா: போங்கள். உங்களோடு மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு, தீப நதியின் கரையிலிருந்து கண்ணீர்விட்டு அழுங்கள். உங்கள் கண்ணீர் அவ்வாற்றின் கால்களின் வழிச்சென்று பாவி, பாக்கியின்றி எவ்விடமும் பாயும்வரை அழுங்கள். (அகல்கிறார்கள்)

அறிவிற் கடைப்பட்ட இம்மக்கள் மனம் மாறுபட்டுள்ளார்கள். தம் தவறுகளை அவர்கள் உணர்ந்து வாய்பேசாது செல்கின்றனர். சரி. நீ அவ்வழியாகத் தலைநகருக்குச் செல்; யான் இவ்வழியாகச் செல்கிறேன். வழிபாட்டு முறைபெற்று வீரசிம்மனின் சிலைகள் எங்கெங்குத் தோன்றினும் அவற்றையெல்லாம் அழி.

மரு: இன்று சம்புகன் திருநாள்; அவ்வாறு ஆற்றுவது ஆகுமோ?

விழா: அதைப்பற்றிய கவலையே வேண்டா. வீரசிம்மனின் வெற்றி விளக்கமாக யாதொரு சிலையும் இங்குத் தோன்றலாகாது. யான் நகருக்குள் சென்று ஆங்காங்கு கூடிநிற்கும் பாமரமக்கட் கும்பலைக் கலைத்து வருகிறேன்; நீயும் அவ்வாறே செய். வீரசிம்மனே நம் அனைவரையும் அடிமைவாழ்வில் வைத்துள்ளான். அவன்மேல், நாம் கீழ் ஆக வாழ்கிறோம். இறகை அரிந்து விட்டால் பறவை மேல் எழுவது எங்ஙனம்? வீரசிம்மனின் சிறப்பை அழித்து, அவனை நம் நிலை ஆக்கல் வேண்டும். (அகல்கிறார்கள்.)

களம் 1. காட்சி 2,

இடம்:—(ரோமாபுரி வீதி. வீரசிம்மன், ஆநந்தர், கலாபூரணி, ஊர்வசி, பரதர், கீசகன், ஒரு நிமித்திகன், காசியர் பலர் கூட்டமாய் வருகின்ற காட்சி.)

வீரசிம்மன்: கலாபூரணி!

கீசகன்: அமைதி! வீரசிம்மன் பேசுகிறார்; அமைதி!

வீர: கலாபூரணி,

கலா: இதோ அடியாள், தேவா.

வீர: நம் ஆநந்தர் ஓடி வரும்பொழுது அவருக்கு எதிரில் நிற்பாயாக. ஆநந்தரே,

ஆந: அரசே.

வீர: ஆநந்தரே, நீர் ஓடிவரும் வேகத்தில் கலாபூரணியைத் தொட மறந்து விடாதீர். நம் முன்னோர்கள் பலரும் இப்புண்ணிய விழாநாளின் வெறி ஓட்டத்தினர் கைதொட்டால், பெண்கள் மலடு நீங்கி மகப்பேறடைவர் என மொழிந்துள்ளார்.

ஆந: சரி, அதனை மறவேன்: வீரசிம்மன் வாயிலிருந்து வந்த சொல் நிறைவேறாதிருக்குமோ?

வீர: சரி, போகலாம் ஆகவேண்டிய ஒன்றையும் கைவிட வேண்டாம்.

நிமித்திகன்: அரசே,

வீர: யார் அங்கு?

கீசகன்: எங்கும் அமைதி! அமைதி! ஒரு சத்தமும் கேட்க லாகாது.

வீர: இக்கூட்டத்துள் என்னை அழைத்தவன் யாவன்? வாத்திய ஒலிகளுக்கிடையே 'அரசே' என்று அழைத்த ஒருகுரலை என் செவிகள் நுகர்ந்தன. வீரசிம்மன் அவன் வார்த்தைகளைக் கேட்க விழைகின்றான். அவன் பேசலாம்.

நிமி: மாசித்திங்கள் பௌர்ணமி நாள் மனத்தில் இருக்கட்டும்.

வீர: அவன் யாதுகூறுகிறான்?

பரதர்: நிமித்திகன் ஒருவன் மாசித்திங்கள் பௌர்ணமி நாளை மனத்தில் இருத்த வேண்டுகின்றான்.

வீர: அவனை என்முன் கொண்டுவாருங்கள்: அவன் முகத்தை யான் பார்க்கட்டும்!

கீச: என்பின்னாக வா; இவ்வழி வா. வீரசிம்மரைப்பார்.

வீர: ஈண்டு எம்மை நோக்கி யாது கூறினை? அதனை மீண்டும் கூறு.

நிமி: மாசித்திங்கள் பௌர்ணமி நாளை மனத்தில் இருத்துக.

வீர: இவன் ஏதோ கனாக்காண்கின்றான்! சரி நீ போகலாம்.
(பரதர், காசியர் தவிர மற்றவர் மறைதல்.)

காசி: விழா ஆட்டம் பார்க்க நீர் செல்கிறீரோ?

பரதர்: நான்! போகவில்லை.

காசி: நீர் கட்டாயம் போய்த்தீரவேண்டும்.

பர: எனக்கு விளையாட்டு விருப்பமே கிடையாது: அந்த வகையில் ஆநந்தரைப்போல் நம்மால் ஒட்டசாட்டமாக இருக்க முடிகிறதில்லை. காசியர், நான் என் வீணாய் உம்மை இங்கு நிறுத்தி வைத்திருக்கிறேன், போய்வாரும்: யானும் போகிறேன்.

காசி: பரதரே, சில நாட்களாக உம்மைக் கவனித்து வருகி றேன். உம் முகஒளியும் அருள்நோக்கும் எங்கோ மறைந்துவிட்டன. என் அன்பர்களிடத்திலும் முரண்பாடு? வேற்றுமுகம்!

பர: காசி, தப்பாக யாதும் எண்ணவேண்டாம். ஒளியிழந்த மாறுமுகம் கொண்டேனாயின் அது என் மனக்கவலையே: அதனை யான்மட்டுமே துய்க்கவேண்டியவனாகிறேன். அண்மையில்—சில சில காரணங்களால் யான் மாறுபாடு உடையவனானேன். யான் ஒருவனே அவற்றை உணர்கிறேன்; யானே வருந்துகிறேன். காசியரே, நீரும் மற்ற அன்பர்களும் இதைப்பற்றி மனம் வருந்தாதிருக்க வேண்டுகின் றேன், தன்னில்தானே மனக்குழப்பத்தில் இருக்கிற இப்பரதர்மீது, அவர் தம் அன்பர்களைக் கவனிப்பதில்லை என்று மற்றொரு பழியும் ஏற்றிப் புண்ணாக்கவேண்டாம்.

காசி: அவ்வாறாயின் உமது மாறுபாடுபற்றி யான் பிறழ உணர்ந்தவன் ஆகின்றேன்; அதனால் தங்களிடம் கலந்து ஆராய வேண்டிய பெரும்பெருங் காரியங்களையும் என் மனத்துள்ளே புதைத்து அடக்கியவனானேன். பரதரே, உம்முகத்தை நீர் பார்க்க முடிகிறதோ?

பர: முடியாது: கண்ணாடியில்லாமல் கண் எப்படி தன்னைத் தானே பார்க்கமுடியும்?

காசி: முற்றும் உண்மை! அவ்வாறே உமது அரும்பெரும் ஆற்றலை நீர் உணர்ந்திலீர். அதனை உமக்கு எடுத்துக்காட்ட ஒரு ஆடி யும் பெற்றிலீர் என்பது பொதுமக்களின் உள்ளக்கிடக்கை. மாறாப் புகழ் வீரசிம்மன் தவிர ரோமாபுரியின் மக்கள் பலரும் பரதரை வாயாரப் புகழ்வதையும், தற்கால ஆட்சி முறையில் அழுந்தி அழு வதையும் யான் உணர்வேன். பெருமகன் பரதரும் இதனை உணர வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

பர: காசி, என்னை எங்குகொண்டு தள்ள எண்ணமோ? மண்ணை மலையாக உருவாக்குகிறீரே!

காசி: சரி. உம் ஆற்றலை நீர் தாமாகவும் அறியீர், எம்மாலும் தெரியீர். நான் உம் சாயலைக் காட்டும் கண்ணாடியாக நின்று, நீர் அறியா உம் ஆற்றலை உமக்குக் காட்டிவைக்கிறேன். பரதர்க்கு இதைப்பற்றி எத்தகைய ஐயுறவும் வேண்டா. நான் ஒரு எளியவன், நம்பின இடத் தில் ஒன்றிப் பல்லவிபாடி நிற்பவன்; கண்ட இடத்தில் ஒன்று, காணாத இடத்தில் மற்றொன்று பேசுவதும், வம்பர் சும்பர் கூட்டம்

களில் கலந்து கலக மூட்டுவதும் எனக்கு வழக்கமில்லை : ஆகையினால் ஐயுறவேண்டாம்.

பர : இதென்ன ஆரவாரம்? ஓ! ஓ! (ஆர்ப்பு) மக்கள் கூடி வீரசிம்மனை அரசன் ஆக்கினர் போலும்!

காசி : 'ஓ ஓ' என்? நும்மனம் அதனை ஒப்பவில்லையா?

பர : அவன் எனக்கு மிக வேண்டியவனே : ஆயினும் நான் அதை ஒப்புகிறதில்லை. சரி, என்னை ஏன் இங்கு நிறுத்திவைத்துள்ளீர்? நீர் இப்பொழுது சொல்லவேண்டியது யாதுளது? சொல்க. அது நாட்டின் நலம்பற்றியதாயின் அதனால் எனக்குச் சிறப்பே வருக, இன்றேல் இறப்பே வருக. இரண்டையும் பொருட் படுத்தாது உடனே வினையாற்றுவேன். இறப்பின் அச்சத்தினும் விரைவாக, யான் விரும்பும் சிறப்பு நலங்களைத் தெய்வமே முன்னின்று நடாத்தி எனக்கு வழிகாட்டும்.

காசி : பரதரே, உயர்வின் நலங்கள் பல நீர் தாங்குகின்றீர், நல்ல உருவம் பெற்றுள்ளீர். சரி. 'சிறப்பு' என்பதைப் பற்றித்தான் இப்போது யான் சிலபேச விரும்புகிறேன். இற்றை நாள் வாழ்வு முறைபற்றி நீரும் ஏனையோரும் யாது கருதுகிறீர்களோ, அறியேன். என்னைப் பொறுத்த அளவில், இத்தகைய ஒரு துன்புற்ற நிலையில் இருப்பதைவிட இறப்பதையே யான் பெரிதும் விரும்புகிறேன். யான் என்ன, நீர் என்ன, இருவரும் வீரசிம்மனைப்போலவே பிறந்தோம். இருவரும் அவனைப்போலவே உண்டு உடுத்து வளர்ந்தோம் ; அவனைப் போலவே இன்பதுன்பங்களை ஏற்றுநின்றோம் ; ஆற்றல் படைத்தோம்.

அன்றொருநாள் ஊதைக்காற்றும் பெருங்குளிரும் ஊரெங்கும் நிலவியது. தீபநதி பெருவெள்ளங்கொண்டு கரைபுரண்டோடியது. வீரசிம்மன் என்னைப்பார்த்து "ஏ, காசீ, இந்த வெள்ளத்தில் குதித்து நாம் இருவரும் அதோ தெரிகிற எல்லை வரை நீந்திவரவேண்டும். உன்னால் முடியுமா?" என்றான். யானும் கச்சையுடன் இருந்ததால் அவ்வெள்ளப் பெருக்கத்தில் சட்டெனக் குதித்து, அவனை என்னைத் தொடருமாறு சொன்னேன். அவ்வாறே அவனும் தொடர்ந்தான். வெள்ளம் வீறிட்டது : நாங்கள் இரு கைகளாலும் வீங்கப் புடைத்துப் போட்டியிட்டு நீந்தினோம். குறித்த இடத்தை அடையும் முன்னரே இந்த வீரசிம்மன் "காசி, இதோ அமிழ்கிறேன் : வந்து உதவு" எனக் கத்தினான். யானோ, அன்று கரிகாலனை அவர் மாமனார் இரும்பிடர்த்தலையார் நெருப்பிலிருந்து மீட்டு எடுத்துவந்ததுபோல, வீழ்ச்சியுற்ற வீரசிம்மனை

வெள்ளத்தினின்றும் மீட்டு வெளிக்கொணர்ந்தேன். இத்தகையன் இன்று இறைவன் ஆனான். திறம் மிகுந்த காசி அவனைக்கண்டு வணங்கி, ஆமோதிப்பைப் பெறவேண்டிய அற்ப பதர் ஆனான்!

பானிய நாட்டில் இருந்த காலத்தில் வெப்புநோய் உற்று, அவன் கொண்ட நடுக்கமும், உற்ற துடிப்பும் அம்மம்மா! அதனை நான் மறக்க முடியுமா? உதடுகள் வெளிறின : இன்று உலகத்தை அச்சுறுத்து முறையில் நோக்கும் அவன் வீரக்கண்கள் அன்று ஒளி இழந்தன. நா கோடிற்று : படுத்த படுக்கையில் பிதற்றலானான். தான் உரைக்கும்ஒவ்வொரு சொல்லையும் எழுத்தில் பொறிக்குமாறு வீரவுரைதந்து இன்று மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து நிற்கும் அவனது நா உள்ளிழந்து, அன்று நோயுற்ற சிறுமிபோலப் "பருகச்சிறிது நீர் கொடுங்கள்" என மன்றாடிற்று. இவ்வாறு உரம் அற்று நின்ற ஒருவன் இன்று உலகத்தை ஆட்டிவைக்கும் வீரனாக விளங்குகிறான். அவனே வாகைசூடி மேடை ஏறுகிறான். (ஆர்ப்பு)

பர :—அதோ! மீண்டும் ஆரவாரம். வீரசிம்மனுக்கு மற்றொரு மாராயஞ் சூட்டுகிறார்கள் போலும்!

காசி :—ஆமாம். அவனோ உலகினை அளந்த திருமால்போல் கால்களை விரித்து நிற்கிறான். நாம் அக்கால்களுக்கிடையில் வணங்கி நடந்து வாழ்வை முடிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் கீழ் மக்களாகக் கருதப்படுவது நம் குற்றமே ஆகும் : இது விதியின் பிழையன்று. விதியை வெல்லும் வல்லுநர் சிலரே. பரதர், வீரசிம்மன்—வீரசிம்மன் என்ற பெயரில் என்ன சிறப்பு? பரதர் பெயர் வீழ; வீரசிம்மன் பெயர் விளக்கமுறக் காரணம் என்ன? இரண்டு பெயர்களையும் எழுதிப்பாரும். உமது பெயரும் அவன் பெயரைப் போன்றே அழகாக இருக்கின்றது. ஒலித்துப் பார்ப்போம் : உம்பெயர் அவன் பெயரைப்போன்றே ஒளிர்கின்றது! ஆற்றலை ஆராய்வோம்; இது அதற்கு இளைத்ததன்று. மக்கள் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்டு மகிழ் ஊட்டுவதிலும் வீரசிம்மப் பெயரைப் போன்றே பரதர் பெயரும் விளங்கும்; அம்மட்டோ! தெய்வமணங் கமழ்வது! வீரசிம்மன் பெயர் மட்டும் வீறுகொண்டு விளங்குவதற்கு அவன் ஒரு தனி உணவு அருந்துகின்றானோ! ரோமாபுரியே, நீ அழியா வசைக்கு உள்ளானாய்! நீ உன் வீர இரத்தத்தை இழந்தாய்! ரோமாபுரி பிறந்த நாள்முதல் பெருமக்கள் பலரின் ஆட்சியால் பிறங்கிற்றேயன்றித் தனி ஒருவன் ஆணையால் திகழ்ந்ததாக யாண்டும் வரலாறு கிடையாது. இடம்படைத்த நம் ரோமாபுரி தனி ஒருவன் ஆட்சிக்குள் ஒடுங்கிய

தாக அதன் வரலாற்றில் இற்றை நாள்வரைக் காணவே முடியாது. இன்றும் இங்கு பலருக்கு இடமுண்டு, ஆயினும் இருந்து நடத்து பவன் ஒருவன். நம் முன்னோர்களில் பாதர் என்னப் பெயர்படைத்த ஒருவர் ,அரசன் ஒருவன் ஆளும் நாட்டினும் நாகம் சிறந்ததென வினையாற்றி வெற்றி கண்டதை நாம் பெரியோர் வாயிலாகக் கேட்டிருக்கிறோம்.

பர: நீர் என்னை விரும்புகின்றீர் என்பதுபற்றி எனக்கு ஐயுறவே கிடையாது. யான் யாது செய்ய நீர் விழைகின்றீர் என்பதையும் நன்கு அறிகின்றேன். இதுபற்றி யானும் எண்ணியதுண்டு. அதையெல்லாம் விளக்கமாகப் பின்னர் அறிவிக்கின்றேன். நீர் என்னை விரும்புவது போன்றே யானும் உம்மை விரும்புகின்றேன்; ஆயினும் இந்த நிலையில் ஒன்றும் நவில்தற்கில்லை. இன்னும் இதுபற்றி ஆராய்வேன். நீர் இன்னும் சொல்பவைகளையும் கேட்டு; நாம் இருவரும் தனித்திருந்து இப்பெருங்காரியங்களை அமைதியாய் ஆய்ந்து ஒரு முடிவுகாண; தக்க இடத்தில் ஒருநாள் கூடுவோம். மாசில்லாக் காசி, ரோமாபுரிப் பெருமகனைப் பிறங்கி, அடக்குமுறையில் ஒடுங்கி வாழ்வோரில் ஒருவனையிருப்பதைவிட இப்பாதர் கிராமங்களிற்சென்று ஒதுங்கி வாழ்வார் என்பதை மட்டும் மனத்திற் கொள்க.

காசி :—என் சிறு சொற்களால், பாதர் நெஞ்சில் இத்துணை அனல் எழுவதைக் காணப் பெரிதும் மகிழ்கிறேன்!

பர :—அதோ, ஆட்டம் முடிந்து வீரசிம்மன் மீள்கிறான்.

காசி :—அவர்கள் அருகில் வரும்பொழுது, கீசகன் சட்டையைத் தொட்டு இழுத்தால் அவன் நின்று, குறிப்பிடத் தக்கதாய் இன்று நடந்தன யாவற்றையும் நவில்வான்.

(வீரசிம்மன் ஏனையோருடன் வருகிறான்)

பர :—அவ்வாறே செய்கிறேன். ஆனால்-காசி, அதோ பார். வீரசிம்மன் சீறிய முகத்தனாய்க் கண்கள் சிவந்தவனாய் :—பின் தொடர்வோர் பலரும் வெகுளியாய் வாட்டம்—கலாபூரணி அச்சத்தால் வெளிறிய முகத்தினள்—பிசிரர் கண்கள் சிவந்து காட்டுப் பூனை போல் நோக்குகிறார். நகர் மன்றில் அயலார் மாற்றங்கண்டு மனங் கனன்று விழிகள் அழல் கக்கி நிற்கும் முறையில் இன்றும் தோன்றுகின்றார்.

காசி :—கீசகன் நடப்பை எல்லாம் நமக்குச் சொல்லுவான்.

வீர :—ஆநந்தரே,

ஆந: ஐயன்!

வீர: உண்டு செழித்து நன்கு உறங்கும் நலங்கண்டோரே எனக்குத் துணைவர்களாகுக. அதோ காசியனைப்பார். பசித்து வாடி வறண்ட தோற்றம், அழுக்காறு அவாநிறைந்த உள்ளம். இத்தகையோரால் என்றும் ஊறு நேரும்.

ஆந: ஐய, அவரைப்பற்றி அச்சமே வேண்டாம். அவர் ஊறு புரிபவரல்லர். நல்லாற்றில் ஒழுகும் ஒரு தூய உரோமர் அவர்.

வீர: உள் உலர்ந்தவனானன்! ஆயினும் யான் அவனுக்குச் சிறிதும் அஞ்சுகிலேன். வீரசிம்மன் அஞ்சத்தக்க ஒருவன் உளன் எனின்; அந்நெறியில் விலக்கத்தக்க ஒருவனாயிருப்பவன் வளமற்ற அக்காசியனே. அவன் படிப்பில் மிக்கவன்; எதனையும் உற்று நோக்குகிறான்; மக்களை அவர்களின் செயல்கொண்டு தூக்கி உணர்கிறான். ஆட்டம் விழையான், இசைகேளான், முறுவல் கொள்ளான், பூக்கும் முறுவலில் புன்மை வயத்தனாய்த் தன்னையே நொந்து எண்ணி நிற்பவனாகத் தோற்றம் அளிக்கின்றான். இத்தகையோர் மனத்தில் அமைதி காண்பது அரிது. இவன் மற்றவனைத் தன்னினும் சிறந்தோனாகக் கண்ணுறின், உள்ளத்தமைதி ஒழிந்தது! ஆதலின், இன்னார் என்றும் இன்னா புரிபவரே ஆவர். யான் வீரசிம்மன், எதற்கும் அஞ்சுவதுமில்லை, யான் அஞ்ச வருவதுமில்லை. அஞ்சுவதற்குரியது யாது என உனக்கு அறிவிக்கவே இதனை உரைத்தேன். என் இடப்புறக்காது கேட்கிலது; இப்படி வலப்புறத்தில் வந்து, உண்மையாக நீ அவனைப்பற்றிக் கொண்ட கருத்தைக் கூறு.

(கீசகன் நிற்கிறான். ஏனையோர் மறைதல்)

கீச: சட்டையைப்பற்றி இழுத்தீர்; ஏதும் சொல்லவேண்டியதுண்டோ?

பர: கீசகா, வீரசிம்மன் இன்று முரணுற்ற முகத்தனாய்த் தோன்றக் காரணம் என்ன? கூறு.

கீச: ஏன்? நீரும் அங்கிருந்தீர் அல்லவா?

பர: யான் இருந்தால் ஏன் கேட்கிறேன்?

கீச: அவனுக்கு முடிபுனைய முனைந்தனர்; அவனே அதனை எடுத்துப் பின்புறத்தே இவ்வாறு-ஒதுக்கினான். அதனால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பர: இரண்டாவதாக ஒரு ஆர்ப்பு எழுந்ததே?

கீச: அஃதும் அதே காரணமே.

பர: மூன்றுமுறை அவனுக்கு முடி புனைந்தார்களோ?

கீச: கடவுள் அறியச் சொல்கிறேன். மும்முறை வழங்கினர். மும்முறையும் அவன் அதனை அப்புறப்படுத்தினன். அவன் அதனைக் களைந்து நின்ற முறை, ஒவ்வொரு தரமும் முந்தியதைவிடச் சிறிது சோர்வுடையதாய்த் தோன்றியது. ஒவ்வொரு முறையிலும் நம் மதி மிகுத்த மக்கள் ஆர்ப்பரித்தனர்.

காசி: முடி வழங்கியோன் யாவன்?

கீச: ஆநந்தர்தாம்.

பர: கீசகா, அதைச் சற்றே விளக்கமாகக் கூறு.

கீச: அதைச் சொல்வதிலும் தூக்குமேடையில் ஏறுவது நல்லதாகத் தோன்றுகிறது. அங்கு நடந்த பலவும் ஒரு பொய்ம்மை, வெளி மயக்கு. என்மனம் அங்கு ஒன்றினும் பற்றவில்லை. ஆநந்தர் வீரனுக்கு ஒரு முடி வழங்கினர். அஃதும் பொன்முடியன்று, புன்முடி என்பதே பொருந்தும். வீரர் அதனை மறுத்து அப்பால் ஒதுக்கினர். அவர் அதை ஏற்று நிற்பார் என்றே நான் எண்ணினேன். ஆநந்தர் மீண்டும் அளித்தார்; அவரோ அதை அகற்றினர். ஆனல் இம்முறை வீரர் அதனைவிட்டுக் கையை அகற்ற விருப்பற்று நின்றதாகவே யான் கருதினேன். மூன்றாம்முறை அவர் வழங்கினர்; இவரும் முன் போலவே விலக்கிவைத்தார். அந்நேரத்தில் மக்கள் கூக்குரலிட்டனர்; கொடுங்கை தட்டினர்; தலைக்குல்லாக்களை வீசினர்; அவர்தம் நெட்டுயிர்ப்பு நச்சுக்காற்றால் வீரசிம்மன் மயக்குற்றார்; கீழ்சாய்ந்தார்; வாய்திறப்பின் கெட்ட காற்றால் தீங்கு பிறக்கும் என்று எண்ணி யான் சிரிக்கவும் இல்லை.

காசி: சற்றே ஒன்று. வீரசிம்மன் மயக்குற்றனை?

கீச: அவர் மேடைமீது சாய்ந்தார். வாய் எல்லாம் நுரைபூத்து மெய்மறந்து கிடந்தார்.

பர: ஆம். அவருக்கு ஒரு மயக்கம் உண்டு.

காசி: மயக்கம் அவருக்கு இல்லை! உமக்கும், எனக்கும் இதோ நிற்கிற கீசகனுக்குந்தான் மயக்கம். மயக்கத்தில் வீழ்ந்து கிடக்கிறோம்.

கீச: நீர் கூறுவதன் பொருளை உணர முடிகிறதில்லை! வீரசிம்மன் கீழே விழுந்தது உண்மையே. நாடக மேடையில் நடப்பதைப் போல; அவரை ஒப்பும்போதெல்லாம் மக்கள் சப்பாணிகொட்டினர்: ஒவ்வாமைக்கு ஊளை: இவை எல்லாம் இல்லை எனின், என் சொல்லையும் பொய் எனக்கொள்க.

பர: மயக்கம் தெளிந்ததும் அவர் யாது கூறினர்?

கீச: மயங்கி விழும் முன் தான் முடிபுனைய மறுத்ததைக் கண்டு கூடியிருந்த மதிமக்கள் மனமகிழ்ந்து ஆர்ப்பரித்ததை அறிந்த அவர், கழுத்தின் ஆடைகளை அகற்றிக் காட்டி "குற்றம் கூறுபவன் கத்தியைவை" என என்முன் நின்றார். யான் கைதேர்ந்தவன்! வாளா நின்று விட்டேன்! அம்மொழிப்படி ஆற்றினல் மற்ற வம்பருடன் யானும் நரகில் அழுந்த வேண்டியதே ஆகும். அவர் அறிவுபெற்றதும் தாம் ஏதாவது தவறுதலாகப் பேசியிருப்பினும், செய்திருப்பினும், அது அவரது நொய்ம்மையால் ஏற்பட்டதாகக் கொள்ளுமாறு பெரு மக்களை வேண்டி நின்றார். என் அயலில் நின்ற சில கூலிப் பெண்கள் மட்டும் 'அந்தோ நல்லவர்' என மனம் இரங்கி நின்றனர். அதுபற்றி என்! அவன் அவர்தம் தாய்மாரைக் கொன்றிருப்பினும் இவர்கள் இவ்வாறு இரங்கும் இயல்பினர்!

பர: அதன்பின் இச்சீற்றத்துடன் கிளம்பினன் போலும்?

கீச: ஆம்.

காசி: பிசிரர் ஏதாவது பேசினரோ?

கீச: அவர் ஏதோ பேசினர்.

காசி: எதுபற்றி?

கீச: அவர் மொழிந்ததை யான் தெரிந்ததாய்க் கூறினல், மறுமுறை உம்மைப் பார்க்க வகையுற்றுப் போகும்! அவர் மொழி அறிந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தனர், தலை அசைத்தனர்; யானே யாதும் அறியாதவனயிருந்தேன். மற்றொன்று: மருதன், விழாவன் இருவரும் சிம்மரின் சிலைகளைச் சிதைத்த குற்றத்தால் சிறை செய்யப்பட்டனர். இப்படி இன்னும் எத்தனையோ சிறு காரியங்கள். ஒன்றும் இப்பொழுது நினைவிற்கில்லை. யான் சென்று வருகிறேன்.

காசி: கீசகர், இன்று இரவு உணவு நம்மனையில் வைத்துக் கொள்ளலாமே?

கீச: இன்று மற்றொரு அன்பரிடம் வாக்கு அளித்துள்ளேன்.

காசி: நாளை உணவுக்கு வரலாமன்றோ?

கீச: யானும் உயிருடன் இருந்து, உம் உள்ளமும் மாறாது உறைந்து, விருந்தும் கொள்ளத்தக்கதாயின்—

காசி: நன்று நாளை எதிர்பார்க்கிறேன்.

கீச: அவ்வாறே. சென்று வருகிறேன். (அகல்தல்)

பர: கிசகன் பள்ளிச் சிறுவனாக இருந்த நாளில் துள்ளித்துடித்துச் சமர்த்தனாக நின்றான். இன்று முழு மண்டுவாகிவிட்டான்!

காசி: யாதும் அறியாதவன்போல் ஒரு தோற்றம்! இன்றும், நல்லதோ கெட்டதோ எதனையும் துணிந்து செய்ய வல்லவனே ஆவான். அறியாதவன்போல் தோற்றம்; அதி நுட்பமாக அவன் தரும் சொற்கள் பசித்துப் புசித்த முறையில் பெருஞ் சுவைதந்து நிற்கின்றன.

பர: அது அப்படித்தான். சரி. யான் சென்று வருகிறேன் தக்க வாய்ப்பு ஏற்படின் நாளை யான் உம்மனைக்கு வருகிறேன்; இல்லை. நீர் என்மனைக்கு வாரும்: நான் உமக்காகக் காத்திருக்கிறேன்.

காசி: சரி, நான் வருகிறேன். அதுவரை நம் நாட்டு நிலையைச் சற்றே உன்னுக. (பாதர் அகல்கிறார்.) பாதர் பெரியவர்தாம்! அவர் பெருமையும் நெறிதிறம்ப வகைசெய்யலாம். பெரியவர் பெரியவரையே சேர்வார்! ஆனால் முறையோடு கரைத்தால் கரையாதது எது? வீரசிம்மன் என்மீது வன்மம் வைத்துள்ளான், பாதரை விரும்புகின்றான். பாதர் நிலையில் காசியன் இன்று இருந்திருந்தால், இத்துணை வேறுபாட்டுக்கு இடமே ஏற்பட்டிராது. சரி. இன்றிரவு ஒன்று செய்வேன். பலர் பல கடிதங்கள் வரைந்ததாய்—ரோமாபுரி மக்கள் பலரும் பாதரை விரும்புவதாகவும், வீரன் அவாவுற்று நிற்பதாகவும் குறிப்பாகக் காட்டிப் பல கடிதங்கள் எழுதிப் பலகணிவழியாக அவர் அறைக்குள் வீசுகிறேன். இதனைப் பாதர் உணர்வாராயின்—, வீரசிம்மன் எத்துணை உறுதியை நாடினும் சரி—அவனை ஒரு அசைப்பு அசைத்தே தீர்வோம்; அப்படி இல்லை, நிலைமை இன்னும் கேடாக முடியினும் முடியட்டும்.

களம் 1, காட்சி 3.

இடம்:—(தெரு—கீசகன் வாள் ஏந்தியும், பிசிரர் வெறுங்கையராயும் எதிர் எதிர் வருகின்றனர்.)

— இடி, மின்னல் —

பிசிரர்: கிசகரே, வாரும் வாரும். வீரசிம்மனுக்கு மெய்க்காவல் புரிந்து வந்தீர் போலும். ஏன் பேச்சு மூச்சின்றித் திகைக்கிறீர்?

கீச: உலகம் முழுவதும் நிலைகலங்கிக் குமுறுகிறதே; உம் உள்ளம் கலங்கவில்லையா? நான் என்னுடைய காலத்தில் பெருஞ் சூறாவளிகள் ஓங்கி வீசிப் பெரிய பெரிய மரங்களை வீழ்த்தித் தூக்கி வீசியதையும் பார்த்திருக்கிறேன்; கடல் கொந்தளித்து நின்று வானத்தை முட்டும்படி நீரை அள்ளி வீசியதையும் பார்த்திருக்கிறேன்; காற்றில் நெருப்புக் கலந்து பெய்த இத்தகைய ஒரு கொடுமையை இந்த நேரத்துக்கு முன்னால் என்றுமே கண்டதில்லை. ஒருகால் தேவலோகத்தில் சண்டை நடக்கிறதோ? இன்றேல் உலகத்தின் பாவம் பசிகளைப் பொறுக்கமாட்டாதவர்களாய்த் தேவர்கள் உலகை அழித்துவிட எண்ணினார்களோ?

பிசி: ஏன், இப்படிப்பேச, என்ன நீ பார்த்துவிட்டாய்?

கீச: தெருச்சுற்றியலைகிற ஒரு பயல்—நீரும் பார்த்திருக்கலாம். இடக்கையை மேலே தூக்குகிறான். அது இருபது விளக்கு சேர்ந்து எரிவதுபோல ஒளிவீசி ஓங்கி நிற்கிறது. எங்கும் ஒரே சுடர் மயமாக விளங்குகிறது. அவனை அது எரிக்கவும் இல்லை, சுடவும் இல்லை. என் கையில் வாளும் இல்லை, யாதும் இல்லை: என் முன்னே கோட்டைவாயிலில் ஒரு சிங்கம் என்னை முரணிப் பார்த்துக் கொண்டே அயலில் நடந்து செல்கிறது: எனக்கு ஒரு தீங்கும் புரியவில்லை. நூற்றுக்கணக்கான பெண்கள் கூட்டம் கூட்டமாய் “நம் கணவர் நெருப்பில் அழிந்தார்கள், நாம் ஏன் வாழ்கிறோம்?” என்று ஏங்கி அஞ்சி நடுங்கி ஒருவர் பின் ஒருவராய்த் தெருவில் உருக்கரந்து போனார்கள். நடுப்பகலில் ஊர்மன்றத்தின் கூரையிலிருந்து கூகை கூவிக் கலங்கவைத்தது. இப்படிக் கெட்ட குறிகள் எல்லாம் சேர்ந்து தோன்றுமானால், இதை ‘உலகியல்’ ‘பிராணிகளின் வழக்கம்’ என்று பாராமுகமாக யிருப்பதற்கில்லை. இத்தீக்குறிகள் நாட்டுக்கு வரும் கேட்டுக்கு அறிகுறியாகத் தெய்வங்கள் முற்கூட்டிக் காட்டுவனவாகும்.

பிசிர: இது ஒரு விபரீத காலந்தான். ஒவ்வொருவரும் தாம் தாம் கண்ட முறையில் இதற்குப் பொருள் சொல்வார்கள்; ஒருவர் சொல்லுக்கும் மற்றவர் சொல்லுக்கும் ஒற்றுமையே இராது; நடப்பு மற்றொரு முறையாக இருக்கும். சரி, வீரசிம்மன் நாளை நம் நகர் மன்றுக்கு வருகிறாரோ?

கீச: வருகிறார். தமது வருகைபற்றி உமக்கு அறிவிக்குமாறு ஆநந்தரிடமும் உரைத்திருக்கிறாரே!

பிசிர: அவ்வாறாயின் நன்று, நன்று! கீசக, வானம் இருக்கிற நிலையைப் பார்த்தால் யாரும் வெளியில் வரமுடியாதுபோல் தோன்றுகிறதே.

கீச: சரி, போய்வாரும். (பிசிரர் அகல்கிறார்; காசியர் வருகிறார்)

காசி: யார் அங்கு?

கீச: ஏன், ஒரு உரோமன்.

காசி: கீசகன்! குரல்தான் காட்டுகிறதே.

கீச: அப்பா! உம் காது மிகக்கூர்மை. காசியரே, ஏன் இன்று இரவு இப்படியிருக்கிறது?

காசி: நல்லவர், பெரிய மனிதர்களுக்கு ஏற்ற இரவு.

கீச: இப்படி மின்னலும் இடியும் வருமென யார் எதிர்பார்த்தார்!

காசி: உலகம் இப்படி வம்புந் தும்புமாய் நிரம்பியிருக்கும் எனத் தெரிந்தவர்கள் தாம்! என்னைப் பொறுத்த அளவில், வந்தது வரட்டும் எனத் தெருவெல்லாம் இந்த இருட்டில் சுற்றிவந்தேன். சட்டையால் மூடவும் இல்லை, இடி மின்னல்களை எல்லாம் இந்தத் திறந்த மார்போடு பார்த்து வந்தேன். வானத்தைப் பிளந்து மின்னல் கொடிவிட்டுப் பாய்கிறபோது என் பரந்த மார்பும் திறந்துதான் எதிர் நின்றது.

கீச: நீர் விண்ணை எதிர்த்து நிற்க என்ன அவசியம்? தெய்வங்கள் நமக்கு எச்சரிக்கையாகக் கொடுமைகளை விளக்கி நிற்கும்போது, அஞ்சி அடங்கியிருக்கவேண்டியதே நம் கடமையாகும்.

காசி: கீசகா, நீ உணர்ச்சியில்லாத கோழை. உரோமாபுரி மண்ணின் வீர எழுச்சி உன்னிடம் விளங்கவில்லை; உள்ளத்தில் அச்சம் அவலம், நடுக்கம் நிறையப்பெற்றாய்; வானம் குமுறுவது

கண்டு வியந்து, பதுங்குகின்றாய்! ஏன் இவ்வாறு நெருப்பு மயம்! ஏன் தெருக்களின் பேய்களின் நடமாட்டம்! ஏன் புள்ளினமும் விலங்கினமும் வழக்கத்துக்கு மாறாக வீதிகளில் உலாவுகின்றன! ஏன் முதியோர் மதி இழந்தனர்; இளைஞர்கள் தெளிவுற்றனர்! பூதங்கள் ஏன் நெறிபிறழ்ந்து இயற்கைக்கு மாறாகக் குமுறி நிற்கின்றன! நீதிநெறி தவறிய நாட்டுக்கு வரும் அழிவை அச்சுறுத்தி அறிவுறுத்தவே தேவர்கள் இவ்வாறு இயற்றுகிறார்கள் போலும்! இவற்றின் காரணத்தை நீ உணர்வாயோ? பாழ்த்த மின்னலைப்போலும் இடியைப்போலும் மக்களை வாட்டி வதைப்பவன், நாட்டுள் சிங்கம் போன்று கர்ச்சனை காட்டித்திரிபவன்; வினைத்திட்பத்தில் நின்னிலும் என்னிலும் எளியன், அற்பத்தில் பெருகியவன், இற்றைய இடி மின்னலைப்போல் கொடியவன் ஒருவன் நாட்டில் உளன் என்பதை நான் உனக்கு உரைக்கவேண்டுமோ?

கீச: யார்? வீரசிம்மனைக்குறித்தோ? ஏன், காசியரையே குறித்ததோ?

காசி: யாராயிருந்தால் என்ன. எல்லார் பாடும் ஐயோதான். இந்நாள் உரோமாபுரி மக்களின் உடம்பும் எலும்பும் பழைய உருவத்தில் இருக்கின்றன, உள்ளம் இடிந்து ஒழிந்தது. நம்மில் நம் தாய்மார் குணமே காணப்படுகிறது. நுகத்தடியால் அழுத்தப்பட்டு நாம் பெண்மை எய்தினோம்.

கீச: சரி, பெரியோர்கள் பலரும் சேர்ந்து நாளை வீரசிம்மனை அரசனாக்க எண்ணியுள்ளார்களாம்? இவ்வித்தாலிய நாட்டுக்கும் ஏனைய கடல் நிலவளாகம் யாவற்றுக்கும் இனி அவனே அரசனாவான்.

காசி: அவ்வாறாயின் காசியர் கைக்கட்கம் எங்கு நிற்கும் தெரியுமோ? தமது அடிமைத்தனையை அகற்றும் முறையை இவர் நன்கு அறிவார்! தெய்வதங்காள்! அடிமை விலங்கை அறுத்தெறிய ஆற்றல் அற்றதை ஆண்மை மிக்கதாய் ஆக்குகின்றீர்கள். வன்கணாளரை மண்மீது வீழ்த்துகின்றீர்கள்; மேலுயர்ந்த கோபுர அறைகளில் ஒதுக்கி வைப்பினும், காற்றும் உட்புகாத நிலவறைகளுட் கிடத்தினும்; கருங்கற்களை அடுக்கிச் செம்பிட்டுப் பிணைத்தபெரு மதில்களையுடைய கொடுஞ் சிறைகட்கு உட்படுத்தினும்சரி; கால்கள் இரண்டும் கடிய இரும்பு விலங்குகள் மாட்டப்பெற்றுத் தேய்ந்து புண்ணாகி இறப்பினும்; உணர்ச்சியை யாவராலும் அடக்கி ஒடுக்க முடியாது. அடக்க ஒடுக்கத்துள் இருப்பது ஆகாது என்று தோன்றுகிற அன்றே இவ்வுயிர் தன்னை மாய்த்து விடுதலைபெறும். என்னை

மாய்க்கும் வகையை யான் அறிவேன் : அந்நாளில் யான் அதனை மனம் உவந்து ஆற்றிநிற்பேன். அதனால் இப்பாரந்த உலகம் யான் உற்ற தீவினைகளைத் தானும் நன்கு உணர்ந்து தக்கமுறையில் ஒழுகுமாக.

கீச : அவ்வாறேயானும், அடிமைத்தளையில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தனக்கு விடுதலை தேட எந்த நேரத்திலும் கத்தியும் கையுமாகத் தயாராகவிருக்கின்றான்.

காசி : அவ்வாறாயின், வீரசிம்மன் வன்கணாளனாக விளங்குவதேன்? சரி, சரி. அவனைக் குறைசொல்வதற்கில்லை. ரோமாபுரிமக்கள் ஆடுகளைப்போல ஆண்மைகெட்டு நிற்கவே, அவன் ஓநாய்போல் உதறி நிற்கிறான். ரோமர்கள் மான்பிணையாகா முறையில், அவன் சிங்கம் எனச் சிறக்க முடியுமோ? நன்று! பெரு நெருப்புவேண்டியவர்கள் சிறு வைக்கோல் கொண்டே முதலில் மூட்டுகிறார்கள். இந்த ரோமாபுரி சுத்த அற்பமானது, வெறுங்குப்பை போன்றது, செத்தசவத்தை ஒத்தது! மிகக் கீழ்த்தரமான வீரசிம்மனை மலைமேலிட்ட விளக்காகத் தூக்கிச் சுமக்கின்றது; வகையறியாதது. ஆ, என் உள்ளக்கொதிப்பே, நான் யாரிடத்தில் இவற்றைச் சொல்லும்படி கொண்டுசேர்த்தாய்! அடிமை வாழ்வை விழைந்து பிடிக்கும் ஒருவனிடம் யான் இவ்வாறு பேச நேர்ந்ததே! இனி இதற்கெல்லாம் தக்கபதில் கூறவேண்டியவன் ஆவேன். வருவது வரட்டும்; ஊறுகளைப் பொருட்படுத்துபவன் யானல்லன்; போர்க்கோலத்துடனே இருக்கிறேன்!

கீச : நீர் கிசகனிடத்தில் பேசுகின்றீர் என்பதை மறந்தீர் போலும். கபவஞ்சகம், கோள், புறங்கூறுதல் கொள்ளா ஒருவன் இவன். கைமேலடித்துச் சொல்கிறேன் : நம்துன்பங்களைத் துடைக்க நாம் ஒரு கட்சி திரட்டுவோம். அதில் யாருக்கும் பின்னிடாமல் முன் அணியில் நின்று எத்துணையும்புரிய யான் தயார்.

காசி : கிசகா, நல்ல பக்கபலம் கிடைக்கப் பெற்றேன். நன்று, சிக்கலான பெருங்காரியங்களைச் செய்து சாதிக்க உரோம் நகரின் பெரியார் சிலரின் துணையைக்கோரியிருக்கிறேன். இந்நேரம் அவர்கள் பாம்பையன் அரங்கின் வாயிற்புறத்தில் எனக்காகக் காத்திருப்பார்கள். அச்சுறுத்தும் இவ்விரவுப்பொழுதில் தெருக்களில் சந்தடியில்லை, ஆள் நடமாட்டமும் இல்லை. வானத்தின் தோற்றமோ நாம் மேற்கொண்ட வினைபோன்றே சிவந்து கொடு மூர்க்கமாகக் கொந்தளித்து நிற்கின்றது.

கீச : யாரோ ஒருவன் விரைந்து வருகிறான் : சற்றே மறைந்து நில்லும்.

காசி : வருகிறவன் சின்னான் : அவன் நடைதான் சொல்கிறதே.
(சின்னான் வருகிறான்.)

எங்கே? இவ்வளவு விரைவாய்?

சின் : உம்மைப்பார்க்கவே தான். அவன் யாவன்? சிம்பனா?

காசி : இல்லை. கிசகன்; நமது வினைக்கு ஒரு பெருந்துணைவன். உன்னை எதிர்பார்த்து இத்துணை காலம்தாழ்த்தவேண்டியதாயிற்று.

சின் : நல்லதே; இவர் நம்மைச் சேர்ந்ததும் மிக நல்லதாயிற்று. இன்று இரவு என்ன இவ்வளவு கொடுமை? நம்மவர் சிலர் விபரீதமாக என்னென்னவோ கண்டார்களாம்!

காசி : சரி, நமக்கு நேரம் ஆகவில்லையா?

சின் : ஆமாம், ஆகிறது. ஆனால், பரதரையும் நம்முடைய கட்சியில் கொண்டால்தான் நன்றாயிருக்கும்.

காசி : சின்னான், அதைப்பற்றிய கவலையே வேண்டா. இந்தக் கடிதத்தை வேறு யாரும் அறியா முறையில் அவர் நாற்காலிமேல்வை. இதனை அவர் மனைக்குள் பலகணி வழியாய் ஓங்கி வீசு. இதை அந்தப் பழைய பரதர் சிலைமேல் அழுத்தமாய் ஒட்டு. இத்தனையும் செய்து முடித்து; பாம்பையன் அரங்கத்து முன்வாயில் பக்கத்தில்வா. நாங்களும் ஆங்கே இருக்கிறோம். சரி, துச்சவிரதர், துருபதனர் இவர்கள் இருவரும் அங்கு இருக்கிறார்களோ?

சின் : சிம்பரைத்தவிர யாவரும் அங்குத்தான். சிம்பர் உம்மைத் தேடி வீட்டிற்குச் சென்றிருக்கிறார். சரி, நான் சீக்கிரம் சென்று நீர் சொன்னவைகளை முடித்து வருகிறேன்.

காசி : அதை முடித்து, பாம்பையன் அரங்கத்துக்கு வந்துசேர்.
(சின்னான் அகல்கல்.)

காசி : கிசகா, விடியுமுன்னால் ஒரு காரியம் நடைபெற வேண்டும். நாம் இருவரும் இப்போதே பரதர் மனைக்குச் சென்று அவரைப் பார்க்கவேண்டும். அவர் முக்கால்பாகம் நம் சார்புதான்.

இன்னும் ஒருமுறை பார்த்துவிட்டோமானால் முழுவதும் நம்கட்சியி லிருப்பார்.

நீச: அவரோ நகர மக்களின் பெருமதிப்புக்கு உரியவராக விளங்குகிறார். நாம் புரி கொடுவினைகளுக்கு அவர் துணைமட்டும் இருக்குமாயின் ரசவாதத்தால் இரும்பு பொன்னான முறைதான்; எல்லாம் புண்ணிய கைங்கரியமாகிவிடும்.

காசி: அவர் எப்படி, அவர் பெருமை, அவர் உதவியின் அவசியம் எல்லாம் நன்கு தெரிந்திருக்கிறாய். சரி, வா. போவோம். நேரம் நள்ளிராவுக்கு மேலாகிறது: விடியுமுன் அவரை எழுப்பி நம் கட்சியில் சேர்த்தே தீரவேண்டும். (அகல்கிறார்கள்.)

களம் 2. காட்சி 1.

(வீட்டுத்தோட்டம்.)

பரதர்: ஏ, உலூகன், என்ன! வெள்ளியைப்பார்த்துப் பொழுது விடிவதைச் சொல்வதற்கில்லை. என்ன சுகமாகத் தூங்குகிறான்! நமக்கு இப்படித் தூக்கம் கிடைக்கிறதில்லையே? உலூகா, எழு எழு. சீக்கிரம்.

உலூ: (எழுந்து வந்து) ஐயா என்னை அழைத்தீர்களோ?

பர: நான் படிக்கிற விளக்கை ஏற்று. ஏற்றி முடிந்ததும் வந்து சொல்.

உலூ: அப்படியே. (அகல்கிறான்.)

பர: அவனைக்கொன்று முடிவுகட்ட வேண்டியதுதான். தனித்த முறையில் நமக்கும் அவனுக்கும் ஒரு பகையுமில்லை: ஆனால் நாட்டு நலத்தைக் கருதி அதைச் செய்யவேண்டியதுதான். அவனோ முடி மன்னன் ஆக விழைகின்றான்; அது அவனை எத்துணை மாற்றிவிடும் என்பதே ஒரு பெரிய யோசனை! கதிரவன்ஒளி கருநாகத்தைப் பிறப் பித்து மக்கள் வாழ்வை இன்னலுக்குள்ளாக்குகிறது: அவன் முடி புனைவதும் அஃதேயாம்! தேளுக்குக் கொடுக்கு முளைத்த முறைதான். நினைத்தபொழுதெல்லாம் கொட்டிக்கொண்டே யிருப்பான். பொறுமை யற்ற ஒருவன் பொறுப்பேற்பானாயின், அவன் அறநெறி திறம்புதல் உறுதியாம்: இன்னும் சொல்வேன்:—வீரசிம்மன் பயத்தினாலன்றி நயத்தினால் மக்களை நெறிப்படுத்தியதை நான் என்றும் கண்டிலேன். பெரும்பேறுகளை வேட்குநர் பணிவு என்னும் ஏணியிற் கால்வைத்து ஏறுகின்றனர். கால்வைத்தபின் மேல் நோக்கியே செல்வர்; மேற் படியை அடைந்ததும் ஏணியை ஏறெடுத்தும் பாரார்; உதறித்தள்ளி உம்பர் அடைந்து மேல்நோக்கி நிற்கின்றார். வீரசிம்மன் செய்யப் போவதும் இஃதேதான்; இது நேராவண்ணம் தடுத்தல் நம் கடன். இன்று அவன் இருக்கின்ற நிலையில், பேசிப் பகையை எழுப்புவது ஆகாதகாரியம்: ஆதலின் ஒன்று கூறுவோம்:—அவனது பேராதிக்கப் பெருக்கு அவன் நம்மை வெல்லவும் கொல்லவும் தூண்டுவதாகும். இன்று அவன் நச்சரா ஈன்ற முட்டையாக இருக்கிறான்; நாளை வெளி வரும்குட்டிகள் நச்சரவமாகவே நாச முறுத்தும். ஆதலின் முட்டை யிலேயே அது கெட்டழிய வகை செயயவேண்டும்.

(உலூகன் வருகின்றான்.)

உலூ: ஐயா, விளக்கு ஏற்றியாயிற்று. பலகணிப்படியில் நெருப்புப் பெட்டியைத் தேடினேன்; இக்கடிதம் அதில் கிடந்தது. நான் படுக்கப் போகும்போது யாதும் அங்கில்லை; பின்னால் வந்திருக்கிறது. (கடிதத்தைக் கொடுக்கிறான்.)

பர: சரி, நீ போய் உறங்கு: இன்னும் நன்றாய் விடியவில்லை. அடே, நாளைக்குத்தானே மாசி மாதப் பௌர்ணமி?

உலூ: தெரியாது ஐயா.

பர: போய்ப் பஞ்சாங்கத்தைப் பார்த்து வந்துசொல்.

உலூ: ஆணை. (அகல்கிறான்.)

பர: வெள்ளி வெளிச்சமே போதும்போலும்: இங்கிருந்தே வாசிக்கலாம் (வாசிக்கிறார்) "பரதரே கண்விழியும், நீவிர் உறங்குகிறீர், விழித்து உம்மை உணரும். ரோமாபுரியின் கதி———முன்வாரும், வகை செய்யும்: பரதரே, உறங்குகிறீர் கண்விழியும்." பேரூர் இல்லாப் பாராட்டுக் கடிதம்: எத்தனையோ நித்தமும் வந்து விழுகின்றன. இவற்றைக் கவனிக்க நம்மால் முடியுமா? "ரோமாபுரியின் கதி———". ரோமாபுரியின் கதி ஒருவனது ஆட்சியில் அல்லலுற்று அழுந்தவே? என்றுதான் நான் அவ்விடத்தை நிரப்பவேண்டும். ரோமின் கதி? அராக்குணன தன்னை ரோமாபுரி அரசன் என்று அறிவித்த நாளில் அவனை அகற்றி அப்புறப்படுத்தியவர் எம்முன்னோர்கள் அல்லவா? "விழியும், முன்வாரும், வகைசெய்யும்." மக்கள் யான் முன்நின்று வழிநடாத்த வேண்டுகின்றனரா? "ரோமாபுரியே, உன்மீது ஆணையிட்டு உறுதி கூறுகிறேன்: நீ விடுதலை பெறும் வகைக்கே பரதரின் உழைப்பு எல்லாம்!" (உலூகன் வருகிறான்.)

உலூ: ஐயா, மாசியில் 15 நாட்கள் கழிந்து போயின.

பர: சரி, போகட்டும். யாரோ கதவைத் தட்டுகிறார்கள். போய்த்திற. (போகிறான்.)

காசியர் வீரசிம்மனுக்கு எதிராக ஒரு விதையைப் போட்டார்; அந்நாளிலிருந்து தூக்கமே இல்லை. பொல்லாத ஒன்றைச் செய்ய உள்ளம் எண்ணிவிட்டால், அதைச் செய்து முடிக்கும் வரை அங்கு அமைதியே கிடையாது. கனவும் கற்பனையுமாக அலைமேல் அலைதான்: என் இருப்பே இந்த உலகத்தில் இல்லை. உயிர் ஒரு கருத்தா: உடல் அதன் கருவி: இவை ஆழ்ந்த யோசனையில் ஊன்றி இவ்வூன் உலகில் பெரும்போர்களை எழுப்புகின்றன.

உலூ: ஐயா, தங்கள் அத்தான் காசியர் வந்திருக்கிறார். தங்களைப் பார்க்க வந்தார்களாம்.

பர: அவர் தனிமையாகவோ?

உலூ: இல்லை, இன்னும் சிலர் கூட இருக்கிறார்கள்?

பர: யாரென அறியாயோ?

உலூ: இல்லை. அவர்கள் தொப்பி காதுவரை மறைத்துக் கொண்டிருக்கிறது. முகத்தையும் பாதியளவுக்குத் துணி மூடியிருக்கிறது: அதனால் எந்த வகையிலும் இனம் அறிவதற்கில்லை.

பர: சரி, போய் வரச்சொல். (போகிறான்) சதிகாரர் கூட்டம். சரிதான். சதியே, புன்மைக்கு உறவான இருளிலும் உன் முகத்தைக் காட்ட நாணுகின்றாய். இவ்வாறாயின் பகலில் உனக்கு இடமெங்கே! நீ எங்கு மறைவாய்? வேற்றுரு நாடாய்; முறுவலும் இளக்கமும் உன்முகத் திரைகள்: சதியே, நீ செய்வதை உண்மையாய் வெளிக்காட்டும் இயல்புற்றாயாயின், பெரு நரகமும் உன் வழியைத் தடைசெய்யத்தக்க இருள் பெற்றிலதே! (காசியன், கீசகன், துச்சன், சின்னான், சிம்பர், துருபதனர் ஆகிய சதிகாரர் வருகின்றனர்.)

காசியர்: வணக்கம். ஓய்வு நேரத்தில் வந்து மிக்க ஊறு செய்கிறோம்.

பர. இல்லை. ஒருமணி நேரமாகத் தூக்கம் இன்றியே இருக்கிறேன். இவர்கள் யாவர் என யான் அறியலாமோ?

காசி: இவர்களில் தங்களுக்கு வேண்டாதார் யாரும் இலர். இவர்கள் யாவரும் தங்கள் நலத்தை விரும்புகிறவர்கள். தங்களைப் போற்றித் தங்களிற் பெருமிதங்கொள்பவர்கள்; இவர்தாம் துருபதனர்.

பர: வாருங்கள். இப்படி அமருங்கள்.

காசி: இவர்தாம் துச்சபாதர்.

பர: ஓ! மிக்க மகிழ்ச்சி.

காசி: இவர் கீசகர்; இவர் சின்னான்; இவர் சிம்பர்.

பர: யாவர் வரவுக்கும் நன்றி பாராட்டுகின்றேன். தூக்கத்தைக் கெடுத்து, இரவில் கண்விழித்து வரும்படி யாதுநேர்ந்ததோ?

காசி: சற்றே தனியாக ஒரு செய்தி.

(பரதர், காசியர் தனித்துப் பேசுதல்)

துச்சர்: இதுதான் கிழக்கு: பொழுது விடிகிறது: இல்லையா?

கீசகன்: இல்லை; விடியவில்லை.

சின்னான்: இல்லை, இல்லை. விடிந்துவிட்டது. வானத்தில் வெள்ளை கீறி வைகறையை அறிவிக்கிறதே.

கீச: இருவர் சொல்லும் தப்பு என்பதை நீங்களே உணர்வீர்கள். இந்த மாரிக்காலத்தில் கதிரவன் தோன்றும் இடம் அங்கு, தெற்கில். அது வடக்கு நோக்க இன்னும் இரண்டு மாதம் பிடிக்கும். அப்பொழுதுதான் அது நேர்கிழக்காய், நம் தலைநகருக்கு நேராக விடியும்.

பர: நீங்கள் ஒவ்வொருவரும் எனக்குக் கையுறுதி கொடுக்க வேண்டுகிறேன்.

காசி: எல்லாரும் ஆணையிட்டு உறுதி கூறுவோம்.

பர: ஆணை இட வேண்டா. நம்மக்களின் முகத்திலுள்ள அச்சம், நாட்டின் மறநெறிவீக்கம்; இவற்றைக் கண்டும் நம்மில் ஊக்கம் இல்லையாயின்,—கட்டில்கள் காலியாய்க்கிடக்கும்—நேரம் ஆகுமுன் அவரவர் மனையை யடைந்து சுகமாகப் படுத்துறங்கப் போகலாம். இந்தக் காலக்கொடுமை இவ்வாறு பெருகி, ஒவ்வொருவரையும் பற்றி, இறுதியில் யாவர் சீட்டும் கிழிக்கப்படும் என்பது மட்டும் உறுதி. இவ்வுண்மை உணர்ந்த கோழை நெஞ்சமும் அனல் உற்றுக் கொதிக்கும்; உருகு மனத்து மாதர் மடநெஞ்சும் உருக்கு எனத் திடமாகும்: என் நன்னாட்டீரே, அவ்வாறாயின் நீவிர் விடுதலைக்குரிய வகைகளைச் செய்ய முன்வராமல், வறிதே இருக்கக் காரணம் என்ன? யாரும் அறியாமல் கூடினோம், பேசினோம், இனி நாம் மாறோம். இந்நிலையில் ஆணை எதற்காக? நல்லவர்களாய்க் கூடி நாட்டுக்கு நல்லதைச் செய்து சாதிப்பது; இன்றேல் உயிரைவிடுவது என்று உறுதி கொண்ட இடத்தில் ஆணை எற்றுக்கு? குருக்கள், கோழைகள், ஐயுறவுடையோர், அக்கிரமத்தால் வாழ்வு நடாத்துநர், தளர்ந்த கிழங்கள் இவர்கட்கே உரியது ஆணை. இவர்களைப் பிறர் ஐயுறும்போது இவர்கள் ஆணையிட்டு உறுதி கூறுகிறார்கள். இதனை நாம் புரியின் நம்புண்ணிய காரியத்தைக் கறைப்படுத்தியதே ஆகும்! நம்மவர்களின் அடங்கா ஆர்வமிகுந்த ஊக்கத்தை ஆயவும், வினையாற்றவும் ஆணையிடுவது என்பது ஒரு களங்கமே ஆகும். தான் சொன்ன சொல்லுக்கு மாறாகத் திறம்பி நடக்கிற ரோமன் உடம்பில், பலர்க்குப் பிறந்த முறைகெட்ட இரத்தமே ஓடுவதாகத் திட்டமாய்க் கூறலாம்.

காசி: சரி. பிசிரர் கதை என்ன? அவரையும் சேர்த்துக் கொள்ளலாம்: நம் கட்சிக்கு அது இன்னும் அதிக பலம் அளிக்கும்.

கீச: ஆமாம். அவரை நீக்கிவிடக் கூடாது.

சின்னான்: நீக்கவா? நீக்கவேண்டா.

சிம்பர்: அவர் அவசியம் நம்மோடிருக்கவேண்டும். அவர் நரைமயிரால் மக்கள் ஆதரவு நமக்கு அதிகம் ஆகும். பிசிரரின் பழுத்த அனுபவத்தை நம் துணையாகக் கொண்டு நாம் வினையாற்றுவதாகக் கூறுவார்கள். அவருடைய அடக்கத்தில் நம்முடைய இளமைவேகம், மீச்செலவு எல்லாம் மறைந்து நல்லவைகளாகி நிற்கும்.

பர: ஆ! அவர் பெயரை எடுக்காதீர்கள். இந்தச் செய்தி யாதுமே அவருக்கு எட்டவேண்டா. அவர் பிறர் சொல்வதை ஏற்று நடப்பவரல்லர்.

காசி: அப்படியானால் அவரை விலக்கிவிடுவோம்.

கீச: உண்மையாய்; அவர் இதற்குத் தகுதி இல்லை.

துச்சன்: வீரசிம்மனைத் தவிர வேறு யார் மீதும் கைவைக்கலாகாது!

காசி: துச்ச, நன்று கூறினை! ஆநந்தர் வீரசிம்மனுக்கு மிக வேண்டியவர். ஆதலின் அவரைப் பிரிந்து இவர் வாழ்வது முறையாகுமோ? ஆநந்தர் முறையோடு எதனையும் நிறைவேற்ற வல்லவர் என்பதையும் நாம் அறிவோம். இன்று அவர் இருக்கிற நிலையுடன் இன்னும் ஆக்கம் எய்துவாராயின் நம் யாவரையும் அழிக்கத்தக்க ஆற்றலை அவர் அடைதல் திண்ணம். அத்தகைய நிலை ஏற்படாதிருக்க, ஆநந்தர் வீரசிம்மன் இருவர் வீழ்ச்சிக்கும் நாம் வழிகோலவேண்டும்.

பர: தலையைத் துணித்தபின், கால்வால்களையும் துண்டுசெய்து கொண்டிருப்பின் நம் செயல் மிகக் கறைபடிந்ததாகக் கருதப்படும்; மேலும் அது தலையைக் கொய்தபின் பகைமை சாதிப்பதாகக் காட்டும். ஆநந்தர் வீரசிம்மனுக்குற்ற ஒரு வால்! காசியரே, நாம் நாட்டின் நலங்கருதிச் செலுத்தும் திவ்ய பலியாக இதனைக் கருதவேண்டுமேயன்றி; வேட்டை நெறியிற் கொல்லும் உணர்ச்சி நமக்கு வேண்டா. வீரசிம்மனின் உட்கோளே நமக்குப் பகை. அந்த உட்கோளை அழிக்கிறோம். அதற்குக் குருதி சிந்த வேண்டா. ஆம். வீரசிம்மனின் ஊனுடலைப் பங்கப்படுத்தியே அவன் உட்கோளை அழிக்கவேண்டியிருக்கிறது, என் செய்ய! வீரசிம்மன் அதற்கு ஆளாகவேண்டியது

தான். அன்பர்களே, சிறிதளவு சினமும் இன்றி, மனத்துணிவுடன் வீரசிம்மனைக் கொல்லுவோம். வேட்டைநாய்க்கு ஊனைக்கொத்தும் முறையில் அல்ல, நாட்டிற்கு நலந்தரும் தேவதைக்குரிய துள்ளுமறியாக அவனை வீழ்த்துவோம்: கோழை முதலாளிகள் பணியாளரைத் தூண்டித் தீவினை புரிந்து, பின்னர் தாம் வருந்துவதாக நடிப்பதுபோல நாம் நம் உள்ளத்தை ஒருவழிச் செலுத்தி வினை ஆற்றிப் பின்னர் இரங்குவோம். இந்த முறையே இப்பொழுது நாம் கையாளவேண்டியதாகிறது. பகைமையாலன்று, அவசியத்தால் நேர்ந்ததென நாட்டினர் நமக்கு நற்பெயர் சூட்டுவார். புன்கொலையர் அல்லர்; நன்னிலையர் என்று நாம் பாராட்டுப் பெறுவோம். ஆநந்தரைப்பற்றி நீங்கள் கவலையே கொள்ளவேண்டா. வீரசிம்மன் வெட்டுண்டு உயிர் நீங்கிக் கிடக்கும்பொழுது, அவன் வால்மட்டும் நின்று என்ன சாதிக்கும்!

காசி: அவ்வாறு நினைப்பதற்கில்லை. வீரசிம்மனும் இவனும் இருக்கிற நிலையில்.........

பர: காசி, வேண்டா. ஆநந்தரைப்பற்றிய கவலையேவேண்டா. அவன் வீரசிம்மனுக்கு வேண்டியவனேயாயினும் அவனால் என்ன செய்ய முடியும்? சிம்மன் மறைவைக் குறித்து வருந்தி அவ்வருத்தத்தால் இவனும் உயிர் நீக்கலாம்: இவனுக்கு விளையாட்டு, கேளிக்கை, எத்தனையோ தொடர்புகள்! இந்நிலையில் நாம் எதிர்பார்க்கும் அள்வும் அவனிடம் காண்பது அரிதாகும்.

துரு: அவனைப்பற்றிய அச்சமே வேண்டியதில்லை. அவனைக் கொல்லவேண்டா. அவன் இதனையும் பார்த்துச் சிரிக்கக்கூடியவன்.

(கடிகாரம் மணி அடிக்கிறது.)

பர: மணி என்ன அடித்தது?

காசி: மூன்று அடித்திருக்கிறது.

துரு: சரி, நாம் விடைபெறலாமே?

காசி: வீரசிம்மன் இன்று அவைக்கு வருவான் என்பது ஐயப்பாடே. அவன் முன்னாட்களின் வாழ்க்கைக்கு முற்றும் முரணாக மறுமை, கனா, சகுனம் இவைகளைப்பற்றி ஆராய்ந்து ஒழுகுகிறான். என்றுமில்லா முறையில் நேற்று இரவு தோன்றிய முழக்கம், நிமித்திகரின் வாக்கு இவைகளை எண்ணி அவன் தலைநகருக்கு வாராதிருக்கலாம்.

துச்: வரமாட்டான் என்கிற ஐயப்பாடே வேண்டா. அவன் வாராதிருக்க நினைப்பினும் நான் அவனைக் கொண்டுவந்து சேர்க்கிறேன். அவனிடம் சென்று

ஒரு கோட்டு மாவை ஒரு மரத்தைச் சார்ந்தும்,
உரமிகுத்த கரடியைக் கண்ணாடி கொண்டும்,
கரங்கொண்ட யானைக்குக் குழிகள் தொட்டும்,
காட்டரசன் சிங்கத்தை வலைவிரித்தும்,
அறிவுடைய மக்களைநன் முகமன் கொண்டும்
அடக்கிவைக்க வகையறிந்தார்: ஆனால் இந்தப்
பெருமகனை வசமாக்க வகைதான் இல்லை
என்பேனேல் போதும், அந்தப் பேச்சில் வீழ்வான்.

அவன் புகழை வெறுக்கிறதாகக் கூறியபொழுதே 'ஆம்' என்று கூறி என் புகழுரையில் வீழ்ந்து விடுவான். அவனுக்கு இதமாகப் பேசித் தலைநகரில் அவனைக் கொண்டு சேர்ப்பது என் பொறுப்பு.

காசி: ஏன், நாம் யாவருமே சென்று அவனை அழைத்து வருவோம்?

பர: போகிறதாயின் எட்டுமணிக்கு முன்னால் போக வேண்டும்.

சின்: எட்டுமணிக்குப் பிந்திப் போகிறது பயனற்றது.

சிம்: நாம் யாவரும் இலாகிரியை மறந்துவிட்டோமே. அவன் பாம்பையனைப் பாராட்டியதை ஒரு குற்றமாகக்கொண்டு, வீரசிம்மன் தன்னைச் சினந்தான் என்று, இப்போது வீரசிம்மன் மீது ஓரே சீற்றமாக இருக்கிறான்.

பர: சிம்பர், நேரே அவன் மனைக்குச் சென்று அவனை இங்கு அழைத்து வாரும், நான் சொன்னதாகச் சொல்லும்; அவன் உடனே வருவான். பிறகு நான் அவனைச் சரிப்படுத்திக் கொள்கிறேன்.

காசி: பொழுது புலர்கிறது. நாங்கள் போய் வருகிறோம். அன்பர்களே, யாவரும் அவரவர் இடங்களுக்குச் செல்வோம். சொன்னது மட்டும் நினைவிலிருக்கட்டும். அதனைச் செயலில் ஆற்றி ரோமாபுரி மக்கள் என விளக்கி நிற்கவேண்டும்.

பர: அன்பர்களே, பூத்த முகத்தினராக இன்புற்றிருங்கள். நம்மை எவரும் ஐயுறும்படி காட்டிக்கொள்ளாதீர்கள். நம் ஊர் நடிகர்களைப்போல் தளரா ஊக்கமும், பெருமித தோற்றமும் காட்டிநிற்பீர்களாக. யாவர்க்கும் நன்றி. (பிற யாவரும் அகல்தல்)

பர: உலூகன், அடே உலூகன், இன்னும் தூக்கமா? சரி. களைப்பினால் மெய்மறந்து சுகமாக உறங்குகிறான். சரி, உறங்கு. உள் அமைதியில்லை என்றால் உறக்கத்தில் கனவும் காட்சிகளும்! உனக்கு அவை நேர வழியில்லை; நீ சுகமாக உறங்கு.

(ஊர்வசி வருகிறாள்.)

ஊர்வசி: தேவா,

பர: ஊர்வசி, ஏன் இந்நேரத்தில் எழுந்து வந்தனை? பனிக்குள் இவ்வாறு நீ வரலாமோ? உன் உடல் நலத்துக்கு இது ஒத்து வருமோ?

ஊர்: தங்களுக்குந்தான் ஒத்துக் கொள்ளாது. ஆமாம், படுத்திருந்தவர்கள் என்னைத் தனியாய் விட்டு, ஏன் மெதுவாக எழுந்து வந்தீர்கள்? நேற்று இரவு சாப்பிடும் போதும் திடீர் என எழுந்து உலாவி நின்றீர்கள், ஏதேதோ யோசனை, பெரு மூச்சுகளுடன் கைகளைப் பிணைத்து நின்றீர்கள். நான் 'என்ன காரியம்' என்று கேட்டேன். தாங்கள் சற்று முரணுற்றுப் பார்த்தீர்கள். நான் மறுபடியும் கேட்டேன். தாங்கள் தலையை ஒரு திருப்புத் திருப்பி என்றுமில்லாத முறையில் பொறுமையை இழந்தவராய்த் தரையில் உதைத்து நின்றீர்கள். நான் மறுபடியும் கேட்டேன். நீங்கள் முகத்திற் சினங் காட்டி, மறுமொழி கூறாமல் கைக்குறியால் சும்மா இருக்கச் சொன்னீர்கள். இன்னும் கேட்டால் சினம் மேலும் மீறும் என எண்ணியானும் வறிதே இருந்தேன். 'ஏதோ மனத்திற்கு நன்றாயில்லை போலும்; இது யாவர்க்கும் சிற்சில சமயம் நேர்வதுதானே' என்று கருதினேன். இப்பொழுது தாங்கள் சரியாக உண்பதில்லை, உறங்குவதில்லை, உரையாடுவதில்லை. உள்ளக்கவலை இவ்வாறு உடலுக்கு ஊறு செய்யுமானால் அதைப்பற்றி யான் அறியலாகாதோ? அது எதுவோ? தங்கள் கவலையின் காரணத்தை யான் அறிய நவிலுங்கள்.

பர: எனக்கு உடல் நலமில்லை: அவ்வளவுதான்.

ஊர்: தாங்கள் எல்லாம் கற்றவர்கள். உடல் நலம் குன்றியதாயின், நலம்பெற உடனே வகைசெய்து கொள்ளலாமே.

பர: செய்து கொண்டுதான் இருக்கிறேன். ஊர்வசி, நீ உன் படுக்கைக்குப்போ.

ஊர்: உடல் நலமில்லையா? உடல் நலமில்லாதவர்கள் திறந்த மார்பினராய் வைகறைப்பனியில் உறைவது நலந்தரும் போலும்! உடல் நலமில்லையானால், சுகபோகமாய்த் தூங்கிக்கொண்டிருந்தவர்கள்

ஏன் கள்ளமுறையில் எழுந்து பொல்லாப் பனிக்குளிரில் நனைந்து; இருக்கிற நோயைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்? தேவா, தாங்கள் ஏதோ மனத்திற் கவலைகொண்டுள்ளீர்கள். வாழ்க்கைத்துணை முறையில் அதனை அறிய யான் உரிமை உடையவள்தானே! ஒரு காலத்தில் தாங்கள் போற்றிப்புகழ்ந்த என்பேரழகு, காதற் பருவத்தில் உரைத்த உறுதி மொழிகள், இருவரும் ஒருவர் என உருப்படுத்திய திருமண நன்னாளில் மொழிந்த வாக்குத்தத்தங்கள்; இவை யாவற்றையும் முன்னிட்டு—தங்களுக்கே உரியவள், ஏன்? தாங்களாக, தங்களிற் பாதியாக இருக்கும் எனக்கு இக்கவலையின் காரணத்தை அறிவிக்க வேண்டிக் கொள்கிறேன். இன்று இருளில், தங்கள் முகங்களை மறைத்தவர்களாய் அறுவரோ, எழுவரோ தங்களுடன் பேச வந்தார்களே, அவர்கள் யாவர்? (முழங்காலில் நிற்கிறாள்.)

பர: இக்கேள்வி, முறையீடுகள் யாதும் வேண்டா.

ஊர்: தாங்கள் முறையோடிருந்தால் நான் ஏன் கேட்கிறேன். தங்களுக்குரிய மறைபொருளை அறிவதற்கு யான் உரியவளல்லள் என நமது திருமண உடன்படிக்கையில் ஏதேனும் விலக்கு உண்டோ? உண்ணல், உறங்கல், உரையாடல் போன்ற சில குறிப்பிட்ட சமயங்களில்தான் யான் தங்களுக்கு உரியளோ? அவ்வாறாயின் என் வாழ்க்கை புறம்போக்கு நிலமோ? ஊர்வசி தங்களின் தாலிகட்டி வாழ்பவள்; கூலிக்கு ஒட்டி உறைபவளல்லள்.

பர: ஊர்வசி, நீயே பெருநெறி வழுவா என் அருமை மனைவி; என் இருதயத்தில் ஓடிநிற்கும் தூய செங்குருதி!

ஊர்: இஃது உண்மையாயின், அம்மறை பொருளை யான் அறியலாம் அன்றோ? நான் ஒரு பெண்பால்; பெருமகன் பரதரால் மனைவியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பெண்பால். கற்பின் அணிகலம்; கார்த்த வீரியன் மகள் எனத்திகழ்ந்த ஒரு மடந்தை. பிறந்த இடத்தாலும், புகுந்த இடத்தாலும் சிறந்து நிற்பினும் பெண்ணைப் பெண் என்றே தாங்கள் கருதவேண்டும். தங்களின் மறைபொருளை அறிவியுங்கள்; அடியாள் யாருக்கும் அறிவிக்கமாட்டேன். இதோ துடையில் யானே ஒரு புண் உண்டாக்கி என் பொறுமையின் திறனை விளக்கி யிருக்கிறேன். அதனைப் பொறுத்துநின்ற யான் என் நாயகரின் ரகசியத்தைப் பொறுத்து நிற்க மாட்டேனா?

பர: தெய்வமே, என்னை இக்கற்பின் செல்விக்கேற்ற உத்தம கணவனாக்கிவை. (கதவுதட்டிக் கேட்கிறது.)

அதோ யாரோ கதவைத் தட்டுகிறார்கள்; ஊர்வசி, சற்றே உள்ளே செல். சீக்கிரம் வந்து இவ்வுள்ளத்து மறைபொருளை அவ்வுள்ளமும் உணரச் செய்கிறேன். என் முகத்தில் எழுதப்பட்டிருப்பதை, என் காரியம் யாவற்றையும் நான் உனக்கு அறிவிக்கிறேன். நீ உடனே உள்ளேபோ. (ஊர்வசி அகல்கிறாள்.) உலூகா, கதவைத் தட்டுகிறது யார்?

(உலூகன் இலாகிரி இருவரும் வருதல்.)

உலூ: இந்த நோய்ப்பட்ட மனிதன் தங்களைக் கண்டு பேச வந்திருக்கிறார்.

பர: சிம்பர் கூறிய இலாகிரியோ தாங்கள்? பையா, நீ சற்றே அப்பால் போ; இலாகிரி, காரியங்கள் எப்படி?

இலா: பேசப் பலம் இல்லை. வணக்கம் அறிவிக்கிறேன்.

பர: இலாகிரியார் எத்துணைகாலமாய் இவ்வாறு தலையில் துணியைக்கட்டியவண்ணமாயிருக்கிறீர்கள்! இன்னும் சுகமானபாடில்லையா?

இலா: பரதர் பெருமானுக்குப் பெருமைதரக் கூடிய காரியம் யாதும் செய்யவேண்டியதாயின், இந்த நோயெல்லாம் கொடியிற் பறந்துபோகும்.

பர: அத்தகைய காரியம் கைமேல் ஒன்று வைத்திருக்கிறேன். அதனைச் செவியேற்க இப்பொழுது வசதியிருக்குமோ?

இலா: நாம் தலைமுறை தலைமுறையாக வணங்குகிற சகல தெய்வங்களும் சாட்சியாகக் கூறுகிறேன்: இதோ நோயெல்லாம் மாயமாய் மறைந்தன. ரோமாபுரியின் உயிர் நாடியே, பெருஞ்சிங்கங்கள் பெற்ற, திறல்படைத்த தவப்புதல்வரே, தாங்கள், செத்துக் கிடந்த எனது ஆவிக்குப் புத்துயிர் அளித்தீர்கள். பெருமானே, 'ஓடு' என்று நீர் ஒரு வார்த்தை உரைத்தால், ஊறுகளை எல்லாம் கடந்து முன் அணியில் ஓடி நிற்பேன். தங்களுக்கு இப்போது ஆகவேண்டியது யாதோ?

பர: நோய் வாய்ப்பட்ட மக்கள் குணமாவதற்கு வேண்டிய ஒரு காரியம்.

இலா: குணமாயிருக்கிறவர்களிலும் சிலர் பிணமாக வேண்டுமே?

பர: ஆம். அஃதும் நாம் ஆற்ற வேண்டியதே. யாரை அவ்வாறு ஆக்குவது என்பதுபற்றி நாளடைவில் அறிவிக்கிறேன்.

இலா: நல்லது. துணிந்தாயிற்று. என்ன ஆயினும் சரியே. பரதர் முன் நின்று வழிநடத்தும்போது, வேறு என்ன சொல்ல வேண்டியிருக்கிறது! யாதுஆயினும் செய்து நிற்பேன்.

பர: சரி, என் பின்னால் வா.

களம் 2. காட்சி 2.

இடம்:—மனைக்கூடம். (இடி மின்னல்கள். வீரசிம்மன் அந்தி ஆடையுடன் தோன்றுகிறான்.)

வீர: என்றுமே இல்லாதவாறு இன்று இடிமுழக்கமும் மின்னல்களும் ஆரவாரித்து நிற்கின்றன. மண்ணும், விண்ணும் யாண்டும் ஒரே குழப்பம்! அதுமட்டுமோ? என் அருமை மனைவி கலாபூரணி இரவு தனது உறக்கத்தில் பிதற்றுகிறாள்: எவ்வாறு? "ஐயோ, என் நாயகரைக் கொல்கின்றார்களே, ஐயோ, நான் என் செய்வேன்" என, மும்முறை கூறினாள். யார் அங்கு?

ஊழியன்: அடியேன்,

வீர: நீ அதி விரைவாக ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டுக்குரிய ஏற்பாடுகளை எல்லாம் உடனே செய். 'வெற்றி யாருக்கு உரியது? அது நம்மைச் சாருமோ?' என்பதையும் அர்ச்சகர்களிடத்தில் கேட்டு அறிந்துவா.

ஊழி: அவ்வாறே, தேவா.

கலாபூரணி: தேவா, தாங்கள் வெளிக் கிளம்பினீர்கள் போலும்: எங்குச் செல்கின்றீர்கள்? தாங்கள் இன்று ஒரு பக்கமும் செல்ல வேண்டா.

வீர: "ஒரு பக்கமும் செல்லவேண்டா." ! செல்லுவான் வீரசிம்மன். பெண்ணே, தீங்கு என உருவானவை என் முதுகை நோக்குமேயன்றி முகத்தை நோக்கி நிற்க ஆற்றுமோ? தீங்கெல்லாம் என்னைக்கண்டால் தீர்ந்து ஒழியும் என்பதை நீ மறந்தனையோ?

கலா: இல்லை. தேவா, தாங்கள் வல்லவரே; ஆயினும் என் மனத்திலுள்ள கலக்கம் தங்களை அவ்வாறு தடுத்து நிற்கின்றது. நான் கண்டவை, கேட்டவை யாவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒன்று

என்னுள் நின்று என்னை உந்துகிறது: எனக்கு ஏதோ உரைக்கின்றது; விபரீதமாக ஏதேதோ என் உணர்வில் காட்டி நிற்கின்றது. பெண்சிங்கம் தெருவில் குட்டியை ஈன்று நிற்கின்றது: நகர்ப்புறத்து இடுகாட்டிலுள்ள கல்லறைகள் பிளந்து உள்ளடங்கிய சவங்கள் எழுந்து கூத்தாடுகின்றன: அவை மேல்நோக்கிச் சென்று விண்ணுடு அடைந்து ஆங்குத் தனித்தனித் தொகுதியாகப் போரணிவகுத்துப் போர்புரிகின்றன. அவைகளின் குருதி மாரியாக நம் தலைநகர் மீது பொழிகிறது. எட்டுத் திக்குகளும் அதிர்கின்றன. நிலப்பரப்பு எங்கும் குலுங்குகின்றது. பிணங்களும் பேய்களும் கூடிக் கொக்கரித்து ஆடுகின்றன. குதிரைகள் தெருக்களில் கனைத்துத் திரிகின்றன. என்றுமில்லா முறையில் தோன்றிய இத்தீய காட்சிகளை உன்ன உன்ன என் நெஞ்சம் அஞ்சுகிறது, தேவா.

வீர: அஞ்சுவது ஏன்? பெண்ணே! ஆண்டவன் விதித்த முறையில், நடக்க வேண்டியது நடந்தே தீரும். அவன் நடத்துவதை யாவரே தடுத்து நிறுத்த முடியும்? யாவினும் பெரியது ஊழ். நன்று! வீரசிம்மன் வெளிச் செல்கின்றேன். உனக்கு ஏன் அச்சம்? நீ கூறிய யாவும் எனக்குமட்டுமோ, உலகத்து யாவருக்குமே உரியவை அன்றோ?

கலா: உலகத்தை ஆளும் மன்னர்களின் மறைவுகளைத்தான் தூமகேதுக்கள் தோன்றி அறிவிக்கின்றன. பொதுமக்களின் துன்பம் இறப்புகளை அறிவிக்க அவை உதிப்பவல்ல.

வீர: பெண்ணே, தாம் சாகும் முன்னர் பன்முறை இறந்து பன்முறை பிறப்பர் கோழைகள். பெருவீரன் சாவது ஓரே முறை தான்: பிறப்பும் இறப்பும் அவனுக்குப் பலப்பல அல்ல. மேலும், ஏனோ சாவுக்கு அஞ்சுவது? அஃது வரவேண்டிய காலத்தில் வந்தே தீர்வது; நல்ல ஓய்வுதந்து உத்தம நண்பனாக உதவுவது; இத்துணை அரிய ஒன்றினை எண்ணி மக்கள் அஞ்சுவதை நினைக்க—அது எனக்குப் பெருவியப்பாக இருக்கிறது. (ஊழியன் வருகிறான்.)

வீர: கோயில் குருக்கள் யாது கூறினர்?

ஊழி: தேவா, தாங்கள் வெளிச்செல்லாது மனையகத்தில் இருப்பதே நல்லது என அவர்கள் அறிவித்தார்கள். தேவாலயத்திற் பலி செலுத்தி, அதன் குடலை ஈர்த்து உள்நோக்க; ஆங்கு அப்பலி விலங்கு இருதயம் இல்லாதிருக்கக் கண்டனர்: அதனால் கலங்கினர்.

வீர: கோழைகளாக வாழ்வாருக்கு இருதயம் கிடையாது என்று கடவுள் உலகுக்கு அறிவிக்கிறார் போலும்! இவ் வீரசிம்மனும் இன்று வெளிச் செல்லாமல் வீட்டுள் அடைபட்டிருப்பானாயின், நெஞ்சு உரம் இல்லா விலங்கே ஆவான். ஆமாம்! வீரசிம்மன் இங்குத் தங்காமல் உடனே வெளிச் செல்வான். தீங்குக்குத் தீங்கு செய்யும் ஆற்றல் படைத்தவன் வீரசிம்மன்! தீங்கு, சிம்மன் ஆகிய நாங்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த இரட்டைப் பிள்ளைகள். இருவரில் யானே மூத்தவன், ஆற்றல் மிக்கவன், ஆண்மை உடையவன்: ஆதலின் யான் வெளிச்செல்வேன்.

கலா: ஐயனே, தங்களின் ஆக்கம் அறிவை மறைத்துள்ளது. ஒன்று, தங்களை வேண்டுகின்றேன்: இன்று தாங்கள் வெளிச்செல்ல வேண்டா. தாங்கள் அஞ்சுகிறீர்கள் என்றல்ல; தங்களையே நம்பி வாழும் அடியாள் அஞ்சுகின்ற காரணத்தால். இதனைத் தாங்கள் சிறிது சிந்தனைசெய்ய வேண்டுகின்றேன். அதோ ஆநந்தர் இருக்கிறார். அவரை அவைக்கு அனுப்பித் தாங்கள் உடல் நலமில்லாதிருப்பதாக அறிவியுங்கள். தங்களின் இருபாதங்களையும் பற்றி வேண்டுகின்றேன்: அவரையே அனுப்பி ஏற்பாடு செய்யுங்கள்.

வீர: வீரசிம்மன் 'நலமிலாதிருக்கிறான்' என்று பொய் உரை அனுப்ப!....... உன் சொற்கு இணங்கி யான் வீட்டுள் சிறைப்பட்டிருந்து அங்கு ஓர் பொய் அனுப்ப! — அதோ பரதர் வருகிறார். அவர் மூலம் யான் அவையினருக்குச் செய்தி அனுப்புதல் சாலும்.

(துச்ச பரதர் வருகிறார்.)

துச்சர்: போற்றி, போற்றி; பெருந்தகாய், போற்றி. நும்மை மன் அவைக்கு அழைக்கவே யான் ஈண்டு வந்தேன்.

வீர: துச்ச, வந்தது மிக நன்றாயிற்று. நீ அரசசபைக்குச் சென்று, ஆங்குற்ற பெரியாருக்கு என் ஆசி நவின்று, ஆங்கு யான் இன்று வருவதற்கில்லை என்றும் அறிவித்தல் வேண்டும். யான் 'வர முடியாது' எனின் அது பொய்; ஆதலின் "வருவதற்கில்லை" என்றே அறிவிப்பாய்.

கலா: அவர்கட்கு உடல் நலமில்லை என்று அறிவி.

வீர: ஓ! வீரசிம்மன் பொய்யுரை புகல்வதும் உண்டோ? உலகம் முழுவதையும் வென்று தன் அடிக்குள் அடக்க ஆற்றல் படைத்த வீரசிம்மன் — அரசசபையில் அமர்ந்திருக்கும் எய்த்து நரைத்த கிழங்களிடம் ஏன் பொய் உரை பகரவேண்டும்? உண்

மையை உரைக்க அச்சம் ஏன்? ஐய, நீ சென்று 'வீரசிம்மன் வருவதற்கில்லை' என்றே கூறு.

துச்சன்: ஒரு காரணமும் கூறாமல் 'வருவதற்கில்லை' என்று மட்டும் கூறி நின்றால், ஆங்குற்றோர் யாவரும் என் பேதைமையை எள்ளி நகையாடுவர். ஆதலின் நான் அவர்களுக்கு உரைக்க ஏதாவது ஒரு காரணம் அறிவித்தல் நன்று.

வீர: காரணம் அறிவித்தல்! யார்? யாருக்கு? இன்று இது நம்முடைய சித்தம்! ஆதலின் நீ விரைந்து சென்று யான் கூறியதை அறிவி. அவையினருக்கு அதுவே போதும்! ஆனால், நீ என் அன்பன் என்ற தனித்த முறையில் உன்னிடம் யான் இங்கு உற்ற சிலவற்றை அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இரவு தூக்கத்தில் என் கலாபூரணி பல தீய கனவுகள் கண்டனள்; அவள் "நீர் போகவேண்டா" என என்னைத் தடுத்து நிற்கிறாள். கனவையும் கூறுகிறேன்: என் சிலை ஊறுபட்டதாகவும், அதில் பல உடைவுகள் தோன்றி அவற்றிலிருந்து குருதி பீறிட்டதாகவும், நகரத்தின் மக்கள் கூடிக் களித்துத் தங்கள் கைகளை ரத்தத்தில் தோய்த்துக் களித்ததாகவும், அதனால் எனக்கு யாதேனும் இடையூறு நேரும் என்றும் கூறுகிறாள். என் இரு பாதங்களிலும் பணிந்து நின்று 'ஐயா நீர் போகவேண்டா' என்று இறைஞ்சினாள். அதனால் யான் இன்று மனையில் தங்கியுள்ளேன்.

துச்: கனாப்பலன் அறியத் திறனில்லார் கூற்று இது. இக்கனா நமக்கு நன்மை பிறப்பதையே அறிவிக்கின்றது. தங்கள் சிலையிலிருந்து குருதிதோன்ற, அதில் மக்கள் கைதோய்த்துக் களித்து நிற்பது தங்களின் ஊழியத்தால், உண்மை உழைப்பால், வீர உணர்ச்சியால் இந்நாட்டுமக்கள் புத்துணர்வு பெற்று நற்குடிகள் ஆவர் என அறிவிக்கின்றது.

வீர: இதற்கு இப்படி உனது விளக்கம் போலும்!

துச்: ஆம். யான் கூறியவற்றைத் தாங்கள் கேட்டீர்கள். இன்னும் சொல்கிறேன்: இன்று நம் மன்னவையில் தங்களுக்கு ஒரு பொன்முடி சூட்டிக் களிக்க யாவரும் தீர்மானித்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு அரிய சந்தர்ப்பத்தில் தாங்கள் வாராதிருந்துவிடின், "வருவதற்கில்லை" என்று வார்த்தை அனுப்பின் அது அவர்கட்கு ஒரு பெரிய முன்றகேடாகத் தோன்றலாம்; அவர்கள் மனம் மாறுபடலாம். அது மட்டுமோ? "சபையைக் கலையுங்கள், அவரவர் இருப்பிடம் செல்லுங்கள், வீரசிம்மரின் மனைவி நற்கனவு

காணும் வரைச் சபை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது" என்று எள்ளி உரையாடுவர். 'வீரன் அஞ்சினான்' என்று தங்களுக்குள் பேசுவர். தங்களிடம் கொண்ட நட்பின் உரிமையால் இவற்றை எல்லாம் யான் இங்குக் கூறுகின்றேன். இதில் யாதேனும் பிழையிருப்பின் பொறுத்தருள்க: நான் என்றும் தங்கள் நட்புக் குரியவனாகக் கருதுக.

வீர: கலாபூரணீ, நீ கனாக்கண்டதும், அதற்குப் பலன் கொண்டதும், உள்ளம் அஞ்சியதும் யாவும் பொருள் அற்றவை. அதை நம்பி யானும் தடைப்பட்டு நின்றேன்! வெட்கம், வெட்கம்! எங்கே என் மேலாடைகள்? அவற்றை எடுத்துவா. யான் வெளிச் செல்லுதல் வேண்டும். அதோ, பெரும்புலியர் என்னை அழைக்க வருகிறார். (புலியர், பரதர், இலாகிரி, சிம்பர், கீசகன், துருபதனர், சின்னான் வருகின்றனர்.)

புலியர்: போற்றி. ஐய, போற்றி.

வீர: பெரும்புலியர் வரவு பெரு வரவு! பரதரே, வாருங்கள்! எவ்வாறு இந்நேரத்தில் எழுந்து விட்டீர்? கீசகரே, வருக; இலாகிரி, காயலில் மிகவும் மெலிந்து விட்டீர்களே. வீரசிம்மன் செய்யா வினைகள் எல்லாம், வியாதி தங்கள்பால் செய்துள்ளதே! சரி, மணி என்ன?

பர: எட்டு அடித்துவிட்டது.

வீர: எனக்காக இத்துணை இங்கு வந்து காத்திருந்த உங்கள் யாவருக்கும் மிக்க நன்றியுடையேன். (ஆநந்தர் வருகிறார்) அதோ ஆநந்தர் வருகின்றார். இரவை எல்லாம் பகலாக்கி வைக்கிற தாங்களும் இந்நேரத்தில்!—, நன்று நன்று!

ஆந: நன்றே என்றும் ஆகுக.

வீர: ஆநந்தரே, ஆகவேண்டிய யாவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்க. தங்களைத் தாமதிக்கவைத்த குற்றததுக்குள்ளானேன். சின்னான், சிம்பர், துருபதனர், தங்களிடம் யான் பேசவேண்டியது நிறைய இருக்கின்றது; தாங்களே வந்து இன்று என்னை அழைக்கின்றீர்கள்: ஆதலின் யாவரும் இன்று எப்பொழுதும் என் அருகாமையிலிருக்கவேண்டும்.

துருபதனர்: நான் இருக்கிறேன். (அயலில்) நான் அயலில் இருப்பதைக் கண்டு தங்கள் நேயர்கள் அழுக்காறு கொள்ளும் பு. றயில் அத்துணை அண்மி இருப்பேன்.

வீர: அன்பர்களே, வாருங்கள். நாம் சிறிது உணவு அருந்திப் பின் ஒன்றுபட்டவராகத் திரண்டு அவைக்குச் செல்லலாம்.

பர: ஒன்றுபட்டவராய் உரைத்தற்கில்லையே. ஆயிரமும் ஆயிரம் விதங்களாயிருப்பதாகவே உணருகிறேன்.

களம் 2. காட்சி 3.

இடம் :—தெரு (அரிய மேதையர் வாசிக்கிறார்.)

அரிய: வீரசிம்ம, பரதரைப் பார்வையிற் கொள்; காசியனிற் கவனம்வை; கீசகன் வாசனையே ஆகாது; சின்னான் மீது கண்ணுயிரு; துருபதனரை அருவெறுத் தகற்று; சிம்பரை நம்பாதே; துச்சன் கொச்சைப் புன்மகன்; இலாகிரி இன்னலுக்கு இலக்கானவன்; இவர்கள் யாவரும் ஒருவழியில் ஒன்றுபட்டார்கள்: அவ்வழி :—உனக்குத் தீவினை விளைப்பதே. மாந்தர் தெய்வமல்லர், மறையும் பொருள். ஆதலின் விழிப்புறு. செம்மாப்பு சதிக்கு வழிசெய்கிறது, தெய்வங்களே உனக்குத் துணைநின்று காக்கட்டும்.

நண்பர்

அரியமேதையர்.

யான், வீரசிம்மன் வரும்வரை இவ்விடத்தில் நின்று, ஏன் அவன் கையில் இதைக் கொடுக்கலாகாது? அழுக்காறெனும் பாவியின் பிடிப்பிலிருந்து அறமும் திருவும் உயிர்வாழ்வது அரிதே ஆகும். ஐயோ! வீரசிம்ம, இதனைக்கண்டு உயிர்வாழ்க; இன்றேல், விதியும் சதிகாரருடன் உறைந்து வினையாற்றும்.

களம் 2. காட்சி 4.

இடம் :—பரதர் மனைக்குமுன்.

ஊர்வசி: ஏ பையா, நேரே அரச சபைக்கு ஓடு, போய் விட்டாயா? ஒன்றும் கேளாதே. ஓடு, ஓடு. ஏன் இன்னும் நிற்கிறாய்?

உலூகன்: செய்தி என்ன என்று தெரிய வேண்டாவா? அம்மா,

ஊர்: அடே, நான் சொல்கிற நேரத்தில், நீ போய்த், திரும்பி வந்து விடலாமே. — உள்ளத்திலுறைவது நாவுக்கு வரா வண்ணம் கற்பே, நீயே வழியடைக்கும் கல்லாக நில். பெண்ணின் உருவமும் ஆண்மகனின் உள்ளமும் அமையப் பெற்றேன்! மாதர் மறைபொருள் பேண உரியரல்லர்—டே, நீ இன்னும் இங்குத்தானா நிற்கிறாய்?

உலூ: நான் நேரே ஓட வேண்டியது; வேறு ஒன்றும் இல்லையா? பிறகு திரும்பி வரவேண்டியது: இவ்வளவுதானா?

ஊர்: அடே, ஐயா இன்று புறப்படுங்காலை உடல் நலமில்லை; எப்படி இருக்கிறார் என்று கவனித்து வா. அதோடு வீரசிம்மன் என்ன செய்கிறார், எல்லாரும் எவ்வாறு அவனைச் சூழ்ந்து நிற்கிறார்கள் என்பதையும் பார்த்து வா. ஏ, அதென்ன சத்தம்?

உலூ: ஒரு சத்தமும் இல்லையே அம்மா?

ஊர்: நன்றாய்க் கவனி: அதோ தலைநகரிலிருந்து காற்று வாட்டத்தில் அமர்க்களமாய் இரைச்சல்.

உலூ: உண்மையாய், அம்மா! எனக்கு ஒரு சத்தமும் கேட்கிறதில்லை.

(குறிகாரன் வருகிறான்)

ஊர்: ஏ குறிகாரா, எங்கிருந்து வருகிறாய்?

குறி: அம்மா, வீட்டிலிருந்துதான் வருகிறேன்.

ஊர்: இப்போது மணி என்ன?

குறி: அம்மா, ஒன்பது இருக்கலாம்.

ஊர்: வீரசிம்மன் தலைநகர்க்குச் சென்று விட்டாரா?

குறி: அம்மா, இன்னும் இல்லை. வழியிலே நின்று அவரைப் பார்க்கலாம் என்றே அடியேன் போகிறேன்.

ஊர்: அவருக்கும் ஏதாவது குறி சொல்லப் போகிறாயா?

குறி: அடியேன் சொல்லுக்குச் செவிசாய்த்தால் அவருக்குந் தான் சொல்வேன். "உமக்கு உறுதியை நாடும்" என்று சொல்வேன்.

ஊர் : என்? அவர்க்கு ஏதேனும் ஊறு நேர்வதாக உண்டோ?

குறி : என்ன நேருமோ? எனக்குத் தெரியாது. ஆனால் ஏதே நேரும். அம்மா, நான் வருகிறேன்: இந்த இடம் மிக ஒடுக்கம். வீரசிம்மன் பின்னால் அவைமக்களும், ஆட்சிக்குழுவும், பொது மாந்தருமாக வருகிற கூட்டத்தில் நொந்தவர் உள் அகப்பட்டால் உயிர் துறந்து நிற்கவேண்டியதுதான். நான் எங்காவது ஒரு நல்ல இடம் பார்த்து நின்று, அவர் வரும்போது ஏதாவது அவருக்குச் சொல்கிறேன்.

ஊர் : சரி: நானும் போகிறேன். சீ, சீ! பெண்மை உள்ளம் மென்மையானது! நாயகா, தங்கள் கருமத்தில் வெற்றிபெறுவீர்களாக. ஐயோ, அந்தப்பையன் இதைக் கேட்டிருப்பானே. ஆ! மயக்கமாய் வருகிறதே. உலூகா, நீ ஓடிப்போய் ஐயாவிடத்தில் நான் மாராயங் கூறியதாகவும், மகிழ்ந்திருப்பதாகவும் சொல்லி, நேரே இங்கே வா. அவர்கள் சொல்கிறதை உடனேவந்து சொல்.

களம் 3. காட்சி 1.

(ரோமாபுரித் தலைநகர், வீதியில் மக்கள் கூட்டம். வீரசிம்மன், பரதர் காசியர், கீசகர், துச்சன், சிம்பர், துருபதனர், சின்னுன், ஆநந்தர், லோபியன், பாவியர், பெரும்புலியர் யாவரும் வருகின்றனர்.)

வீர : (நிமித்திகனைப் பார்த்து) மாசிப் பௌர்ணமி வந்துவிட்டது!

நிமித் : இன்னும் கழியவில்லை, அரசே.

அரியமேதையர் : வீரசிம்மர் வாழ்க! இக்கடிதத்தை வாசிக்க வேண்டுகிறேன்.

துச் : இக்கடிதத்தையும் ஓய்வு நேரத்தில் நன்கு பரிசிலனை செய்யச் சிம்பர் வேண்டுகிறார்.

அரிய : தேவர் என் கடிதத்தை முதலில் வாசிக்குமாறு வேண்டுகிறேன். இது தேவரைப்பற்றியது, ஆதலின் தாமதமின்றி வாசிக்க வேண்டுகிறேன்.

வீர : என்னைப்பற்றியது இறுதியில் கவனிக்கப்படலாம்.

அரிய : காலந்தாழ்த்தலின்றி வாசிக்க வேண்டுகின்றேன், தேவா.

வீர : என்ன, இவனுக்குப் பைத்தியமோ!

பெரும்புலியர் : ஐய, சற்றே இடம் தருக.

காசி : தெருவில் விண்ணப்பங்கள் செய்ய என்ன அவசரம்? தலைநகருக்கு வந்து காண்பீர்.

(வீரசிம்மன் அவைசேர்தல். யாவரும் எழுந்து அமர்கின்றனர்.)

பாவியர் : தங்கள் கருமம் இன்று நன்கு நிறைவேற வேண்டும்.

வீர : பாவியர், யாது கருமம்?

பாவி : தங்களுக்கு நன்மையே ஆகுக. (அருகில் நெருங்கல்)

பர : பாவியர், யாது கூறினர்?

காசி : அவர் 'நம் காரியம் நன்கு நிறைவேறட்டும்' என்றார். செய்தியை எங்கு ஒழுக்கி விடுவாரோ என அஞ்சுகிறேன்.

பர : அவன் வீரனை அண்டியதும் கவனிக்கத் தக்கதாகும். அவன் மீது எப்போதும் ஒரு கண் இருக்கட்டும்.

காசி: கீசகன், சீக்கிரம் நடந்தாகவேண்டும். காரியம் வெளியாகாமல் காப்பது அரிது. பரதரே, என்ன சொல்கிறீர். வெளியிலே செய்தி வந்துவிட்டால் காசி உயிர்வாழ்வதற் கில்லை; தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்: இல்லை, அவன் வாழ்வு அழிவுக்கு உள்ளாகும்.

பர: காசியர், உறுதிகொள்க. பாவியன் நம்செய்திபற்றிப் பேசமாட்டான்: அதோ கவனியும். அவன் சிரிக்கிறான்; வீரசிம்மன் முகத்தில் ஒரு மாறுபாடும் காணுதற்கில்லை.

காசி: எந்நேரத்தில், எப்படி, எதை என்பதைச் சிம்பர் நன்கு அறிவார். பரதர், அவர் தாம் ஆநந்தரை வெளி அழைத்துச் செல்லும் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறார்.

(ஆநந்தரும், சிம்பரும் அகல்கிறார்கள்)

துச்: சிம்பர் யாண்டுள்ளார்? அவர் தமது குறையிரந்து நிற்கலாமே.

பர: அதோ அவர் வருகிறார். நீங்களும் உடன் சென்று ஆதரவு காட்டுங்கள்.

சின்னன்: கீசக, நீர் தாம் முதல் முதல் கை தூக்க வேண்டியது.

வீர: யாவரும் சற்றே கவனிப்பீர்களாக. வீரசிம்மன், பேரவை முன் குறையிரந்து நிற்கவேண்டுவோர் இப்போதே கூறிக்கொள்வார்களாக.

சிம்பர்: அறிவு ஆற்றல் ஆண்மைமிக்க பெருந்தகையே, தங்கள் பேரவை முன்னர் சிம்பர் பணிந்து முறையிடுவது யாதெனின்,—

வீர: அஃது வேண்டா. முற்றும் ஒவ்வாத ஒன்று. உமது வணக்கமும் மரியாதையும் பணிவும் சாதாரண மக்களுக்கு மகிழ்ச்சியும் எழுச்சியும் தரலாம்: அவர்கள் அவற்றைக்கண்டு, முன் நியதி, முறைமைநெறி தவறிப் பிள்ளைமைகாட்டிப் பேதுறலாம். வீரசிம்மன் ஆண்மையை விளக்கும் ஆக்கமுறையில் அறந்திறம்புவான் எனக் கருதின், அஃது அறியாமையே ஆகும். பாராட்டு, பணிவு, இரவு, ஒடுக்கம் இவை இழிமக்களின் இயல்பு என்று உணர்க. அறங்கூறு அவையத்தாரால் உம் உடன்பிறந்தோன் நாடு கடத்தப்பட்டான். அவனுக்காக நீர் பணிந்து ஒடுங்கி இரந்து நிற்பீராயின், கேவலம்! ஒரு தெருப்பட்டி எனத் துச்சமாகக் கருதி உம்மையான் விலக்கு

வேன். வீரசிம்மன் காரணகாரியம் அறிந்தே வினையாற்றுவான்; அறந்திறம்பான்.

சிம்: என் உடன்பிறப்பின் மீட்சிபற்றி வீரசிம்மர் ஏற்குமாறு பேச, இப்பேரவையில் என்னினும் சிறந்தோர் யார் ஒருவரும் இலரோ?

பர: வீரசிம்ம, என்றும் உமக்கு வேண்டியவராய், புலியரை மீட்பது நமக்கு மிக்க நலந்தரும் என அறிவிக்கின்றேன்.

வீர: பரதரே, என்ன இது?

காசி: பெருந்தகையே, உமது அடிகளில் வீழ்ந்து பணிந்து, அப்பெரும் புலியர்க்கு மீட்சி அளிக்குமாறு வேண்டுகிறேன்.

வீர: நும்மைப் போன்றார் அதற்கு இணங்குவர், யான் இணங்கேன். குறை இரந்து அருள்பெறுபவரே குறைகேட்டு உருகிநிற்பர். யான் ஆயிரம் விண் மீன்களுக்கு இடையே அசையா நிலைபெற்ற ஒரு துருவமீன் போன்றவன். வானத்தில் ஆயிரக்கணக்கான மீன்கள் பரவி, அனல் உருவில் ஒளிர்கின்றன: ஆயினும் அவற்றுள் அசையா நிலைபெற்றது ஒன்றே. உலகமும் இதே நியதி கொண்டது: இது மனிதர்களால் நிரப்பப்பெற்றது. மனிதன் என்பு ஊன் குருதி அறிவு இவற்றால் ஆக்கப்பட்டவன். இம்மனிதர் குழுவில் ஆண்மைதாங்கி அசைவிலா நிலைபெற்ற வன்மையன் ஒருவனே. அவ்வொருவன் யானே. யான்கொண்ட வன்மையை விளக்க இதுவே தக்க இடம் என்பது என் எண்ணம். புலியரை நாடுகடத்தவேண்டும் என்பது ஆதியிலிருந்து யான் கொண்ட எண்ணம்; இனியும் அவ்வெண்ணம் மாறாது; நிலைக்கும் என்பது உறுதி.

சின்னன்: ஐயனே.

வீர: மேருவைப் பெயர்க்க வல்லீரோ?

துச்: ஆற்றல்மிக்க பெரியீர்!

வீர: துச்சரே, வீணே வேண்டுதல் வேண்டா.

கீச: கைகாள், கருமத்தை ஆற்றும். (கத்தியால் வீரசிம்மனைக் குத்த, அவன் தடுத்து நிற்க; பிறரும் வதைத்தல். பரதரும் இறுதியில் குத்துகிறார்.)

வீர: பரதர்! வீரசிம்மா, வீழ். வாழ்வு வேண்டா.

சின் : விடுதலை! விடுதலை! கொடுமையாவும் மடிந்தது! ஓடுங்கள், ஓடி ஊருக்கு அறிவியுங்கள்.

காசி : சிலர் பொது மன்றுக்குச் சென்று கூறுங்கள். விடுதலை விடுதலை, மக்கட்கு உரிமை என்று சத்தமிடுங்கள்.

பர : பெரியோர்களே, பொதுமக்களே, ஏன் ஓடுகிறீர்கள்? அஞ்சாதீர், அமைதியாயிருங்கள் : பேராசை பாழாக்கி விட்டது!

கீச : பரதரே, நீங்கள் மேடைமேல் ஏறுங்கள்.

துச் : காசியர், நீங்களும் ஏறுங்கள்.

பர : பெரும்புலியர் எங்கே?

சின் : இந்த அமளியில் ஒரே கலக்கமாய் இருக்கிறார்.

சிம் : யாவரும் ஒருங்கு கூடி நிற்போம். இன்றேல், வீரசிம்மனுக்கு வேண்டியவர் யாரேனும் வந்து —

பர : நிற்பது, எதிர்ப்பது ; அப்பேச்சு வேண்டா. புலியரே களிப்புறும். உமக்கேனும், ரோமாபுரி மக்களில் எவனுக்கேனும் — இனி எவ்வித ஊறும் ஏற்படாது. இதை ஏனையோருக்கும் ,எடுத்துச் சொல்லும்.

காசி : புலியரே, தாங்கள் போகலாம். இங்குச் சாடுகிற கூட்டம், இத்தள்ளாத வயதில் தங்கள் மீது விழுந்து நோகஅடித்து விடும்.

பர : ஆமாம். உடனே போங்கள். வினைப்பயன் வெளியாருக்கு ஏன்? செய்தவர்களையே சாரட்டும். (துருபதனர் வருகிறார்.)

காசி : ஆநந்தர் எங்கிருக்கிறார்?

துரு : ஆண் பெண், சிறியவர் பெரியவர், எல்லாம் ஒரே கூப்பாடு. அவர் தம்மைப்பேணி ஓட்டமாய் ஓடி வீடுபோய்ச் சேர்ந்துள்ளார். உலக அழிவுகாலம் போல எங்கும் ஒரே அலங்கோலம்!

பர : விதியே, நீ எங்களுக்கு என்ன வைத்திருக்கிறாய் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். காலம் வரும் ; அப்போது இறந்து தீர்வோம் என்பதையும் நன்கு அறிவோம். அது வரும்வரை இது போல் இழுப்பும் பறிப்புமாக நாட்களைக் கழித்து நிற்கிறோம்.

கீச : இருபது ஆண்டுகட்கு முன்னரே சாகிறவன் சாவுபற்றிய இருபதாண்டு அச்சத்தை ஒழித்தவன் ஆகிறான்!

பர : அவ்வாறு கொள்வோமாயின், இறப்பும் நலந்தருவதேயாம். இதனால் நாமும் வீரசிம்மனுக்கு உற்ற நண்பர்களாய், அவனுக்குரிய இருபதாண்டு அச்சத்தை அகற்றியவர்களாகிறோம். ரோமாபுரி அன்பர்களே, பணியுங்கள். நம் கரங்களை முழங்கைவரை வீரசிம்மன் குருதியில் தோய்த்து, நமது கத்திகளுக்கும் இரத்தக்கறை ஊட்டுவோமாக. இரத்தக் கத்திகளைத் தலைக்குமேலாகத் தூக்கி வீசிப் பொது மன்றங்கட்குச் சென்று, ‘அமைதி, விடுதலை, உரிமை’ என யாவரும் ஒருமித்துக் கத்துவோம்.

காசி : பணிந்து கையைத் தோயுங்கள். இப்பெருங்காட்சி இனி வருங்காலங்களிலும், இனித் தோன்றும் நாடுகளிலும், இன்று இல்லா மொழிகளிலும் என்றும் நடிக்கப்பட்டு அழியாநிலை எய்துமாக.

பர : இன்று பாம்பேயன் உருவச்சிலையின் அடியில் மண்ணோடு மண்ணாய்க் கிடக்கிற வீரசிம்மன் இன்னும் மேடைகளில் இரத்த வெள்ளத்தில் மீண்டும் மீண்டும் அமிழ வேண்டுமோ?

காசி : அதனால் நமது கூட்டம் நாட்டுக்குப் பெருவாழ்வு தந்த ஒன்றாக அடிக்கடி நற்பெயர் பெறுமன்றோ?

துச் : சரி, நாம் போகலாமே?

காசி : யாவரும் போகவேண்டியவர்களே. பரதர் முன் நடக்க, நாம் அவர் செல்வழிச் சென்று, உரோமாபுரியின் ஆண்மைதிகழ் வீரச் செல்வர்களாக விளங்கி நிற்போம். (ஊழியன் வருகிறான்.)

பர : இவன் யாவன்? ஆநந்தரின் கையாள் அல்லனோ?

ஊழியன் : ஐயா, பெரியீரே, இவ்வாறு யான் பணியுமாறு ஆநந்தர் கூறினார். கீழ் வீழ்ந்து வணங்கச் சொன்னார். பணிந்து நின்று ; “பெருமையும், அறிவும், வீரமும் உண்மையும் உடையவர் பரதர் ; உரமும் மூர்க்கமும், ஆண்மையும் ஆசையும் சேரப்பெற்றவன் வீரசிம்மன். பரதரை விரும்புகிறேன் : போற்றுகிறேன். வீரசிம்மனை அஞ்சினேன், போற்றினேன், பற்றினேன். வீரசிம்மன் வன்கொலை தக்கதே என்றும் ; இன்றும் ஆநந்தரை ஏற்று ஆதரிப்பதாக பரதர் உறுதி கூறினால் இறந்த வீரசிம்மனினும் இருக்கிற பரதரை ஆநந்தர் பெரிதும் பற்றி வாழ்வார் ; நெறி நீங்கிய இந்நாளில் பலகருமங்களிலும் இன்னல்களிலும் பெருமகன் பரதர்க்கு உறுதுணையாக உதவுவார் ; இது மாறாத உண்மை” என்றும் என் தலைவர் திரு ஆநந்தர் அறிவிக்கச் சொன்னார்.

பர: உன் தலைவர் உத்தம ரோமவீரர், பேரறிஞர். அவரைப் பற்றி யாம் குறைவாக எண்ணிய நாளே கிடையாது: இதனை அவருக்கு அறிவித்து, உள்ளத்தில் அமைதி காண்பரேல் இங்கு வரச்சொல். அவர் மனம் ஒப்புமாறு யாவும் நடைபெறும்: எத்தகைய ஊறுமின்றி அவர் மீள்வார் என்பதற்கு யாம் உறுதி கூறுகிறோம்.

ஊழி: சரி, இதோ போய் அழைத்து வருகிறேன். (அகல்தல்)

பர: இவன் நமக்கும் நண்பனாகவே இருப்பான் என்பது முன்னரே யான் நினைத்ததுதான்.

காசி: நண்பனாக இருக்கலாம். ஆனால் எனக்கு அவனைப்பற்றி ஒரு கலக்கம் இருக்கவே இருக்கிறது. அதை நினைக்க நினைக்க, என் புத்தியில் அது அதிகமே ஆகிறது.

(ஆநந்தர் வருகிறார்.)

பர: ஓ! ஆநந்தர் வருகிறார். வருக, ஆநந்தரே, வருக.

ஆந: ஆற்றல் சால் வீரசிம்ம, இக்கீழ்நிலையோ உமக்கு எய்தியது. பெற்ற வெற்றியும், பெரும்புகழும், உற்ற பொருளும், மற்ற உயர்வுகளும் இவ்வற்ப நிலையில் அழிந்தனவே. வாழி, வாழி! அவை அமர்ந்த பெரியோர்களே, உங்கள் நோக்கம் யாது என யான் அறிகிலேன். இன்னும் இங்கு எவர் குருதி கொட்டப்படுமோ, எவர் அந்நிலையில் இருக்கின்றாரோ, அதனையும் யான் அறியேன். ஒருகால், யானே அதற்கு உரியவனாயின் வீரசிம்மன் வீழ்ந்த நாழிகையில் வீழ்வதினும் வேறொரு சிறந்த வாய்ப்பு எனக்கு இருப்பதாக நான் காண்கிலேன். உலகில் தனக்கு ஒப்பில்லை என விளங்கிய ஒரு வீரரத்தம் தோய்ந்த பேறுபெற்ற உங்கள் வாள்களினும் சிறந்ததாக, உங்கள் வாட்களுக்கு ஈடாக வேறு ஆயுதம் கிடையாது என்றே கூறுவேன். கரங்களெல்லாம் குருதி தோய்ந்து இரத்தவெறி வீசிநிற்கும் நீங்கள் என்மீது வன்மம் காண்பீரேல், இந்நேரத்தில் அதனைத் தீர்த்துக்கொள்ளுங்கள். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் யான் வாழினும் இன்றுபோல் இறக்கத் துணிவது முடியாத காரியமாகும். இந்நேரத்தில் இந்நாளின் குறிப்பிட்ட மாபெருந் தலைவர்களாகிய உங்கள் கையினால் இந்த வீரசிம்மன் அருகில் கொலைப்பட்டேனாயின், எந்த இடமும் எனக்கு இந்த இடத்து அமைதியை நல்க முடியாது; இதனிற் சிறந்த கருவியும் வாய்க்காது.

பர: ஆநந்தரே, எங்கள் கைகளால் உமக்கு முடிவை நாடிக் கொள்ளாதீர். எங்கள் கைகள் கொடுவினையால் குருதிதோய்ந்து,

இரத்தவெறி வீசிக் கொலைகாரர் கைகளைப்போல் தோன்றுகின்றன. அம்முறையில் ஆடிநிற்கும் கரங்களையும் கட்கங்களையுமே நீர் கண்டீர்; அவைகள் இரத்தப்பழி வாங்கியவைகளே. ஆயினும் எங்கள் உள்ளத்தை நீர் உணரீர். எங்கள் உள்ளம் கருணையின் உறையுள். நொந்து அழிந்த ரோமாபுரிமக்கள் மீதுற்ற கருணையே இது. பெருநெருப்பிற் சிறுநெருப்பு மறைகிறதுபோல நாட்டுமக்கள் மீதுற்ற கருணை ஒரு சிறு கருணையை மறைத்தது; வீரசிம்மனை வீழ்த்தி இவ்வினை செய்தன. ஆநந்தரே, உம்மைப் பொறுத்த அளவில், எமது வாளின் எஃகு ஈயமாக மாறிநிற்கும்: வீரசிம்மனை வெறுத்து நின்ற எம்வீரத் தோள்களும் எம் உள்ளங்களும் உடன் பிறப்பு வாஞ்சை கொண்டு உம்மை அன்போடு வரவேற்றுத் தழுவும், பாராட்டி நிற்கும்.

காசி: இனிவரும் ஆட்சிமுறை அமைப்பில் உம்வாக்கு உமக்கு மிக்க ஆக்கம் நல்கும்.

பர: வீரசிம்மனை விரும்பிநின்ற யான் ஏன் இவ்வாறு மாறினேன், இம்முறையில் நடந்துகொண்டேன் என்பனபற்றிப் பின்னர் அறிவிக்கின்றேன். இப்பொழுது, அச்சத்தால் கலங்கி நிற்கும் மக்கள் அமைதி காணும்வரை, சற்றே பொறுமை கொள்ளும்.

ஆந: உம் அறிவின் நெறிபற்றி யான் என்றும் ஐயுற்றவனல்லன். யான் உங்களில் ஒவ்வொருவரோடும் அளவளாவி உறவு கொள்ள, ஒருவர்பின் ஒருவராகக் குருதிதோய்ந்த உங்கள் செங்கரங்களை நீட்டுங்கள். பரதரே, தாங்களே முதலாவது கைதாருங்கள். காசியர், தாங்கள் அடுத்து வாருங்கள், துச்சவிரதரே, தங்களின் கை? சிம்பரே, தாங்கள்? சின்னான், உமது கை? வீரம் விளக்கிய கீசகரே, உமது கை? சிறப்புடைய துருபதனரே, வரிசையில் இறுதி, ஆனால் உறுதியில் யார்க்கும் குறைந்தவரல்லர். பெருமக்காள், யான்சொல்ல யாதும் இல்லை. என் நிலைமை இழுக்குற்ற ஒன்றானது. அச்சத்தான்; அல்லது இச்சகத்தான் என்னும் இரண்டில் ஒருவகையாக நீங்கள் என்னைக் கருதுமாறு ஆனேன்.

ஆ, வீரசிம்மா, நான் உண்மையாகவே உம்மைப்பற்றி வாழ்ந்தேன்: இப்பொழுது உம்பிணத்தின் முன்னிலையில், குருதி தோய்ந்த உம்பகைவரின் கைகளைப்பற்றி அளவளாவுகிறேன். இவ்வாநந்தர் இவ்வாறு பகைவருடன் அளவளாவி உறவு பூண்டு நிற்பதைக் காணின் பெருந்தகையே, உம் ஆவி இறந்த அந்நேரத்தினும் பெரிதும் வருந்தும் அன்றோ? உம்பகைவருடன் யான் உறவுகொண்ட இச்சிறு செயலினும்; குருதி கொப்

புளிக்கும் உம் உடலிற்பட்ட புண்களைவிட யான் அதிகக் கண்படைத் தழுது நின்றேனையின் அதுவே பெருந்தகுதிவாய்ந்ததாகும். வீர சிம்மா, என்குற்றம் பெரிது, பொறுத்தருள். பெருமானே, ஈண்டு உன்னை அலைத்துவந்தார்கள் ; ஈண்டே நீ வீழ்ந்து இறந்தாய். வேட்டை பலித்ததின் பெருங்குறியாகக் குருதி வெள்ளத்திற் படிந்து, உன்னை வீழ்த்திய வேடரும் இதோ நிற்கின்றனர். உலகமே, நீ இப்பெரு மானுக்கு ஒருவளாகமாக விளங்கினுய் ; உனக்கும் இதுவே உயிர்நாடி யாக இருந்து வந்தது. இன்று அரசகுமாரர்கள் வேட்டையாடி வீழ்த் திய மான்போல் இங்கு வீழ்ந்து கிடக்கின்றனையே.

காசி : ஆநந்தரே,

ஆந : காசியர், சற்றே பொறும். வீரசிம்மனை வெறுப்பவரும் இத்துணைபுகல்வர் ; விரும்புகின்ற ஒருவரின் இவ்வுரை மிகக்குறைந் ததேயாகும்.

காசி : வீரசிம்மனைப் புகழ்வதற்காக யான் உம்மைக் குறை கூறவில்லை, உமக்கும் எமக்கும் உள்ள ஒட்டு என்ன ? எங்கள் குழுவில் நீவிரும் ஒருவராக இயைந்துள்ளீரோ ? இன்றேல் உம்சார்பின்றி நாங் கள் காரியங்களை நடாத்திச் செல்லலாமா ?

காசி : இயைந்ததனுலன்றோ கைகுலுக்கி நின்றேன் : வீரசிம்ம னின் சவக்காட்சியால், காரியத்தை மறக்க நேர்ந்தது. அன்பர்களே, யான் உங்கள் யாவரின் அன்பாலும், ஆதரவாலும் வீரசிம்மன் எங்கு, எவ்வாறு தீமை பயப்பவனுனன் என அறிய அவாவுடையவனுக இருக்கின்றேன்.

பர : இல்லையானுல் இக்கொடுங்காட்சி ஏன் ஏற்படுகிறது. ஆநந்தரே, நீர் அவ்வீரசிம்மனின் மகனு யிருப்பினும், இதனை ஒப்பும் படியான அளவில் அத்துணை காரணங்கள் நடந்திருக்கின்றன.

ஆந : அதை அறியவே யான் அவாவுகின்றேன். மேலும் அவன் சவத்தை மன்றுக்கு எடுத்துச் செல்லவும், ஈமக்கடன் ஆற்றும் இடத் தில் நண்பன் என்ற முறையில் சில நல்லுரை பகரவும் விழைகின்றேன்.

பர : தாம் அதை நன்கு செய்யலாம்.

காசி : பரதரே, தங்களுடன் தனித்து ஒரு வார்த்தை. (தனி யாக) நீர் என்ன செய்கிறீர் என்பது உமக்குத் தெரிகிறதில்லை, ஆநந்தர் இடுகாட்டில் பேசுதற்கு ஒப்பாதீர். அவர் உரைகேட்டு, மக்கள் எத் துணை கொதித்து எழுவர் என்பதை நீர் உணர்ந்திரல்லீர்.

பர : சற்றே பொறும். நானே முதன் முதல் மேடையில் ஏறி, நம் வீரசிம்மன் கொலைக் காரணத்தை மக்களுக்கு விளக்குகிறேன். ஆநந்தர் பேசுகின்றவைகட்கு யானே மறுப்புக் கூறுகிறேன். நமது ஆணைபெற்றே அவர் பேசுகிறார். மேலும் சோமாபுரிப் பெருமக்களுக் குரிய எல்லாச் சிறப்புகளும் வீரசிம்மனுக்கு நடக்குமாறு நாமே ஒப்பு கின்றோம் ; இதனுல் நமக்குத் தீமையன்று, நன்மையே விளையும்.

காசி : என்னென்ன நடக்குமென்று யான் அறியேன் : ஆயினும் இதனை நான் விரும்பவே இல்லை.

பர : ஆநந்தரே, வீரசிம்மனின் சவத்தை எடுத்துச் செல்க. அங்கு ஈமத்தில் நீர் பேசுங்கால், எங்களைத் தூற்றுதல் ஆகாது. வீரசிம்மனை எத்துணை போற்றவேண்டுமோ அத்துணையும் போற்றி நில்லும். மற்றொன்று — எங்கள் உத்தரவு பெற்றே நீர் கருமங்கள் ஆற்றுவதாகவும் மக்களுக்கு அறிவித்தல் வேண்டும் ; இன்றேல் நீர் அதிற் கலந்துகொள்ளக் கூடாது. யானும் அங்கு வருகின்றேன், பேசுகின்றேன் ; யான் பேசிய பின்னரே நீர் பேசுதல் வேண்டும்.

ஆந : அவ்வாறே ஆகுக. அது எனக்குப் போதுமானது.

பர : அடக்கத்துக்குத் தயார் செய்யுங்கள் ; எங்களோடு கூடி நீரும் வாரும். (ஆநந்தர் தவிர யாவரும் மறைதல்.)

ஆந : குற்றம் ; பெருங்குற்றம் ; பொறுத்தருள். குருதி பொழிந்து கிடக்கும் மண்மகனின் திருப்பிண்டமே, பாவியேன் கொலை காரர்களுடன் கூடி அடங்கி வாழும் கோழையனேன். ஒவ்வொரு யுகமும் தந்து நின்ற பெருந் தலைவர்கள் பலரினும் தலைசிறந்த வீர மகனின் திருவுடலன்றோ இது. உலகுக்கு உயிரான குருதியைக் கீழ் கொட்டிய அவன் வாழ்வு அவமே ஆகும். இத்திருமேனியில் தோன் றும் மூங்கை வாய்களையொத்த புண்கள், விரிந்த தம் செவ்விதழ் களால் என்னைப் பேசுமாறு அழைக்கின்றன. ஒன்று உரைப்பேன் : இனி இவ்வித்தாலிய பூமியில் எங்கினும் மக்கள் அங்கமெல்லாம் குறைந்தழுகிக் கறைப்பட்டுப் பழி உருக்காண்பர். இத்தாலிய நாட்டுக் குடும்பங்களிற் கலகமும், குடிகளுள் குழப்பமுமாக என்றும் துன்பமே விடியும் : கொலையும் அழிவும் கொடுங்காட்சிகளும் எங்கும் மலிவுறும். தம்மக்களைக் கைவேறு கால்வேருகத் தீவினையாளர் துணிக்கும் கொடுங்காட்சியைக் கண்ணுற்றுத் தாய்மார் சிரித்து நிற்கும்படியான நிலையே மேவும். கொலையே யாண்டும் நிலவலின் இரக்கம் என்பதே உருக்கரந்து போகும். அந்நாளில் வீரசிம்மனுடைய ஆவி பாதாள காளியுடன் கூடி நகருக்குள் வந்து, பழிதீர்க்கும் நோக்கத்துடன் அரசு

வீற்றிருந்து தனது கொடும்படைகளை அவிழ்த்து ஏவிநிற்கும். புதைப்பாரின்றி அங்கமெல்லாம் குறைந்து குற்றுயிராய்க் கிடக்கின்ற மக்கட் குழுவின் முடை நாற்றமே, இன்று நடந்த கொடுஞ் செயலின் விளைவாக நிற்கும்.

(ஒரு ஊழியன் வருகிறான்.)

ஆந : நீ உக்கிரசிம்மனின் ஊழியன் அல்லனோ ?

ஊழி : ஆம், அவருடைய ஊழியனே.

ஆந : வீரசிம்மன் அவரை ரோமாபுரிக்கு வருமாறு எழுதியிருந்தனரே.

ஊழி : அவர் அக்கடிதத்தைப் பெற்றார் ; வந்துகொண்டிருக்கிறார். தமது வரவைத் தங்கட்கு அறிவிக்குமாறு முன்னராக என்னை அனுப்பினார். (பிணத்தைக் கண்டு) ஆ ! வீரசிம்மர்......

ஆந : நீ உள்ளம் உடைந்து நிற்கின்றாய். சற்றே அப்பால்செல் ; அங்குபோய் அழு. அழுகை, அது ஒரு தொற்றுநோய் : உன் கண்களின் துளிகளைக் காண, என் கண்களிலும் துளிகள் அரும்புகின்றன. உன் தலைவர் வருகிறாரா ?

ஊழி : அவர் வருகிறார், இன்று உரோமுக்கு இருபது மைலுக்கு அப்பால் இருக்கிறார்.

ஆந : நீ விரைந்து சென்று ஈண்டுற்றதை அவர்க்கு அறிவி. எங்கும் அழுகை, எங்கும் பேரிடர் தருவதாக ரோமாபுரி இன்று இருக்கிறது : உக்கிரசிம்மருக்கு உறுதி தரும் ரோமாபுரியாக இல்லை : ஆதலின் நீ விரைந்து சென்று அறிவி.— சரி, நீ போகவேண்டா. சற்றுப் பொறு. அவர் சவத்தை மன்றத்துக்கு எடுத்துவரும் வரை நில். நான் சிலபேசி, பொதுமக்கள் இக்கொலைகாரர் செயலை எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை உணர்ந்தறிகிறேன். அதைக் கவனித்து ; உக்கிரசிம்மருக்கு, இங்குற்ற நிலையை நீ அறிவி. எனக்குக் கைகொடு. (மறைதல்.)

களம் 3. காட்சி 2,

இடம் :—மேடை (பரதர், காசியர், பொதுமக்கள் தோன்றுகின்றனர்.)

மக்கள் : நாங்கள் யாவரும் ஒப்புகிறோம், ஒப்புவோம் !

பர : அவ்வாறாயின் அன்பர்களே, என்னுடன் வாருங்கள். யான் கூறுவதைக் கேளுங்கள். காசியரே, தாங்கள் அடுத்த தெருவிற்குச் செல்லுங்கள் ; ஒரு பகுதி அங்கு வரட்டும். என் மொழிக்குச் செவிசாய்ப்பவர்கள் இங்கு நில்லுங்கள் ; காசியர் மொழி கேட்க விரும்புவோர் அவருடன் அங்குச் செல்லுங்கள். வீரசிம்மனின் மறைவுபற்றியவைகளையே பொதுமக்கட்கு நாங்கள் அறிவிக்கிறோம்.

ஒருவர் : நான் பரதர் பேசுவதைக் கவனிக்கிறேன்.

அடுத்தவர் : நான் காசியர் மொழிகளைக் கவனிக்கிறேன். இவர்கள் பல இடங்களிலும் பகர்ந்தவைகளை ஒப்பிட்டுப் பின் ஆராயலாம்.

மற்றவர் : பெருமகன் பரதர் மேடையில் தோன்றுகிறார், அமைதி !

பர : இறுதிவரை அமைதிகொள்வீர்களாக ! ரோமாபுரிப் பெருமக்களே, அன்பர்களே, யாம் எடுத்த கருமம்பற்றி எமக்குச் செவிசாய்க்க வேண்டுகின்றேன். அமைதியோடிருந்து யாம் கூறுவதைக் கேட்பீர்களாக. அந்நெறி முறையை நீங்கள் ஏற்று எமக்கு ஆதரவாக நிற்பீர்களாக. உங்கள் அறிவின் திறனால் ஆய்ந்து சீர்தூக்கி, குறைகாணில் எம்மைக் கடிந்து கூறுங்கள். இப்பெருங்குழுவில் வீரசிம்மனுக்கு வேண்டியவராக ; மிக மிக வேண்டியவராக எவர் ஒருவர் இருப்பினும் ; அவருக்கு, அவர் வீரசிம்மனிடம் கொண்ட அன்பினும் இப்பரதர்கொண்ட அன்பு எள்ளளவும் இளைத்ததன்று என அறிவித்துக்கொள்கிறேன். அவ்வன்பர் எம்மை நோக்கி, "ஏன் வீரசிம்மனை வீழ்த்த வகை கண்டீர்" எனக் கேட்பின், யான் கூறுகிறேன் :—வீரசிம்மன் மீது யான்கொண்ட அன்பு குறைந்தது என்பதன்று ; ரோமாபுரி வாழ்வுபற்றிய என் அன்பு மிகுந்தது என்பதே. ஒன்று உசாவுகிறேன் : ஒரு வீரசிம்மன் வாழ்ந்து நீங்கள் யாவரும் அடிமைகளாய்த் தாழ்ந்து மடிவதையோ, அன்றி வீரசிம்மன் ஒருவன் மடிந்து மக்கள் யாவரும் உரிமைப் பெருவாழ்வு காண்பதையோ எதனை விரும்புகின்றீர்கள் ? வீரசிம்மன் என்னை நன்கு விரும்பினார் ; அவருக்காக நான் கண்ணீர் விடுகிறேன் : அவர் நல்வாழ்வு கண்ட இடங்களிற் பெரு மகிழ்வு எய்தினேன் : அவர் வீர

வெற்றிகளிற் பெருமித மெய்திப் பாராட்டிநின்றேன். ஆயின், அவர் பேரவா உற்ற பொழுதோ அழித்தேன். அவர் அன்பிற்காகக் கண்ணீர், பெரு வாழ்வுக்காக மகிழ்ச்சி, வீரத்துக்காகப் பாராட்டு, அவாவுக்காக அழிவு! அடிமைத்தன அற்ப வாழ்வை விரும்புகிறவன் யாவன்? ஈண்டு ஒருவன் உளனாயின் அவன் முன் வருக: அவன் உள்ளமே என்னால் புண்பட்டதாகும். தன் உரிமையை நாடாத ஒரு முரடன் ஈண்டு உளனாயின் அவன் முன் வருக; அவன் உள்ளமே என்னால் புண்பட்டதாகும். தன் நாட்டினிற் பற்றில்லா அறிவிலி ஒருவன் ஈண்டிருப்பானாயின் அவன் முன் வருக, அவன் உள்ளமே என்னால் புண்பட்டதாகும். மறுமாற்றம் தருபவர் தரலாம்!

யாவரும்: யாருமில்லை, பரதரே, யாருமில்லை.

பர: அவ்வாறாயின் யான் எவர் உள்ளத்தையும் புண்படுத்தினேனல்லேன். இந்நகர்ப் பரதர்க்கு நீங்கள் யாது செய்வீர்களோ அதனையே யான் வீரசிம்மனுக்குச் செய்துள்ளேன். அவர் பெருமிதத் தகுதிகளைச் சிறிதும் மறைக்காமல், அவர் உயிருக்கே இறுதிதரும்படி நின்ற தவறுகளைப் பெருக்காமல், அவர் முடிவுபற்றிய செய்திகள் யாவற்றையும் நம்மன்றத்து ஏடுகளிற் பதிவு செய்திருக்கிறோம்.

(ஆநந்தர், பிறர் சவத்துடன் வருகின்றனர்.)

இதோ வீரசிம்மனுடல்: அழுது, அதனை ஏந்தி வருகின்ற ஆநந்தர் இக்கொலையிற் கலந்தவரல்லர்: ஆயினும் இக்கொலையிற் பிறக்கும் விடுதலையின் நலன்களைப் பிற யாவரையும்போல் அவரும் துய்த்து நிற்பார் என்பது உறுதி என்று கூறி யான் விடைபெறுகின்றேன். என் அரிய நண்பனை நாட்டின் நலங்கருதிக் கொன்று நின்றேன்: இனி இந்நாட்டு நலத்துக்கு என் உயிர் வீடு பெறுதல் அவசியமாயின், இதே கத்தி எனக்கும் வினையாற்றும் என உறுதி கூறுகின்றேன்.

யாவரும்: வாழ்க! வாழ்க! பரதர் வாழ்க!

ஒருவர்: அவருக்கு வெற்றி ஊர்வலம் நடாத்தி வீடுசேர்ப்போம்.

2: குல முன்னவரோடு இவருக்கும் ஒரு உருவம் நாட்டுவோம்.

3: இவரே இனி வீரசிம்மனாகட்டும்.

4: வீரசிம்மனின் குண நலன்கள் யாவும் பரதராகத் திரண்டு நிற்கின்றன.

1: ஆரவாரத்துடன் அவரை மனை சேர்ப்போம்.

பரதர்: என் நாட்டின் மக்காள்,

2: பரதர் பேசுகிறார். அமைதி! அமைதி!

1: அமைதி!

பரதர்: என் நாட்டு மக்காள், யான் செல்கின்றேன்: நீங்கள் ஈண்டு நின்று ஆநந்தருடன் கூடி வீரசிம்மன் உடலுக்கு வேண்டிய சிறப்புச் செய்து; வீரசிம்மன் வெற்றிபற்றி அவர்பேசும் நல்லுரைகளுக்குச் செவிசாய்த்துப் பெருமையளிக்க வேண்டுகின்றேன்.
(அகல்கிறார்.)

1: ஏ, நில்லுங்கள்: ஆநந்தர் சொல்வதையும் கேட்போம்.

3: அவர் மன்றத்தில் ஏறி நின்று பேசட்டும். இங்கு நின்று யாம் கேட்கலாம். ஆநந்தரே, மேடைமேல் ஏறுங்கள்.

ஆந: பரதர் வாக்குப்படி; யான் உங்கள் யாவருக்கும் மிகக் கடமைப்பட்டவன். (மேடையேறுகிறார்.)

4: இவர் பரதரைப்பற்றி என்ன கூறுகிறார்?

3: "பரதர் வாக்குப்படி" அவர் நம் யாவருக்கும் மிகக் கடமைப்பட்டிருப்பதாக அறிவிக்கிறார்.

4: பரதரைக் குறைத்து யாதும் பேசாதிருப்பின் நன்றாகும்.

1: வீரசிம்மன் கொடிய வன்கண்ணன்.

3: இல்லையா! இதில் ஐயமென்ன! அவனை ஒழித்தது இந்த நாடு செய்த புண்ணியந்தான்.

2: அமைதி! ஆநந்தர் கூறுவதைக் கேட்போம்.

ஆந: ரோமாபுரிப் பெருமக்களே,

யாவரும்: அமைதி, அமைதி. அவர் பேசுவதைக் கேட்போம்.

ஆந: அன்பர்காள்!! ரோமாபுரிப் பெருயீர் என்நாட்டுமக்காள், என் மொழிக்குச் செவிசாய்மின். ஈண்டு வீரசிம்மனைப் புதைக்க வந்தேனே அன்றிப் புகழ்வதற்கன்று. ஒருவர் இறந்த பின்னும்

அவர் செய்த தீங்கு ஈண்டு உறைகின்றது; அவரின் நன்மையோ உடலோடு ஒடுங்கி மறைகின்றது. வீரசிம்மன் வாழ்வே இதற்குச் சான்றாக விளங்குகின்றது. வீரசிம்மன் அவாவுற்று நின்றதாகப் பெருமகன் பரதர் கூறினார்: அவ்வாறாயின், அது பெருந்தவறே ஆகும்: அதற்குத் தக்கமுறையில் வீரசிம்மனும் பட்டநுபவித்தார். பரதர், ஏனைய பிறரின் உத்தரவு பெற்றே யான் ஈண்டு வீரசிம்மன் ஈமத்திற் பேசவேண்டியவனானேன். ஏன்? பரதர் மிகப் பெரியவர்; அவ்வாறே பிறரும்: எல்லாரும் பெரியவர்கள்! வீரசிம்மன் எனக்கு உற்ற அன்பராக விளங்கினார்; உண்மையாய் உறுதுணையாயிருந்தார். பரதரோ, அவர் அவாவுற்றதாக அறிவிக்கிறார். ஆம்; பரதர் மிகப் பெரீஇயவர்!

போரில் எத்தனை மக்களைச் சிறைசெய்து அவர் ரோபுரி கொண்டு சேர்த்தார்! பகைவர்களின் பொன்னையும் பொருளையும் நாட்டுக்கே கொடுத்து நலம் விளைவித்தார். இஃதோ வீரசிம்மன் கொண்ட அவாவின் அடையாளம்? நொந்த மக்களின் அழுகுரல் கண்டு உள்ளம் உருகினார் வீரசிம்மன். அவாவுற்ற நெஞ்சமாயின் கல்லாகிநிற்குமன்றோ? பரதரோ அவரை அவாவுற்றவராகச் சொ கிறார். பரதர் மிகப் பெரீஇயவர்! அன்று ஊர்ப்பெருவிழாவில் அவருக்கு அரசமுடிபுனைய மும்முறை யான் முன்வந்தேன்; மும்முறையும் அவர் மறுத்து நின்றதை நீங்களும் பார்த்து நின்றீர்கள். இதுதான் அவாப் போலும்! ஆயினும் பரதர் அவர் அவாவுற்றதாக அறிவிக்கிறார்: இவர் மிகமிகப் பெரீஇயவர்! பரதர் உரைக்கு மறுப்புரைக்க யான் வந்தேனல்லன்: யான் அறிந்தவைகளை உங்கட்கு உரைக்கவே ஈண்டு வந்தேன்.

அன்று நீங்கள் ‘ஏன்?’ என்று கேளாமல் அவருக்கு இயைந்து நின்றீர்கள்; இன்று நீங்கள் அவர்க்கு இரங்காது நிற்பதன் காரணம் என்னையோ? அறமே, நீ நெறிவிலகாதுறையும் வனவிலங்குகளிடத்திற் குடிபுகுந்தாய் போலும்! மக்கள் மதிகலங்கி மயக்குறுகின்றனர். என் உள்ளம் பேழையிலிருக்கும் வீரசிம்மனிடம் ஒன்றியது; யாதும் உரைக்கமுடியாதவனானேன். என் வெப்பந் தணியும்வரைப் பொறுக்க வேண்டுகிறேன்.

1: இவர் உரைப்பதிலும் நிறைய உண்மை இருக்கிறதாகவே தெரிகிறது.

2: இது சரியாகத் தோன்றினால், இந்தக் கூட்டம் செய்தது பெருந்தவறாயிற்றே?

3: அவர் உண்மையாகத் தவறு செய்தவரோ? அவரைவிட இவர் அக்கிரமக்காரரானால்!

4: அவர் சொன்னதில் ஒன்றைக் கவனித்தீர்களா? முடிபுனைய அவர் மனம் ஒப்பவில்லையே; எவ்வாறு அவாவுற்றவராக நாம் கூறமுடியும்?

1: அவர் நல்லவரேயாயின், இக்கொலைக்குப் பொறுப்பு யார்?

2: ஐயோ, ஆநந்தர் அழுது கண்சிவந்து நிற்கிறார்!

3: ஆநந்தரைவிட இன்று இந்நாட்டில் பெரியவர் யாவர்?

4: அதோ, அதோ பேசப்போகிறார். கவனிப்போம்.

ஆந: நேற்று இவ்வீரசிம்மன் உலக முழுவதையும் தம் ஆணையில் அடக்கும் ஆற்றலுடன் விளங்கினார். இன்று இதோ கீழ்க்கிடக்கிறார்; அவரைத் தீண்டுவாரில்லை. அன்பர்களே, உங்கள் உள்ளத்தையும் ஊக்கத்தையும் எழுப்பி எதிர்ப்புக்கிளர்ச்சி ஒன்று தோற்றுவித்தேனாயின், யான் பரதருக்கும் காசியருக்கும் ஊறுசெய்தவனாவேன். நீங்கள் அறிந்தவாறே அவர்கள் மிகமிகப் பெரீஇயவர்கள்! அவர்கட்கு யான் ஊறு செய்வேனல்லேன். இறந்து கிடக்கும் வீரசிம்மனுக்கும், எனக்கும், உங்கட்கும் தவறிழைப்பினும் இழைப்பேன்; மிகப்பெரீஇயவர்கள்! இவர்கட்குத் தீங்கு இழையேன்.

வீரசிம்மன் கையெழுத்திட்ட ஓலை ஒன்று யான் கொண்டுள்ளேன்; இஃது அவர் தனி அறையிலிருந்தது; அவரது பிற்காலத் திட்டம் பற்றியது. அதன் சாரத்துக்களை யான் கூறுகிறேன்; தெரிந்து கொள்ளுங்கள். வேண்டா; அதனை ஈண்டு வாசிப்பதாக இல்லை. தெரிந்தால், நீங்கள் விரைந்து சென்று வீரசிம்மனின் செங்குருதி படிந்த புண்களை முத்தி மோந்து, அத்தூய குருதியில் தம் கரத் துணிகளைத் தோய்த்து நிற்பீர்கள். அம்மட்டோ! அவரின் நினைவுச் சின்னமாக அத்தூய உடலின் உரோமத்தையும் வேண்டி நிற்பீர்கள்: இறக்கும் நாளில் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு எழுதும் பிற்காலத்திட்டத்தில் அதனையே மதிக்க ஒண்ணாப் பெருமுதலாகக் குறித்துச் செல்வீர்கள்.

4: ஆநந்தரே, பிற்காலத் திட்டத்தை கூறுங்கள். அது எங்கட்குத் தெரியட்டும்.

யாவரும்: பிற்காலத்திட்டம்! பிற்காலத்திட்டம்! வீரசிம்மனின் பிற்காலத் திட்டம் எங்கட்குத் தெரியட்டும்!

108755

ஆந: அருமை மிக்க அன்பர்களே, சற்று பொறுமை கொள்ளுங்கள். யான் அதை இப்போது சொல்வதற்கில்லை. உங்கள் யாவரையும் வீரசிம்மன் எத்துணை நேசித்தார் என்று அறிந்து கொள்ளவும் இது சமயமன்று. நாம் என்ன கல்லோ? அன்று: மரமோ? அன்று: மாந்தர். அறிவுடைய மனிதர்களாதலின், வீரசிம்மனின் பிற்காலத் திட்டத்தைக் காண்பீர்களாயின் உள்ளம் கொதித்து உணர்ச்சி மேலிட்டவர்களாவீர்கள். நீவிர் அவரின் பின் சந்ததி ஆவீர் என்பதை நீங்கள் அறியாதிருப்பதே நன்று: அறிந்தீர்களாயின் அதன் விளைவு என்னென்ன ஆகுமோ!

4: பிற்காலத் திட்டத்தை வாசியுங்கள்! ஆநந்தரே, அதனை அறிய அவாவுகிறோம்: பிற்காலத்திட்டத்தை வாசியுங்கள்.

ஆந: உங்களிடத்தில் அமைதிவேண்டும். சற்றே பொறுமை கொள்ளுங்கள். அதைப்பற்றி அறிவித்ததே மீச்செலவென யான் கருதுகின்றேன். மேலும் இதனால், வீரசிம்மனைக் கத்திகொண்டு குத்தி வீழ்த்திய அப்பெரியார்களுக்கு யான் தீங்கு இழைத்தவன் ஆவேன்: இதுவே என் தயக்கமெல்லாம்.

4: பெரியவர்களோ? சதிகாரர்கள்!

யாவரும்: அதன் சாரத்துக்கள்! திட்டம்!

2: அவர்கள் வம்பர்கள், கொலைகாரர்கள். தாங்கள் அத்திட்டத்தை வாசியுங்கள்.

ஆந: அத்திட்டத்தை வாசிக்குமாறு நீங்கள் என்னை வற்புறுத்துகிறீர்கள். அவ்வாறாயின் இங்கு வீரசிம்மன் அருகில் வந்து சூழ்ந்து நில்லுங்கள். முதலாவது அத்திட்டம் வகுத்த அவரை நீங்கள் யாவரும் பார்க்கவேண்டும். யான் மேடையை நீத்து வரலாமோ?

யாவரும்: வாருங்கள், வாருங்கள்.

2: வாருங்கள்.

3: வாருங்கள், உங்கட்கு இடந்தருகிறோம்.

4: வட்டமாகச் சூழ்ந்து நில்லுங்கள்.

1: பேழையைவிட்டுச் சற்றே விலகி நில்லுங்கள். சற்றுத் தூரத்திலே நிற்போம்.

2: ஆநந்தருக்கு இடம் கொடுங்கள். பெரு நெறிபிடித்தொழுகும் ஆநந்தர்!

ஆந: அழவேண்டுமாயின் இப்பொழுதே அழுது நில்லுங்கள். வீரசிம்மன் அன்று நிருதர்களை வென்றநாளில், கோடைக்கால மாலைப்

பொழுதில் தமது பாசறையில் முதல் முதல் அணிந்த போராடை இது. இதோ, காசியரின் கத்தி ஊடுருவிச் சென்ற இடம். நாச காலக் கீசகன் செய்த பெருந்தொண்டி இது. அன்புகெழுமிய பெரிஇயவர் பரதர் குத்திய குத்து! இது. அவர் தமது கத்தியை வெளியெடுத்தபோது, நன்றிகெட்ட இச்செயலைச் செய்தவர் பரதரோ? மற்று யாவரோ? என்று பார்த்தறிய வாயில் திறந்து வெளிவந்து பொங்கி வீறிட்டு நின்றது வீரசிம்மனின் செங்குருதி. ஏன்? பரதர் வீரசிம்மனின் பெருமதிப்புக் குரியவர் ஆதலின். வீரசிம்மன் அவர் மீது கொண்டிருந்த அன்பின் மிகுதிக்குத் தெய்வங்களே சான்று பகரும். இஃதே எல்லாக் குத்துக்களினும் இழிந்ததும் நன்றி கெட்டதுமாகும். ஏன்? பரதர் குத்தி நிற்பதைக் கண்டதும், பகைப் பலத்தினும் நயவஞ்சகம் வீரசிம்மனை வாட்டியதால் உடனே உள்ளம் உடைந்து வீழ்ந்தார். போராடையால் தமது முகத்தை மறைத்து, ஓவ்வாத பாம்பேயன் சிலையின் அடியில் குருதி கொப்புளிக்கப் பெருமகன் வீழ்ந்தார்.

அருமை மக்களே, என்ன கொடுமை! பழியும் சதியும் இவ்வாறு படர்தலின், இது நமது பதியின் வீழ்ச்சியே ஆகும். இப்பொழுது நீங்கள் உள்ளம் உருகுகின்றீர்கள்; உங்கள் முகங்களில் இரக்கம் குடிகொள்ளக் காண்கின்றேன்: இஃதே "ஆர்வலர் புன்கண்ணீர்" ஆகும். அருமை மிக்கவர்களே, வீரசிம்மன் மேலாடை பழுதுபட்டதைப் பார்த்து அழுது ஏங்குகின்றீர்கள்; இதோ பாருங்கள்: அவரே காயமுற்றுக் கிடக்கின்றார். சதிகாரர் தீவினை.

1: சகிக்க முடியாத காட்சி.

2: வீரசிம்மப் பெருந்தகையே,

3: கெட்டநாள் இது!

4: சதிகாரர்! வம்பர்கள்!

1: கொடிய காட்சி!

2: நம்மையும் பழிவாங்குவார்கள்!

யாவரும்: நாம் பழிவாங்குவோம். ஓடு, ஓடு, அவர்களைக் கண்டுபிடி, கொல், எரி, நெருப்பில்போடு, ஒருவர்கூட உயிர்வாழாதபடி கொல்.

ஆந: அருமை மக்காள், சற்றே நில்லுங்கள்.

1: அமைதி, ஆநந்தர் கூறுவதைக் கேளுங்கள்.

2: அவர் கூறுவதைக் கேட்போம், அவர்சொற் கேட்போம்; அவருடனே முடிவோம்.

ஆந: அன்புமிக்க, அருமையுள்ள நண்பர்களே, நீங்கள் இவ்வாறு எதிர்த்துக் கிளர்ச்சி செய்து எழவேண்டு மென்பது என் கருத்தன்று. இக்கருமத்தை ஆற்றிய அவர்கள் மிகமிகப் பெரியவர்கள். அவ்வாறு செய்வதற்குத் தம் தனித்த உறவில் என்ன துன்பம் உற்றார்களோ, யான் அறியேன். அவர்கள் அறிவாளிகள், பெருநெறி பிடித்து நிற்பவர்கள் : ஆதலின், தக்க சமாதானம் சொல்லியே தீர்வார்கள் என்று நினைக்கின்றேன்.

அன்பர்களே, உங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொள்ள வேண்டும் என்பது என் எண்ணமல்ல; பரதரைப் போல் யான் நா நலம் படைத்தவன் அல்லன். நீங்கள் யாவரும் அறிந்தவாறு அன்பர்க்கு அன்பனாக வாழ்ந்துவரும் வெள்ளை உள்ளத்தினன்: இதனை அவர்களும் அறிந்தவர்கள்; அறிந்தே மன்றத்திற் பேச எனக்கு உரிமை அளித்தார்கள். மக்களுக்கு உணர்ச்சியூட்டும் முறையிற்பேச அறிவு, ஆற்றல், தகுதி, மொழிவளம், சொல்நயம், நாநலம், மெய்ப்பாடு இவைகளில் யாதும் யான் பெற்றிலேன் : எதனையும் எடுத்த எடுப்பிற் சட்டெனப் பேசி நிற்பவன். நீங்கள் அறிந்த ஒன்றையே உங்கட்கு யான் உரைக்கின்றேன். நமது அருமை வீரசிம்மன் பெற்ற படுகாயங்களான அம்மூங்கை வாய்களை உங்கட்குக் காட்டினேன்; அவைகளே எனக்காகப் பேசிநின்றன. ஆநந்தர் பரதராகவும், பரதர் ஆநந்தராகவும் இருந்திருப்பின், அவ்வாநந்தர் சொற்கேட்டு உங்கள் உள்ளம் கிளர்ச்சி கொள்ளும்; வீரசிம்மனின் ஒவ்வொரு புண்ணும் தனித்தனியாக நா நீட்டிப் பேசும்; ரோமாபுரியின் கற்களும் வீறு கொண்டு எதிர்த்து எழும்.

யாருவம்: நாங்களும் எதிர்ப்போம்.

1: பரதர் வீட்டிற்குத் தீ வைப்போம்.

3: ஓடுங்கள், சதிகாரரை நாடிப்பிடியுங்கள்.

ஆந: அன்பு மிக்கவர்களே, இன்னும் சற்றுக் கேளுங்கள்.

யாவரும்: அமைதி! பெருந்தகை ஆநந்தர் பேசுகிறார்; கேளுங்கள்.

ஆந: அன்பர்களே, என்ன என்றறியாமல் ஏதோ செய்யப் போகின்றீர்களே! வீரசிம்மன் உங்கள் உள்ளத்தை எவ்வகையில் கவர்ந்தார்? அதனை நீங்கள் அறியீர்கள் : அதை அறிவிப்பது என் கடமையாகும். யான் முன் கூறிய பிற்காலத் திட்டத்தை அடியோடு மறந்து விட்டீர்கள்.

யாவரும்: ஆமாம். அத்திட்டத்தை மறந்து விட்டோம். அதை வாசியுங்கள்; நாங்கள் கேட்டு நிற்கிறோம்.

ஆந: இதுதான் அத்திட்டம். இது வீரசிம்மனின் கையெழுத்து முத்திரை கொண்டது. இதன்படி அவர் ரோமாபுரி மக்களில் ஒவ்வொருவருக்கும் எழுபத்தைந்து நாணயங்கள் கொடுக்கிறார்.

2: பெருநெறி பிடித்து நின்றவர் வீரசிம்மன்! அவர் பழிக்குப் பதிற்பழி வாங்கவேண்டும்.

3: ஆண்மையின் உரு வீரசிம்மன்.

ஆந: சற்றே பொறுமையுடன் கேளுங்கள்.

குடிகள்: அமைதி, அமைதி!

ஆந: தீப நதியின் இப்பாற்பட்ட, அவர் தமக்கே உரிய தைக்கா, பொழில்கள், தோட்டங்கள், புல்வெளிகள் வளாகங்கள் யாவையும் நீங்களும் உங்கள் சந்ததியாரும் என்றும் எக்காலத்தும் பொதுவிடமாகப் பயன்படுத்தி இன்புறுமாறு நன்கொடை அளித்துள்ளார். வீரசிம்மனாக விளங்கினார் அவர் ஒருவர், இனி அவ்வாறு ஆவார் யாவர்?

1: எவரும் இலர்: வாருங்கள் போவோம். அவர் திருவுடலை ஈமத்து ஏற்றுவோம். அந்த ஈமத்தீயின் கொள்ளிகளைக் கொண்டே சதிகாரர் மனைகளைக் கொளுத்துவோம். உடலைத் தூக்குங்கள்.

2: போய் நெருப்பு எடுத்துவா.

3: பெஞ்சுகளை எல்லாம் தள்ளு கீழே.

4: கதவு பலகணி எல்லாம் தட்டி ஒரே மட்டமாக்கு.

(பிணத்தை எடுத்துச் செல்கின்றனர்.)

ஆந: யானும் இட்ட தீ மூள்க மூள்கவே! அவிழ்த்துவிட்டாயிற்று, வேண்டியபடி எல்லாம் வேட்டை நடக்கட்டும்!

(ஊழியன் வருகிறான்.)

நீ வந்தது என்ன காரியம்?

ஊழி: ஐய, உக்கிரசிம்மர் ரோமாபுரி வந்துள்ளார்.

ஆந: அவர் யாண்டுள்ளார்?

ஊழி: அவரும் லோபியரும் வீரசிம்மன் மனையில் இருக்கின்றனர்.

ஆந: எனது விருப்பத்துக் கிணங்க அவர் வந்துள்ளார், உடனே நேரில் சென்று அவரைக் காண்கிறேன். இன்று திருமகள் மனம் உவந்து நிற்கின்றாள்: இந்நிலையில் நமக்கு வேண்டிய பலவும் வலியவந்து கூட்டுவாள்.

ஊளுழி: பாதரும் காசியரும் பித்துற்றவர்களாய் ரோமாபுரி வாயிலைக் கடந்து சென்றதாக அவர் பேசிக்கொண்டார்.

ஆந: ஓ, மக்களின் நிலைபற்றி அறிய நேர்ந்ததுபோலும். என் வாய்மொழி மக்களை நன்கு மூட்டியிருக்கின்றது. சரி, உக்கிரசிம்மரிடம் செல்வோம். (அகல்கிறார்.)

களம் 3. காட்சி 3.

(இடம்:—ரோம் நகரத்தெரு, கவிராயர் வருகிறார்,)

சின்னான் கவி— வீரசிம்மனுடன் விருந்துண்பதாகக் கனாக் கண்டேன். ஏதேதோ கெட்ட கெட்ட எண்ணங்கள் தோன்றிய வண்ணமா யிருக்கின்றன. வாயிலுக்கு வெளியே போகவும் விருப்பமில்லை, ஆனால் ஏதோ என்னை வெளியே கொண்டு தள்ளுகிறது.

(சிவர் வருகிறார்கள்.)

1— உம் பெயர் என்ன?

2— நீர் எங்குப் போகிறீர்?

3— உம் குடியிருப்பு எங்கே?

4— திருமணம் ஆனவரா? ஆகாதவரா?

2— ஒவ்வொரு கேள்விக்கும் நேர்மையான பதில்சொல்லும்.

1— சுருக்கமாயிருக்க வேண்டும்.

4— ஆமாம். அறிவோடு அமையவேண்டும்.

3— தப்பிப்போகவேண்டுமானால், உண்மையைச் சொல்ல வேண்டும்.

சின்னான்— "உம் பெயரென்ன, எங்குப் போகிறீர், குடியிருப்பு எங்கு, மணம் ஆனவரா, ஆகாதவரா": ஒவ்வொருவருக்கும் நேர்மையாய், சுருக்கமாய், அறிவோடு, உண்மையைச் சொல்லவேண்டும்!" அறிவோடு சொல்கிறேன், நான் கலியாணம் ஆகாதவன்.

2— அப்படியானால் கலியாணம் பண்ணியவர்கள் அறிவில்லாதவர்கள் என்கிறீரா? சரி, இதற்கு உமக்கு நல்ல தண்டனை கொடுக்க வேண்டும்: இப்போதுள்ள நடப்புபற்றிச் சொல்லும்.

சின்— இப்போது நடக்கிறது வீரசிம்மன் அடக்கம் பார்க்கிறதற்கு.

1— அவர்க்கு வேண்டியவராகவோ, வேண்டாதவராகவோ?

சின்: வேண்டியவராகவே.

2— சரி. அதற்கு நல்ல பதில்தான்,

1— உம் இருப்பிடம் பற்றிச் சொல்லும்; சுருக்கமாய்.

சின்— சுருக்கமாய்ச் சொன்னால், தலைநகர்ப்பக்கத்தில்.

3— உம்பெயரை மறைக்காமல் சொல்லும்.

சின்— மறைக்கிறது ஏன்! என்பெயர் சின்னான்.

1— ஏ, இவன் சதிகாரரில் ஒருவன். உடனே துண்டு துண்டாய்ப் போடு.

சின்— நான் சின்னான் கவிராயர், சின்னான் கவிராயர்.

4— கெட்ட கவி பாடுகிறவனைக் கிழி; கெட்ட கவி பாடுகிறவனைக் கிழி.

சின்— யான் அல்லன் சதிகாரச் சின்னான்.

2— அல்லன் என்றால் என்ன! அப்பெயர் ஏன் கொண்டீர்? அந்தப் பெயரை இருதயத்திலிருந்து எடுத்து விடுகிறோம்: பிறகு போகிற பாதையாய்ப் போம்.

3— கிழியுங்கள், அவனைக் கிழியுங்கள்: வாருங்கள், போய்க் கொள்ளியை வைப்போம். பாதர் வீடு, காசியர் வீடு யாவர்வீட்டையும் கொளுத்த வேண்டும். துச்சர் மனைக்குச் சிலர், இலாகிரி மனைக்குச் சிலர், கீசகன் மனைக்குச் சிலர் ஓடுங்கள், ஓடுங்கள்.

களம் 4. காட்சி 1.

(இடம் :—ரேமாபுரியில் ஆநந்தர் இல்லம்.)

ஆநந்தர்— இவர்கள் பலரும் உயிர் துறக்க வேண்டியவர்கள். அந்தப் பெயர்களின் மீது புள்ளி குத்தியுள்ளேன்.

உக்கிரசிம்மன்— லோபியரே, உமது உடன் பிறந்தானும் உயிர் துறக்கவேண்டியவனே ஆகிறான். இதனை நீர் ஒப்புகின்றீரா?

லோபி— முழு மனத்துடன்.

உக்— ஆநந்தரே, அவர் பெயரினும் அடையாளம் வைத்துக் கொள்ளும்.

லோபி— ஆநந்தரே, தங்கள் உடன்பிறந்தாள் மகன் புலியரும் உயிர் இழக்க வேண்டியவரே ஆகிறார்.

ஆந— ஆம், அவனும் உயிரை இழப்பான். இதோ அவன் பெயர்மீதும் அடையாளம் குத்தியிருக்கிறேன். லோபியரே, நீர் வீரசிம்மன் அரண்மனைக்குச் சென்று, அவர் எழுதி வைத்த பிற்காலத் திட்டத்தை இங்கு எடுத்து வருக. நாம் நமது படைச்செலவைக் குறைக்க ஒருவகை காண்போம்.

லோபி: மீண்டுவந்து இவ்விடத்திலே தங்களைக் காணவோ?

உக்: இங்கு, அல்லது தலைநகரில் (லேபியார் அகல்தல்.)

ஆந: இவன் எவ்வகையினும் பயன்படா ஒருவன்: இங்கு அங்குத் தூது செல்வதற்கே ஏற்றவன்: மும்மண்டலங்களில் ஒன்றை, மூவருள் ஒருவராயிருந்து ஆட்சி செய்யத் தகுதியற்றவன்.

உக்— தக்கவர்எனத் தாமே சற்று முன்பு தெரிவித்தீர். கொலைக்குரியவர் பெயர்களைக் குறிப்பிட்டபோதும் அவரைக் கலந்தே செய்தீர்.

ஆந— உக்கிர சிம்மரே, யான் தங்களினும் காலங்கண்ட ஒருவன். இவனுக்குப் பட்டங்கள் சூட்டிப் பாராட்டுக் கூறுவதெல்லாம் நம்மைக் குறைகூறா திருப்பதற்கேயாம். குங்குமம் சுமந்த கழுதைபோல் இவனும் பட்டம் பதவிகள் பெற்று நிற்பான். அது மூட்டையைச் சேர்த்ததும் காட்டிடை மேயத் துரத்தப்படுவதே: நெடுஞ்செவி ஆட்டி நத்தம் புறம்போக்கை நாடுந் தன்மைபோல் இவனும் நமது ஏவலில் நின்று குறித்த இடத்திற் சேர்தற்கு உரியன்.

உக்— சரி, விரும்பியவாறே செய்க: ஆயினும் நன்கு பயின்ற ஒரு சுத்த வீரன்.

ஆந— என் குதிரையும் நன்கு பயின்ற ஒன்றுதான். அதனை அறிந்தே குதிரைக்கொட்டில் காவலாக நியமிக்கப்பட்டான். மேலிருப்பவன் குறித்தபடி குதிரை ஆடி ஓடி அமர்ந்து போர்புரிந்து நிற்கும். லோபியனும் தன்னளவில் யாதும் அறியான்; இரு, எழு, எடு, செல் என ஏவிய முறையெல்லாம் ஆற்றி நிற்பான். அற்பத்தில் மகிழ்வான்; போலி நடையுடை புனைவான்; பிறர் கைவிடும் பருவத்தைத் தான் நவீனமாகக் கருதி மேற்கொள்வான். அவனை என் சொல்ல! அது ஒரு நல்ல பொருள் என்னலாம். உக்கிரா, மற்றொரு முக்கியமான செய்தி. சற்றே கவனிக்க. பரதரும் காசியரும் படைப்பலத்தைப் பெருக்குகின்றார்கள். நாமும் அவ்வாறே நம் படையைப் பெருக்கி, நம் இருவர் படைகளையும் ஒன்று சேர்த்து; நமக்கு உறு துணை ஆவோர்களையும் உடன் கொள்ளவேண்டும். ஒல்லும் வகை எல்லாம் நம் ஆற்றலைப் பயன்படுத்தவேண்டும். நாம் யாவரும் உடனே ஒருங்குகூடிப் பகைவரின் மறைபுலங்களை அறியும் வகைபற்றியும், அன்னார் வெளியிடர்களை எளிதாக விலக்கும் வகை பற்றியும் ஆய்தல் வேண்டும்.

உக்— நன்று; அஃதே ஆற்றுவோம். நாம் இப்பொழுது நெருப்பின் மத்தியில் இருக்கின்றோம். நாற்புறமும் பகைவர் நம்மைச் சூழ்ந்திருக்கின்றனர். நம் அச்சமெல்லாம், முகம் நக அகம் பகை குடி கொள்ளும் புன்னருக்கே. (அகல்தல்.)

களம் 4. காட்சி 2.

(இடம் :—சதுரகிரியில் பரதர் பாசறைப்பக்கம்—முரச ஒலி—பரதர், எழிலர், உலூகர், பிறவீரர்கள் வர; தித்தன், பண்டையன் இருவரும் எதிர்கொள்ளல்.)

பரதர்— (எழிலர்க்கு) நேளர்! நில்ல்!

எழிலர்— (தமது படைக்கு) நில்ல்!. (பரதர்க்கு) திருமுகந் தாங்கியுள்ளேன்.

பர— எழிலரே, யாது செய்தியோ? காசியர் அண்மையரோ?

எழி— அவர் அண்மையரே. மேலும் அவர் வணக்கத்தை அறிவிக்கப் பண்டையரும் இதோ வந்துள்ளார்.

பர— அவர் நன்கு வணக்கங் காட்டுவார். பண்டயரே. உம் தலைவர் தாமாக மன வேறுபாடுற்றோ, இன்றேல் புன்மக்களால் தூண்டப் பெற்றோ யாம் நெஞ்சத்தில் ஆயும்படியான சில கருமங்கள் ஆற்றியுள்ளார். அவர் என்னை நேரிற் காண்பதே நன்மை பயப்பதாகும்.

பண்— எம் தலைவர் என்றும் தங்கள்பால் மதிப்பும் மரியாதையும் தாங்கியுள்ளவர். இன்றே அவர் தவறாது இங்கு உறுவார்.

பர— அவரை யான் குறை கூறுகிலேன். எழில, உன்னைக் காசியர் வரவேற்ற முறை எவ்வாறோ? அதனை யான் உணருமாறு அறிவி.

எழி— அன்போடும் ஆதரவோடும் வரவேற்றாராயினும், பண்டு உள்ள முறையில் அவர் அளவளாவி நின்றதாகக் கூறுதற்கில்லை.

பர— முன்பு பாலும் நீரும்; இன்று மோரும் நீரும்போல் என மொழிகின்றாய். எழிலோய், ஒன்று கேள். நட்புஎன்பது நலியும் நாளில் ஒப்பனை உபசாரம் மிகுதியும் உதிக்கும்: உண்மையாக உயருமேல் பசப்பு ஆங்கு இல்லை.

நயவஞ் சகர்தாம் நாட்டியக் குதிரை!
ஈடிலா எடுப்புடன் காலெடுத் தாடும்;
பந்தய ஓட்டம் வந்தஅந் நேரம்
முந்துறச் செலுத்த முள்ளுற அணைத்தால்
தன்தலை தாழ்த்தித் தளர்நிலை அடைந்து
பிந்துறும் மலைக்கும். பேதை மாக்கள்!

சரி. அவர் படையும் வருகிறதோ?

எழி— படை முழுவதும் இன்றிரவு சதுர கிரியில் பாசறை கொள்வதாகத் திட்டம். குதிரைப்படை முழுவதும் காசியருடன் முன்னதாகவே வருகிறது.

பர— அதோ வந்து விட்டார். நம் படைகளுடன் சென்று அவரை வரவேற்பீர். (காசியர் சேனையுடன் வருதல்.)

காசி— (தமது படைக்கு) நேளர் நில்ல்!

பர— ,, நேளர் நில்ல்!

1-வீரன்— நில்ல்!

2-வீரன்— நில்ல்!

3 ,, — நில்ல்!

காசி: பெரு மதிப்பிற்குரிய அண்ணா, தாங்கள் எனக்குப் பெருந் தீங்கு இழைத்து விட்டீர்கள்.

பர: தெய்வமே, கேள். பகைவருக்கும் தீங்கு புரியா யான் துணைவனுக்கோ தீங்கு புரிவேன்?

காசி: பரத அண்ணாவின் அடக்கமான தோற்றம் புரிகிற இடக்கை எல்லாம் மறைத்து விடுகிறது.

பர: காசியரே, ஆர அமரப் பேசுக. உம் குறைகளை எல்லாம் நன்கு கூறலாம்; நீர் எனக்குப் புதியவரோ? இதோ இருக்கிற நம் இருவரின் படைஞர் நம்மைக் கெழுமிய நண்பராகக் கருதுபவர். அவர்கள் முன்னிலையில் இகல்வேண்டா. அவர்களை அப்பாற்படுத்தி; எனது பாசறைக்குச் செல்வோம். அங்கு உம் குறைகளைக் கூறும்; யானும் நன்கு கவனிக்கின்றேன்.

காசி: பண்டையரே, தளபதி மூலம் நம் படைகளை அப்பால் அகற்றுவீர்.

பர: எழிலரே, அவ்வாறே நீரும் ஆற்றுவீர். நாங்கள் பேசி முடிக்கும் வரைப் பாசறைக்குள் எவரொருவரும் வராலாகாது. உலூகனும் தித்தனும் வாயிற் காவல் புரிக.

காசி: சதுரகிரி மக்களிடமிருந்து கையூட்டுப் பெற்றதாக உலூகபாலரைத் தாங்கள் மிகவும் கேவலப்படுத்தி விட்டீர்கள்: அவனை யான் நன்கு அறிவேன்: அவனுக்குப் பரிந்து யான் எழுதிய கடிதத்தையும் புறக்கணித்தீர்கள்: இவ்வாறு தாங்கள் செய்தது முறையன்று: இது என்னையே அவமானப் படுத்தியதாகும்.

பர: இத்தகையோனுக்காக எழுதித் தம்மைத்தாமே அவமானப் படுத்திக் கொண்டீர்கள்.

காசி: இத்தகைய நெருக்கடியான நேரங்களில் சிறு சிறு துரும்புகளைஎல்லாம் தூணாகக் கருதுவது பொருத்தமாகாது.

பர: காசியரே, தகுதியற்றவர்கட்கெல்லாம் பதவிகளை நீர் விற்கிறதாகவும், அம்முறையில் உம்கை கனம் ஏறுகிறதாகவும் கூறப் படுகிறது.

காசி: என் கை கனம் ஏறுவதக! இவ்வாறு உரைக்கிறவர் பரதர்; பிறராயின் இதுவே அவர் வாயின் இறுதிக் கூற்று ஆகும்.

பர: காசியர் பெயரின் மதிப்பு கையூட்டுக்கும் சேர்கிறது! கசையடியின்றி அது தப்புகின்ற தன்றோ?

காசி: கசையடி!

பர: ஆமாம்! மாசித்திங்கள் பௌர்ணமி நாளை மறந்துள்ளீரோ? அறம் நிறுவப் பெரு வீரசிம்மனும் குருதி சிந்தி விழவில்லையா? நாம் கருதியது தருமம் ஒன்றையே: இன்றேல் அற்றைநாள் கொலைஞர் வன்புலைஞர் ஆகாரோ? மக்கள் உரிமையை வேரறுத்த உலகத்தின் தனிப் பெருமகன் ஒருவனை வீழ்த்திய தூய கரங்கள் இன்று கையூட்டுப்பெற்றுக் கறைப்படுமோ? புகழ் விஞ்சிய இந்நாட்டின் பெருமையைச் சிறு காசுக்கு ஈடு செய்வதோ? அத்தகைய ரோமனாக வாழ்வதினும் திங்களை நோக்கிக் குரைத்துத் திரியும் நாயின் வாழ்வையே யான் விரும்புவேன்.

காசி: பரதரே, வீணே வெஞ்சினத்தை எழுப்பாதீர். என்னால் தாங்க முடியாவாறு மேலும் மேலும் அடுக்கிக்கொண்டே போகிறீர். யான் ஒரு சுத்தவீரன்; உம்மினும் காலங்கண்டவன்; ஆளை அறிந்து தொழில் நடாத்தும் ஆற்றலுடையவன் என்பதை மனத்தில் கொள்ளும்.

பர: போதும். நீர் இப்பொழுது காசியரல்லர்!

காசி: யாம் காசியரே!

பர: காசியரே அல்லர்!

காசி: சினத்தை எழுப்பாதீர். யான் தன்வசமிழக்க நேரும். உம்மை ஓம்பும்; இன்னும் கனலை மூட்டாதீர்.

பர: போலும்! உறுதி இல்லாத மனிதன்.

காசி: இது வேறு!

பர: இன்னும் கூறுகிறேன் கேளும். உம் சினத்தை யான் பொருட்படுத்துகில்லேன். ஒரு பயித்தியத்தைப் பார்த்து யான் அஞ்ச என்ன வந்தது!

காசி ஏ தெய்வங்காள், ஏன் இச் சோதனை!

பர: இதுமட்டுமோ? இன்னும்! உம் சினமே உம் உள்ளத்தைத் தின்றுவிடும். போய், இச்சினத்தை எல்லாம் உம் பணியாளரிடம் செலுத்தும். என்னை இவை அசைக்கா என்பதை உணரும். உம் சொற்படி யான் நடப்பவனும் அல்லன்; உம் சினத்துக்கு அஞ்சி நடுங்குபவனும் அல்லன். உம் வஞ்சத்தால் உம் நெஞ்சம் வெடிக்கும்; அங்குற்ற நஞ்சே உம்மைக் கொல்லும்; யான் உம்மை ஒரு விளையாட்டுப் பொம்மையாக, இன்றேல் பிள்ளைக் குளவியாகவே கருதுவேன்.

காசி: இத்துணைக்கு வந்துவிட்டீர்!

பர: சரி, என்னைவிடப் பலத்த வீரன் என்றீரே; எங்கே? அதனைக் காட்டும் பார்க்கலாம்: உம் சொல் செயலில் வரட்டும்! அதைக்கண்டு யானும் மகிழ்கிறேன். எனக்கு எப்போதும் தக்கவர்களோடு கலந்து கொள்கிறதில் ஒரு தனி மகிழ்ச்சி.

காசி: பரதரே, குற்றங்காண்பதே தொழிலாகக் கொண்டுள்ளீர். பலங்கொண்டவன் என்று யான் சொன்னேனோ? காலங்கண்டவன் என்றே கூறினேன்: பலங்கொண்டவன் என்று யான் சொன்னதே இல்லை.

பர: சொல்லும்! அதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை.

காசி: வீரசிம்மனும் இவ்வாறு என்னிடம் நெருக்கத்தில் வந்ததில்லை.

பர: அவர் நெருக்கத்தில் வருமாறு நீர் எதிர்ப்பு யாதும் வைத்துக்கொள்ளவில்லை.

காசி: நான் எதிர்ப்பாக இல்லை?

பர: இல்லை.

காசி: ஏன் நான் எதிர்க்கவில்லை?

பர: உம் உயிரை ஓம்பவே நீர் எதிர்த்துக் கொள்ளவில்லை.

காசி: தோழமை நிலையில் நீர் வரம்பு இகந்து போதல் முறைமையன்று: கழிவிரக்கம் கொள்ளுமாறு யான் யாதும் புரிய நேரினும் நேரலாம்.

பர: கழிவிரக்கம் கொள்ளத்தக்கன முன்னரே செய்துள்ளீரே! காசியரே, உம் அச்சுறுத்தல் என்னை அசைக்காது. வாய்மையின் நிறைபூண்டு நிற்கிறயான் உம் போலி உரைகளைப் பொருட்படுத்துகில்லேன்: உம்வாக்கு எனக்கு இளங்காற்று!

பணம் வேண்டி யான் உம்பால் ஆள் அனுப்ப, நீர் மறுத்து நின்றீர். முறைகேடாகப் பணம் வசூலிப்பது என்பது எனக்கு ஒவ்வாத காரியம். நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடு

பட்டு உழைக்கும் ஏழைமக்களின் சிறுதேட்டை வஞ்சித்துக் கைப்பற்றுவதினும், என் இருதயத்தையும் உடற் குருதியையும் சேர்த்துப் பிசைந்து குழம்பாக்கி வட்டித்து அதற்குப் பொன் நாணய உருக் கொடுப்பேன் என்று தெய்வங்கள் சான்றாக உமக்கு உரைக்கின்றேன். படைவீரர்களுக்குக் கொடுப்பதற்காகப் பணம் கேட்டனுப்ப, நீர் மறுத்து நின்றீர். இதுதான் காசியர் செயலோ! காசியர்க்கு யான் இவ்வாறு மறுத்துரைப்பேனோ? அன்பர்களுக்குப் பயன்படாமுறையில் காசுகளைப் பேழையிற் பதுக்கிப் பரதர் சுயநல முற்றவராய் மாறும் நாளில், தெய்வங்கள் அவர்மீது இடிகளை எறிந்து துண்டு துண்டாக்கி, அவர் இருந்தவிடம் தெரியாமல் அழிக்குமாக.

காசி: நான் உமக்குக் கொடுக்க மறுத்தேனோ?

பர: மறுத்தீர்.

காசி: நான் மறுக்கவே இல்லை: எந்த மடையனோ அவ்வாறு உம்மிடம் தெரிவித்திருக்கிறான். பரதர் இன்று என் உள்ளத்தைப் பிளந்து விட்டார்! நண்பர்என்பார் அன்பர் துன்பங்களைத் தாங்கி நிற்பர்; பரதரோ உள்ள துன்பத்தை ஓங்கவைத்தார்.

பர: என்வழியில் தலையிடும்வரை யான் யாதும் புரிந்ததே இல்லை.

காசி: நீர் என்னை விரும்புவதே இல்லை.

பர: உம் குற்றங்களை நான் விரும்புவது இல்லை.

காசி: அன்புள்ள இடத்தில் சிறு குற்றங்கள் புலப்படா.

பர: இச்சகம் பேசித் திரிபவர்க்கே மலையை ஒத்த வழுவும் புலனாவதில்லை.

காசி: ஆநந்தரே உக்கிரசிம்மரே, நீங்கள் என்னைமட்டும் பழி வாங்குங்கள். பண்புடைய அன்பராலும் பகைக்கப்பட்டு, காசியருக்கு இன்று உலகமே கசக்கின்றது: அவர் தமது துணைவராலும் எள்ளப்பட்டார்; அவர் செய்த ஒவ்வொரு குற்றமும் கவனிக்கப்பட்டு, அலசி ஆராயப்பட்டு, கணக்கில் எழுதப்பட்டு, கருத்தில் பதிக்கப்பட்டு, அவரைத் தூற்றுமாறு நிற்கின்றன. ஐயோ, இனி யான் அழுது அழுது இவ்வுயிரைத் தேய்க்கவேண்டியவனே. அதோ என் கத்தி: இதோ மார்பு திறந்திருக்கிறது. இது குபேர சம்பத்தினும் சாலச்சிறந்தது; பொன்னினும் விஞ்சிய மதிப்புடையது; உமக்குப் பொன்தர மறுத்த யான் இன்று என் உள்ளத்தையே உதவுகிறேன்.

நீர் சுத்த உரோமாபுரியராயின் என் உயிரை உடனே வெளிப்படுத்தும். என்னினும் வீரசிம்மனை அதிகம் விரும்பிநின்ற நீர், அன்று வீரசிம்மனை வீழ்த்தியவாறே என்னையும் இன்னே வீழ்த்தும்.

பர: அக்கத்தியை உறையிலிடும். எப்பொழுது வேண்டுமாயினும் நீர் என்மீது சினங்கொள்ளலாம்; அதற்குத் தடையே கிடையாது. உம் விருப்பம்போல் நீர் நடக்கலாம்; உம் குறைபாடுகளைப் பார்த்துச் சிரிப்பதே என் கடனாகும். காசியரே, உம்மோடு தொடர்புற்ற இவர் ஒரு விசை விளக்கு! நீர் அழுத்தினால் நெருப்பு எரியும்; தளர்த்தினால் குளிர்ந்து அமரும்.

காசி: இக்காசிக்கு, இம் முதுமையில், வெறுப்பும் முனைப்புமாக; பரதர் பார்த்து எள்ளி நகைக்கும்படியாக, வாழ விதிபோலும்!

பர: ஏன்? நானும் முன்பு பேசியபோது முனைப்போடுதான் இருந்தேன்.

காசி: அந்த அளவுக்காவது ஒத்துக் கொள்கிறீரே! அதை என் கையில் அடித்துக் கூறும்.

பர: ஏன்! என் மார்பில் அடித்தும் கூறுகிறேன்.

காசி: பரதரே———,

பர: என்ன செய்தி?

காசி: என் தாயாரின் குணம், வெகுளி என்னிலும் தோன்றி நான் என்னை மறக்கும் நிலையில், நீர் என்னை ஆதரித்து அன்பு பாராட்டுவீரா?

பர: அப்படியே செய்கிறேன். இப்பரதர்முன் நீர் பொங்கி நிற்கும்போதெல்லாம், உம் தாயார் குணம் தோன்றுவதாய் நினைத்துப் பாராமுகம் காட்டுகிறேன்.

புலவர்— (உட்புறம்) நான் தளபதிகளைப் பார்க்கவேண்டும்: அவர்களுக்குள் ஏதோ பூசல் நடப்பதாகத் தெரிகிறது: அவர்கள் தனித்திருப்பது தக்க தன்று.

எழிலர்— நீர் அங்குச் செல்லக்கூடாது.

புலவர்— உயிர்போனாலும் சரி: நான் உட்சென்றே தீர்வன்.

(எழிலர் உலூகர் தித்தர் மூவர் தொடரப் புலவர் உள் வருகின்றார்.)

காசி— என்ன இது! ஏது காரணம்?

புலவர்— தளபதிகாள், இதுவோ தாங்கள் செய்யத் தக்கது! வெட்கம்! நான் உங்களினும் சில ஆண்டுகள் மூத்தவன்; ஒன்று சொல்கிறேன்: இருவரும் பெரியவர்கள்; ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்து பெருநெறி தழுவி நில்லுங்கள்.

காசி— இது எங்குள்ள பைத்தியம்! ஒரே வளையாக நீட்டு கிறதே.

பர— பேதையே, அப்பால் போ.

காசி— பரதரே, பொறுமைகொண்டு பெருமை அடையலாம்.

பர— ஏதோ சில சமயங்களில் அவனோடு பொழுது போக்குதல் உண்டு. அது, இடந்தெரியாமல் போர்க்களத்துக்கே வந்து பிதற்று கிறது. ஏ, போ நீ அப்பால்.

ஓடு, ஓடு, இங்கு நில்லாதே. (புலவர் மறைதல்.)

பர— எழிலரே, தித்தரே, நம் படைவீரர்கள் தங்குதற்குப் பாசறைகள் அமைக்குமாறு ஏனைதிகளுக்கு அறிவியும்.

காசி— உடனே சென்று, மாசாலரை உடன் அழைத்து வாருங்கள்.

பர— உலூகா, நல்லதாய் ஒரு கிண்ணம். (மது)
(உலூகன் மறைகிறான்.)

காசி: தங்களுக்கு இத்துணை சினம் தோன்றும் என யான் எண்ணியதே கிடையாது.

பர: எனக்குள்ள கவலைகள் மிகப்பல.

காசி: உற்ற கவலையில் அமைதியை இழந்தால், பெற்ற கல்வி ஆராய்ச்சியின் பயன்?

பர: யான் உற்ற கவலை பெரிது; ஊர்வசி இறந்துவிட்டாள்.

காசி: ஆ! ஊர்வசி இறந்தாளா?

பர: ஆம், அவள் இறந்துவிட்டாள்.

காசி: இப்படிப்பட்ட நேரத்தில், என் இடையூறுகளுக்கு என்னை நீர் கொல்லாது விட்டதே பெரிது. ஐயோ, தாங்க முடியாத பெருந்துன்பம், என்ன செய்ததோ?

பர: என் பிரிவாற்றாமையே. உக்கிரசிம்மனும் ஆனந்தரும் மிக்க படைப்பலங் கொண்டார் என்ற கவலை ஒருபக்கம். அந்த ஏக்கத் தால் புத்தி மாறுட்டமாகி, யாருமில்லா நேரத்தில் நெருப்புக்கு இரை யானாள்.

காசி: என்ன! நெருப்புக்கு இரையா?

பர: ஆம், அவ்வாறுதான்.

காசி: ஐயோ, தெய்வமே.

(உலூகன் மது, விளக்கு ஏந்தி வருதல்.)

பர: அந்தப் பேச்சு இனி வேண்டா. அந்த மதுவை இப்படிக் கொடு. இதோ எல்லா வருத்தத்துக்கும் ஒரே முழுக்கு.

(மது அருந்துதல்.)

காசி: என் உள்ளத்திலும் இதே வேட்கைதான். உலூகா, கிண்ணம் நிறைந்து வழிய ஒன்று கொடு. எவ்வளவுதான் யான் அருந்தினாலும், அது பரதர் அன்புக்கு ஈடாகி நிற்காது.

பர: தித்தரே, உள்ளே வாரும்.

(உலூகன் மறைதல். தித்தர் மாசாலர் வருதல்.)

மாசாலரே, இவண் வருக. நாம் இவ்விளக்கண்டை அமர்ந்து, ஆகவேண்டுவ பற்றிச் சிறிது ஆராய்வோம்.

காசி: ஐயோ, ஊர்வசி மறைந்து போனாள்!

பர: காசியரே, அது வேண்டா. மாசாலரே, உக்கிரசிம்மனும் ஆனந்தரும் பெரும் படையுடன் நம்மை எதிர்த்து வந்திருப்பதாகக் கடிதங்கள் பெற்றுள்ளேன். பலிபுரத்தை நோக்கி அபபடைகள் செல்லும்போதும்.

மாசா: யானும் அம்முறையில் கடிதங்கள் பெற்றுள்ளேன்.

பர: வேறு ஏதாவது செய்தி உளதோ?

மாசா: உக்கிரசிம்மர், ஆநந்தர், லோபியர் மூவராலும் நகர்ப் பெருமக்கள் நூற்றுவர் தேசத்துரோகிகளாக அறிவிக்கப்பட்டு ஆவி பிரிக்கப்பட்டார்கள் என்றும் செய்தி.

பர: அவ்வாறாயின் நம் கடிதங்கள் சற்று முரண்படுகின்றன. எனக்கு வந்த கடிதங்கள் கொல்லப்பட்டவர் எழுபதுபேர் என்றும் அவர்களுள் சிசிரர் ஒருவர் என்றும் அறிவிக்கின்றன.

காசி: பிசிரும் அவர்களில் ஒருவர்!

மாசா: தேசத் துரோகியாகக் குற்றம் சாட்டப்பட்டுப் பிசிரர் மறைந்தார். தங்களுக்கு வந்த கடிதங்கள் அம்மையார் எழுதியவையோ?

பர: அவ்வாறு ஒன்றும் இல்லை.

காசி: கடிதங்களில் அம்மையாரைப் பற்றிய செய்தியாவது இல்லையா?

பர: யாதும் இல்லை.

மாசா: இது மிக்க விபரீதம்!

பர: ஏன் அவ்வாறு? அவளைப்பற்றிய செய்தி யாதும் கொண்டுள்ளீரோ?

மாசா: இல்லை, தேவா, இல்லை.

பர: சுத்த ரோம வீரனாக உம்மை மதித்து உண்மை உரையும்.

மாசா: உத்தம ரோமவீரனாக நான் உண்மையை உரைக்கிறேன். அவர் இறந்தார். எவ்வாறோ இறந்து போனார்.

பர: ஊர்வசி, உன்னைப் பிரிந்தேன்! மாசாலரே, நாமும் ஒரு நாள் மறைய வேண்டியவர்களே. அவள் இறந்ததை எண்ணி எண்ணி, யானும் இறப்பின் அச்சத்தை அகற்றியவனானேன்.

மாசா: பெரியவர்களுக்கு உறுவது பெரியதாகவே இருக்கிறது.

காசி: பற்றற்று நிற்கிற பரம ஞானமெல்லாம் யானும் உம்மைப்போலவே பேசுகிறேன்: ஆனால் நடைமுறையிற் கொள்ளத்தான் முடிகிறதில்லை.

பர: சரி; இனி ஆகவேண்டியதைக் கவனிப்போம். பலிபுரம் நோக்கி உடனே படையெடுக்க எண்ணம் உண்டோ?

காசி: அது தக்கதாக எனக்குத் தோன்றவில்லை.

பர: காரணம்?

காசி: பகைவர் நம்மை நோக்கி வருமாறு இடங்கொடுப்போம். அதனால் அவர்கள் உணவுப் பொருளும் ஊக்கமுந் தளர்ந்து தமக்குள்ளாகக் குழப்பங்கள் காண்பர். நாம் இருப்பில் நல்லோய்வு பெற்றிருப்பதனால், அதி ஊக்கமாய்ப் பகைவரை எதிர்க்கவும், நம்மைக் காக்கவும் இங்கிருப்பதே தக்கதாகும்.

பர: 'தக்கது' அதனினும் மிக்கதற்கு இடந்தருவதே சாலுடைத்து. பலிபுரத்துக்கு இப்பால் உறையும் மக்கள் அச்சத்தால் நமக்கு உறவு காட்டுகின்றனரே அன்றி அன்பினாலன்று. அவர்கள் நம் படைவீரரின் நலங்கொண்டு உளம்மகிழார். நம் பகைவர் அவ்வழி வருவாராயின், நம் பகைவர்க்குப் படை, பணம், உணவு, ஊக்கம் இன்னும் வேண்டுவ யாவும் விழைந்து நல்குவர். ஆதலின், நாமே பலிபுரத்தைச் சேர்வோமாயின், இவர்கட்கும் அவர்கட்கும் தொடர்பு ஏற்படா முறையில் தடுத்தவராவோம். அதுதான் நமக்கு நற்பயன் விளைப்பதாகும்.

காசி: அண்ணா, நான் சொல்வதைக் கவனிக்கவேண்டும்.

பர: சற்றே பொறுங்கள். நமக்கு வேண்டியவர்களிடமிருந்து பெறக்கூடிய யாவற்றையும் பெற்றுவிட்டோம்: படைப்பெருக்கமும் உச்சத்திலிருப்பதனால் இதுவே பொருதற்கேற்ற காலம். பகைவர் தம் பலத்தை நாளுக்குநாள் பெருக்குகின்றனர். உச்சத்தின் எல்லை கண்ட நம் படை இனி இறங்கவேண்டியதே உண்டு. ஆகவே காலவேகத்தில் நம் ஆகூழைப் பயன் படுத்தி நன்மை காண்போம். நல்ல வாய்ப்பை நழுவவிட்டால் பின்வாழ்வெல்லாம் அல்லற்பட்டு அழுந்த வேண்டியதாகும். காலம் இன்று நமக்கு அநுகூலமாயிருக்கின்றது; இப்போது ஏறிச்செல்லாமல் வறிதே இருந்தோம்,! இருப்பதையும் இழப்போம் என்பது உறுதி.

காசி: திருவுள்ளக் கருத்துப்போன்றே நடத்துக: நாங்களும் நேர் நடந்து பலிபுரத்தை வந்துசேர்கிறோம்.

பர: பேசிப் பேசி நள்ளிரவு ஆகிவிட்டது. உறக்க நேரம்: தலை தானாகக் கிரக்கம் ஆகிறது. சரி, வேறு செய்தி உளதோ? ஒன்றுமே இல்லை?

காசி: யாதும் இல்லை. வைகறையில் எழுந்து அவண் நோக்குவோம்.

பர: உலூகன்! (வருகிறான்) என் போர்வையை எடுத்துவா. (அகல்கிறான்) மாசாலரே, நல்லேம்; தித்தரே, நல்லேம்; காசியப் பெருந்தகையீர், நல்லேம் நல்லேம். போய் நல்லுறக்கங் கொள்வோம்.

காசி: பரத அண்ணு, இற்றைநாள் இராப்பொழுது தொடக்கத்தில் சிறிது கசப்புக் காட்டிற்று; இனி நமக்குள் எத்தகைய பிளவும் ஏற்படக் கூடாது.

பர: யாவும் நன்மைக்கே.

காசி: அண்ணல், நல்லேம்.

பர: நல்லீர்! நல்லேம்.

தித், மாசா: பெருந்தகையீர், நல்லேம்.

பர: நல்லேம்; யாவர்க்கும் நல்லம்.

(காசியர், தித்தர், மாசாலர் அகல்தல். உலூகன் போர்வையுடன் வருதல்.)

பர— போர்வையை இப்படிக் கொடு; சரி, உன் குழலை எங்கே?

உலூ— அது பாசறையில் இருக்கிறது.

பர: அடே பையா, ஏனடா தூக்க அசதி? சரி, உன்னைக் குறைகூறுதற்கில்லை; நெடுநேரம் கண்விழித்துள்ளாய். களத்திறரையும் நம்மவர் வேறு சிலரையும் கூப்பிடு அவர்கள் இங்கே மெத்தையில் நித்திரை செய்யட்டும்.

உலூ— வேரியர்! களத்திறர்!

வேரி— அண்ணல், அழைத்ததுண்டோ?

பர— ஐயன்மீர், ஈண்டு என் அறையுள்ளே உறக்கங்கொள்வீர்களாக. இரவில் அன்பர் காசியருக்குச் செய்தி அனுப்ப உங்களை எழுப்பவேண்டியதாயிருக்கலாம்.

வேரி— வேண்டுமாயின், விழித்திருந்தே தங்கட்கு வினையாற்றுகிறோம்.

பர— வேண்டா. அது வேண்டா. ஒருகால் யாதும் அனுப்பவே வேண்டியதிராது. ஏன் உறக்கத்தை வீணே கெடுக்கவேண்டும்? உலூகா, இதோ நான் தேடின புத்தகம்! இந்தச் சட்டைப்பைக்குள்ளே வைத்திருக்கிறேன். (வேரியர் களத்திறர் படுத்தல்.)

உலூ— தாங்கள் அதை என்னிடத்தில் கொடுக்கவே இல்லை.

பர— சரிதான்! பையா, எனக்கு மறதி அதிகமாகிவிட்டது. சரி. நீ சற்றே உன் தூக்கத்தைப் பாராமல் குழலை எடுத்து ஒன்றிரண்டு வாசிக்கிறாயோ?

உலூ: நல்லது, தங்களுக்கு வேண்டியதாயின் வாசிக்கிறேன்.

பர: வேண்டியதாய்த்தான் இருக்கிறது. உனக்குத் தொந்தரவு தான் கொடுக்கிறேன். நீ 'இல்லை' என்னுமல் எல்லாம் செய்து உதவுகிறாய்.

உலூ: அது என் கடமை தேவா.

பர: இருந்தாலும் உன் உடல் நலங்குன்றுமாறு நான் வேலை வாங்கக் கூடாது. இளங்குருதி நல்ல ஓய்வுபெற வேண்டியதாகும்.

உலூ: தேவா, நன்றாய் ஒரு தூக்கம் தூங்கியிருக்கிறேன்.

பர: நல்லதே செய்தாய். மீண்டும் போய் நன்றாய் உறங்கு. இன்னும் உன்னை இங்குத்தாழ்த்தமாட்டேன். நான் உயிர் வாழ்வேனாயின் உன் நன்றியை மறவாது தக்க நலம் பயப்பேன்.

(உலூகன் குழல் ஊதிப் பாடுகிறான்.)

உன் இசை என்னை உறங்க வைக்கிறது. உயிரை நீக்கும் உறக்கம்! ஏ. நித்திராதேவி, நீ உன் மந்திரக்கோலை இதோ என் செவிக்கு இன்னிசை நல்கும் இச்சிறுவன் பார்வையில் வீசு. பையா, நான் உன் தூக்கத்தைக் கெடுத்துத் தொந்தரவு செய்ய விரும்பேன். உன் தலை சற்றே சாயினும் குழல் உடைவது உறுதி. ஏன், நானே அதைக் கைக்கொள்கிறேன்!

பையா, நல்லேம். சரி, யான் எப்பக்கத்தில் வாசித்துவிட்டேன்? அதை மடித்து அடையாளம் வைக்கவில்லையா? ஓ, இதோ இருக்கிறது! (உட்கார்தல்.)

(வீரசிம்மன் ஆவியின் தோற்றம்.)

விளக்கும் மங்க, வெளிச்சம் குறைய;—
யார் இது? இருளில் எனெதிர் வருவது?
நோய்ம்மையால் கண்களில் பொய்ம்மை மருட்சியோ?
அஞ்சுமால் நெஞ்சம்! யாவனோ நீ தான்?
தேவனோ, வித்தியா தரனோ? பேயோ?
உடலும் குளிருமால், உரோமம் சிலிர்க்குமால்.
யான்அஞ் சுவனல்! யாவன் நீ, உரைத்தி.

ஆவி: பரதரே, யான்நும் பாழ்த்த தீக்குணம்.

பர: நீவரக் காரணம்?

ஆவி: பலிபுரத் தில்நீர் என்னைக் காண்பீர்
என அறிவிக்கவே.

பர : நன்றுஅவ் விடத்தே யான்உனைக் காண்பேன்.

ஆவி : நன்று நன்று பலிபுரம் வந்துபார் :

பர : நன்று பலிபுரம் வந்துபார்க் கின்றேன். (*ஆவி மறைகிறது.*)
நீயும் மறைந்தனை : யானும் தெளிந்தேன்.
தீக்குணச் சாயையே, உன்னுடன் பேசவே
இன்னும் விழைகிறேன் : பையா, உலூகா,
வேரியர் ! களத்திறர் ! யாவரும் எழுமின் !

உலூ : *தேவா குழல் உடைந்து நாதம் நன்றாயில்லை.*

பர : *ஓ, இன்னும் வாத்தியம் வாசிக்கிறதாய் எண்ணமோ? உலூகா, கண்ணைத் துடை.*

உலூ : *தேவா.*

பர : உலூகா ; நீதான் கனுக்கண் டனையோ?
கதறிய தேனோ ?

உலூ : யாது கதறினேன் எனஅறி யேன்யான்.

பர : கதறினுய். அஃதும் நன்று.
கண்டனை கொல்லோ யாதும் ?

உலூ : யாதும் கண்டிலன் தேவா,

பர : உலூகா, நீதான் உறங்கு. களத்திறர்,
வேரியர், விழியும், எழுமின், எழுமின்.

வேரி : தேவா ! (களத்திறர்) தேவா !

பர : தூக்கத்தில் நீங்கள் ஏனே கதறினீர் ?

இருவரும் : யாம் கதறினேம் ! அறியோம்.

பர : கண்டீர் கொல்லோ யாதும் ?

வேரி : யாதும்யான் கண்டிலன் :

கள : யானும் கண்டிலன்.

பர : *அன்புடைய காசியரிடம் சென்று, அவரை முதலிற் புறப் படுமாறும், யாமும் உடன் தொடர்ந்து வருவதாகவும் அறிவிப்பீர்க ளாக.*

இருவரும் : *அவ்வாறே செய்கிறோம் தேவா.*

களம் 5. காட்சி 1.

(இடம் :—பலிபுரத்துப் பரந்தவெளி. ஆனந்தர், உக்கிரசிம்மர், படைகள் வருதல்.)

உக் : *ஆநந்தரே, யான் கூறிய வண்ணம் நடந்தேறியது. பகை வர்கள் பலிபுர வெளிக்கு வரமாட்டார்கள் ; மேல் மலையில் தங்கி விடுவார்கள் என்றீரே ; இப்போது காரியம் நேர் மாறு ! நாம் அவர் களை எதிர்க்கு முன் அவர்களே கீழ்இறங்கி நம்மை எதிர்க்கத் துணிந்து விட்டனர்.*

ஆந : *பூஉ ! அவர்கள் உள் உளவெல்லாம் யான் அறிவேன். நாம் அவர்களைப் பெரிதாக நினைக்கவேண்டுமென்று, பக்கச்சார்பில் வெற்று வேட்டு முழக்கி நிற்பார்கள். உண்மை, அதற்கு நேர்மாறு.*
(*தூதன் வருகிறான்.*)

தூதன் : *பெரியீர், அதோ நம்பகைவர் ஆரவாரத்துடன் பெரும் படைகொண்டு வருகின்றனர் : போரின் அறிகுறியாகச் செங்கொடி தூக்கிவிட்டனர், நாமும் உடனே தயார் ஆகவேண்டும்.*

ஆந : *நீவிர் நுமது படையை இடப்பக்கமாக மெல்லச் செலுத்தும்.*

உக் : *யான் வலப்புறத்தைக் கொள்கிறேன் ; நீவிரே இடப் புறத்தை நோக்கும்.*

ஆந : *மிக்க நெருக்கடியான இந்நேரத்திலுமோ முரணுதல் ?*

உக் : *யான் யாதும் முரணுகில்லேன் ; வலப்புறம் செல்வதாக அறிவிக்கிறேன்.*

(*பேரிகை முழக்கம். படை நகர்கிறது : பரதர், காசியர், படை, எழிலர், தித்தர் மாசாலர்.*)

பர : *அதோ நின்று விட்டனர் : சந்து பேசக் கருதுவார்போலும் !*

காசி : *தித்தரே நாம் முன்னேறுவோம் : பின்னர் பேசிக் கொள்வோம்.*

உக் : *ஆநந்தரே, போர்த் தொடக்கத்துக்குத் தும்பை தோற்று விக்கலாமோ ?*

ஆந: உக்கிரா, வேண்டா. அவர்களின் தாக்குதல் கண்டே நாம் நடாத்துவோம். இப்பொழுது முன் நடப்போம்: தளபதிகட்கு அறிக்கை ஏதேனும்?

உக்: (படைக்கு) நிற்பீர்! அடுத்துக் குறிக்கும்வரை இவ்விடமே நிற்பீர்!

பர: தாக்குதலுக்குமுன் வாக்குப் பரிமாற்றமோ?

உக்: உம்மைப் போன்று ஆக்க முறையிலேயே ஆர்வம்; வாக்கிலன்று.

பர: உக்கிரா, பயனற்ற தாக்குதலினும் நயமான வாக்கு முறையே சிறந்ததாகும்.

ஆந: பாதரே, தீயன் ஆற்றும் காலத்தும் நேயவாக்கு காட்டுபவர் நீர். வீரசிம்மன் வாழ்க என்று மாராயங்கூறி அவன் மார்பில் குத்தி நின்றவர் அல்லீரோ!

காசி: ஆநந்தரே, இன்னும் நீர் யார் யார் மீது கண்வைத்திருக்கிறீரோ அறியோம். உம் வாய்மொழி மட்டும் ஈக்கு இம்மியும் இல்லாமல் எடுத்துத் திரட்டிய மலைத்தேன்தான்!

ஆந: அதன் கொட்டுவாயும் இல்லாமலோ?

பர: ஆமாம்; வாயும் அதன் இரைதலும் சேர்த்தே எடுத்தீர்! அதனாலன்றோ தாக்குதலுக்கு முன் வாக்குவளத்தால் அச்சுறுத்துகின்றீர்.

ஆந: பேடிகள்! கத்திகள் ஒன்றோடொன்று உராய நீங்கள் வீசி, வீரசிம்மனைக் குத்தி வீழ்த்தியபோது முன் அறிவித்தீர்களோ? குரங்குபோலப் பல் இளித்து நின்று, வேட்டை நாய்போல் விரைந்து பாய்ந்தீர்கள்! வீரசிம்மன் திருவடிகளில் அடிமைகள் போல் முடி சாய்த்துப் பணிந்து நின்றீர்கள்! முழுக்கயவன் கீசகன் கேவலம், பூனைபோல் பின்பதுங்கிக் கிடந்து வீரசிம்மனின் கழுத்தில் கத்தியை இறக்கினான்! இப்பொழுது வீண் ஆரவாரம்! போலிமக்கள்.

காசியர்: 'போலி மக்கள்'! பாதரே, இதற்கெல்லாம் நீவிரே காரணம், அன்று இக்காசியர் சொல்லைக் கேட்டிருந்தால் இத்தகைய சொற் கேட்க நேருமா?

உக்: நடக்க வேண்டியதைக் கவனிப்போம். வாக்குப் பரிமாற்றத்திலே வியர்வை கொட்டுமாயின் பின்னர் நடப்பது செந்நீர் சிந்தவைக்கும். இதோ சதிகாரருக்கு எதிராக என் வாளை நீட்டுகிறேன். இது மீண்டும் உறையிடப் பெறுவது எஞ்ஞான்று? ஒன்று வீரசிம்மனின் உடலிற் றோன்றிய முப்பத்துமூன்று காயங்களுக்கும் பழிவாங்கித் தீரவேண்டும்: இன்றேல் இவ்வுக்கிரசிம்மனும் பழிகாரர் வாளுக்கு இரையாகிக் கொலைப்பட்டவரின் எண்ணம் ஒன்று அதிகம் ஆகவேண்டும். அவ்வாறன்றி இவ்வாள் உறைபெறாது.

பர: உக்கிரா, உன்னைக் கொல்வதற்கு, நீ கூறியவாறு எங்களிற் 'பழிகாரர்' யாரும் இலர்.

உக்: அதே என் எண்ணமும். இவ்வுக்கிரசிம்மன் பாதர் கையினால் இறப்பதற்குப் பிறந்தவன் அல்லன்.

பர: பெருங்குலத் தோன்றலாக விளங்குவாருக்குஅன்றி ஏனையோருக்கு அப்பேறு கிட்டுவதன்று.

காசி: அந்தோ, அறியாச்சிறுவன்; பாதர்கையாற் படுதற்குத் தகுதியற்றவன்! கூத்துக் களியனுடன் கூட்டுறவு கொண்டவன்!

ஆந: காசியரே, பழையபடியே இன்னும் இருக்கிறீர்!

உக்: ஆநந்தரே, வெளிக்கிளம்பும்; பழிகாரர்களே, எதிர்த்து வாருங்கள்; உங்கள் பல் இடுக்கில் இப்பொழுது இருக்கிறோம். போர் புரியத் துணிவு இருப்பின் களத்தில் கால் எடுத்துவையுங்கள்; இன்றேல் நீங்கள் விரும்பும் நாளில் ஆற்றலாம்.

(உக்கிரன் ஆநந்தர் படைகள் அகல்தல்.)

காசி: பெரும் புயலும் கடுங் கொந்தளிப்பும்! இந்நிலையில் கப்பல் கவிழ்வதோ, படர்வதோ? யாவர்கதியும் அதோகதிதான்!

பர: எழிலர், இதோ உம்முடன் தனித்து ஒரு வார்த்தை.

(இருவரும் தனித்தல்.)

காசி: மாசாலரே,

மாசா: ஐயன் அருள்வது யாதோ?

காசி : மாசாலரே, இந்நாள் எனது பிறந்தநாள் :
பிறந்தநாள் இதுதான் பெருமங்கலநாள்.
மாசாலரே நீர்நம் கையிணை சேரும்.
அன்று பாம்பேயன் நயம்அற் றது என
அறிந்தும் பொருதஅம் முறைபோல், இன்று
உள்ளம் ஒவ்வாமலே உஞற்றிய போர் இது
என்னும் முறைக்கு நீவிரே சான்று.
உலகந் தழுவிவாழ் ஒட்ப நெறியன்யான்
உறுவது காட்டும் குறிகளை உணர்தலின்
திறம்பினேன் உள்ளம் : சதுரகிரி விட்டு
வருகையில் படைஅணி முற்படு கோடிமேல்
கோழுத்த கழுகுகள் இரண்டுவீழ்ந் தமர்ந்தன,
வீரர்கை உணவை விடக்கேன் றருந்திப்
பலிபுரத் திற்கும் அவைஉடன் வந்தன.
இற்றைக் காலையில் அவைதாம் மறைந்தன.
ஆங்குஅவ் விடத்தே அண்டங் காக்கையும்
பருந்தும் காகமும் தலைமேல் பறந்து
நம்மையே பிண்டமா யுண்ணுவ போல்வன :
அவைபடர் நிழல்பெருங் குடைபோல் மேலுற
படை அதன் அடிப்படல் பாடுறல் காட்டுமால் !

மாசா : அவ்வா றெண்ண வேண்டிய தில்லை.

காசி : இடர்ப்பா டுறின்அதை ஏற்கும் திட்பமும்
தொடர்ந்து வினைசெய் ஊக்கமும் உடையயான்
நிமித்தம் சிறிதள வுண்மையே உரைப்பதாய்க்
கருதுவேன். தங்களின்...........

பர : அதுவும் சரிதான், எழிலரே ....

காசி : பெருந்தகையீர், பாதரே, இன்று தெய்வங்களும் அமைதி காட்டுகின்றன. சமாதானத்தை விரும்புகிற நாமும் அவ்வாறே நம் காலத்தைஎல்லாம் கழிப்பின் நன்றாகும். ஆனால் உலகில் மனிதன் நினைப்பதற்கு மாறாகவே காரியங்கள் நடைபெறுகின்றன. நாம் இறுதிப் பெருந் தீங்கினுக்கு ஆளாவதாகவே வைத்துச் சற்று ஆய்வோம். இன்று போரில் தோல்வி உறுவோமாயின், இறுதியாக

நாம் இருவரும் கலந்து கொள்வது இதுவே ஆகும். இதனைப்பற்றித் தங்கள் கருத்து ?

பர : 'கவரி மா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' என்ற நெறியில் காத்தவீரியன் அந்நாள் தனது உயிரை மாய்த்தபோதும், யான் அதனைப் பாராட்டவில்லை. பொறுமை பூண்டு உலகத்தை அடக்கி ஆளும் ஊழியர், பேராற்றல் தம்மை ஆட்கொள்ளும் நாளை எதிர்நோக்கி யிருப்பதன்றி ; தம் உயிருக்கு என்ன நேருமோ என அஞ்சித் தமது வாழ்வை முடித்துக் கொள்வாராயின் அவர்கள் அற்பக் கோழைகள் என்றே கருதுகிறேன்.

காசி : அவ்வாறாயின் இன்று போரில் தோல்வி கண்டால், வெற்றிக் குழுவுடன் ரோமாபுரி வீதி வழியாக நடந்து செல்ல எண்ணமோ ?

பர : கிடையாது. காசியரே, உரோமாபுரி வீர, பாதர் கைகட்டி வழிநடப்பார் என்ற எண்ணமே வேண்டா. அவர் விரிந்த மனப்பான்மையுடையவர். அன்று மாசிபபௌர்ணமியில் தொடங்கிய பெருவினையை இன்று முடித்தாதல் வேண்டும். நாம் மீண்டும் ஒன்று கூடுவோம் என்று உறுதி கூறுவதற்கில்லை : ஆதலின் இன்னே விடைபெறுகின்றேன். காசியரே, பெரும்பிரிவாகக் கருதியே இறுதியாக விடைபெறுகின்றேன். ஒருகால் நாம் ஒருவரை ஒருவர் காண நேர்ந்தால் அங்குச்சிரிப்போம் ; நேராவிடின் இவ் விடைகோடலே சாலச் சிறந்ததாகும் !

காசி : பாதரே, விடைபெறுகின்றேன். பெரும் பிரிவு கருதியே விடைபெறுகின்றேன். மீண்டும் ஒன்று கூடினால் உண்மையாகவே நாம் சிரிப்போம் : இன்றேல் இவ் விடைகோடலே சாலச் சிறந்ததாகும் !

பர : ஆயின் நன்று. நம் படைகளைச் செலுத்துக. பொழுது சாய்வதற்குள் இற்றைநாள் நடப்பை அறிந்துரைக்க நமக்கு ஒருவர் வேண்டும். நாள் கழியட்டும், நடப்பு தானாக வெளிவருகிறது ! கிளம்புங்கள், கிளம்புங்கள்.

களம் 5. காட்சி 2.

(இடம் :—போர்க்களம்.)

பரதர்— மாசாலரே, ஓடும் ஓடும். அடுத்த சிறைப் படைஞரிடம் கொண்டு சேரும். அவர்கள் உடனே எதிரியைத் தாக்கட்டும். அதோ உக்கிரசிம்மன்படை உள் உடைந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு திடீர்த்தாக்குதல் அவர்கட்குப் பெருந்தீங்கு அளிக்கும். மாசாலரே, ஓடும், ஓடும், நம் படைஞர் விரைந்து இறங்கி வினையாற்றட்டும்.

களம் 5. காட்சி 3.

(இடம் :—போர்க்களத்தின் மறுபுறம்.)

(போர்முழக்கம். காசியரும் தித்தரும் வருதல்.)

காசி— தித்தர், அதோபாரும். இக்கோழைகள் பின்வாங்கி ஓடுகின்றனர்; நானே அவர்கட்கு யமனாக நிற்கிறேன். தூசிப்படையின் கொடிதாங்கியும் பின்னிட; அவனையும் கொன்று யானே கொடிதாங்கி முன் செல்கின்றேன்.

தித்— காசியரே, பரதர் படைஎடுப்பிற் சிறிது அவசரப்பட்டு விட்டார். உக்கிரசிம்மன் தளர்ச்சி கண்டு, அதை ஒடுக்க உடனடியாகத் தொடங்கினார். அவர்படைகள் பகைவரைக் கொள்ளை கொண்டன; ஆனால் ஆனந்தரின் படைகள் நம்மை வளைத்துக் கொண்டன. (பண்டையர் வருதல்.)

பண்— இவ்விடத்தைவிட்டகலுங்கள். ஐயனே, உடனே அகலுங்கள். தங்கள் பாசறைக்குள் ஆநந்தர் புகுந்துவிட்டார்; உடனே அகன்று எட்டாத்தூரத்துக்கு ஏகுங்கள்.

காசி— எட்டாத்தூரம இப்பெருங்குன்றுதான். அதோபாரும், தித்தரே, அங்குத் தீப்பற்றி எரிகிறது எனது பாசறை அல்லவா?

தித்— நமதே, தேவா.

காசி— தித்தரே, நான் உமக்கு வேண்டியவன் ஆயின், உடனே ஒன்று செய்யும். குதிரை இவர்ந்து பெருவேகத்திற் சென்று அதோ நிற்கும் படையணியை அடைந்து; அது பகைவரதோ நம்மதோ எனத் தெரிந்துவந்து அறிவித்து, என்மனம் ஆறுதலடையச் செய்யும்.

தித்— இதோ மனோவேகத்திற் சென்று வருகிறேன். (அகல்தல்)

காசி— பண்டையர், என் பார்வை மங்கலாக இருக்கிறது: நீர் சென்று அங்கு அக்குன்றின்மீது ஏறி, தித்தரைக் கவனித்துப் போர்க்களத்து நடப்பை எனக்கு அறிவியும்.

(பண்டையர் குன்று ஏறுகிறார்.)

உலகில் யான் முதல்முதல் உயிர்த்தநாள் இந்நாள். காலச் சக்கரச் சுழற்சியில் மீண்டும் பிறந்தநாள் வந்தது: இறந்த நாளும் இஃதே ஆம். வாழ்வுக் கலம் இன்று உடைந்தது. பண்டையர்,

பண்— (மலையிலிருந்து) தேவா,

காசி— நடப்பு என்ன?

பண்— தித்தரைச் சுற்றிக் குதிரைப் படைவீரர் தொடர்கின்றனர். அவர் வேகமாய்ப் பறக்கிறார்: வீரர் நெருங்கிவிட்டனர், சிலர் குதிரையினின்றும் இறங்குகின்றனர். தித்தரும் இறங்குகிறார். ஐயோ! தித்தர் கைப்பற்றப்பட்டார்! (ஆர்ப்பு) அதோ கேளுங்கள் வெற்றியின் ஆரவாரத்தை.

காசி— பார்த்ததுபோதும். இறங்கி வாரும். என்முன்னாக இன்னுயிர் அன்பரைப் பற்றலர் பற்றப் பார்த்து உயிர் வாழ்கிறேன். கோழையேன், பாவியேன் கோழையன்!

(பண்டையர் இறங்குதல்)

ஐய, நீர் இங்கு அருகினில் வாரும்.
அந்நாள் பார்த்தவப் போரில் உம்மை
அடிமையாய்ப் பற்றினேன்: உயிருக்கு ஊறு
புரியேன் என்று உறுதியும் கூறினேன்.
யான்சொல் ஏவலை ஆற்றி நிற்றலே

நம்கடன் ஆக்கினீர் : இன்றும் அதுசெய்யும்.
உரிமை அடைந்தீர், அடிமை களைந்தீர்,
வீர சிம்மனின் வயிற்றிற் பாய்ந்த
கத்தி இதனால் என்னைநீர் குத்தும் ;
பேச்சு வேண்டா, பாய்ச்சும் : என்முகத்தை
மூடிக் கோள்கிறேன் கத்தியை நீட்டும்.

(குத்துகிறார்)

வீரசிம்மா,
உன்னைக் குத்திய அதேஎ கத்தியால்
இன்றே பழிக்குப் பழிவாங்கி விட்டாய் !

பண்— அடிமை வாழ்வு அகன்றது : எக்காரணத்தை முன்னிட்டும் இத்தகைய ஒரு செயல் ஆற்ற என் மனம் ஒருப்படாது. காசியரே, பண்டையன் இனி இங்கு இரான் : ரோமாபுரி மக்களின் கண்ணுக்கு எட்டாத் தேசத்துக்கு அவன் இன்னே அகல்கிறான்.

(அகல்தல்)

மாசா— தித்தரே, பாதர் படைகள் உக்கிரன் படையை மடக்கின : அதேபோல் ஆநந்தரின் படைகள் காசியர் படையை அடக்கின. ஒன்றுக்கொன்று சரிசமம் ஆயிற்று.

தித்— இச்செய்தி கேட்டால், காசியர் பெரிதும் மகிழ்வார் !

மாசா— நீர் புறப்படும்போது, அவரை எங்கு விட்டு வந்தீர் ?

தித்— அவர் இம்மலைமீதே, மிக உள்ளம் உடைந்தவராய் ; தனது அடிமை பண்டையனோடு இருந்தார்.

மாசா— அதோ தரைமீது சாய்ந்து கிடப்பது அவரல்லரோ ?

தித்— ஆமாம். ஐயோ ! என்ன இது ! உயிரோடு கிடப்பவராகத் தெரியவில்லையே.

மாசா— அது அவர்தாமா ?

தித்— அது அவர்தாம். மாசாலரே, காசியர் மறைந்தார். மாலையிற் கதிரவன் செவ்வொளி பரப்பித் தன்னை மறைத்துக்கொள்வதுபோல, காசியப் பெருமணியே, செங்குருதி வெள்ளத்தில் மூழ்கி

நீர் ஆவி நீத்துநிற்கின்றீர். ரோமாபுரியின் விளக்கு அணைந்தது. நம் வாழ்வு நசித்தது. இடர்ப்படல இருளும் பனியுமே இனி யாண்டும் படரும். என் வேலையை முடித்து நான் வெற்றிபெற்று மீள்வதில் ஐயப்பாடு உற்றே காசியர் இவ்வேலை செய்துகொண்டார்.

மாசா : அவலத்தாய் ஈனும் அறிவுத் தடுமாற்றமே, நொந்த மக்களின் கண்களில் ஏனோ, நீ இல்லாதவை எல்லாம் ஏற்றி நிற்கின்றாய் ? பொல்லாப்புகள் பிறப்பித்துக் கொல்லுதலன்றி, நீ என்றும் நல்லன புரிந்து நயந்தருவாயல்லை.

தித்— பண்டையர், பண்டையர், எங்கே காணோம் ?

மாசா— நீர் அவரைத் தேடும். பெருந்தகை பாதர் காதுகளில் இச்செய்தியை எவ்வாறு ஏற்றுவது ! ஈட்டிகொண்டு குத்தியது போலும், காய்ச்சிய நாராசத்தை வார்த்ததுபோலும் இது அவர்க்கு வேதனை செய்யும்.

தித் : மாசாலரே, விரைந்துசென்று அறிவியும். நான் பண்டையரைத் தேடுகிறேன். (மாசாலர் அகல்தல்)

வீரமிகுந்த காசியரே, ஏனோ நீர் என்னை அப்பால் அனுப்பினீர். யான்சென்று உம் அன்பர்களை அடைந்தேன். அவர்கள் எனக்கு மாலை மாராயஞ் சூட்டி, இம்மாலையை உம்மிடம் சேர்க்க வேண்டினர். அவர்களின் வெற்றி ஆரவாரம் உம் காதுகளுக்கு எட்டவில்லையா ? ஐயோ, எல்லாம் தவறாக நினைத்துவிட்டீரே ! ஐயனே, இதோபாரும் ; இம்மாலையை உம் சிரமீது தாங்கும் ; இது உமது பிரிய பாதரால் உமக்கு அளிக்கப்பட்டதாகும் : நான் ஆணைப்படி செய்யவேண்டியவன். பாதர் பெருமானே, விரைவில் வாரும். காசியரை நான் கண்ணியப்படுத்தியதை உம் கண்கொண்டு பாரும். ஆ, தெய்வங்களே, இனியான் ரோம் நகரிற் பிறந்த வீரமகனாக வினையாற்றுகின்றேன் ! காசியரின் வீரவாளே, வா. தித்தரின் மார்பை நாடு. (குத்துகிறார்.)

(போர்ப்பறை. மாசாலர், பாதர், காத்தகுமாரன், சாதர், வேல்மானவர், எழிலர் வருதல்.)

பா— மாசாலர், எங்கே அவர் திருவுடல் ?

மாசா— அங்கு, அதோ தித்தர் அழுது இருக்கிற அவ்விடத்தில்.

பர— சித்தர் முகம் வானத்தை நோக்கி இருக்கிறதே!

காத்— அவர் கொல்லப்பட்டிருக்கிறார்.

பர— வீரசிம்மா, உன் வீரம் இன்னும் திகழ்கிறது. உன் ஆவி ஈண்டு உலாவி எங்கள் கத்திகளை எங்கள் மார்பகத்தே செலுத்துகிறது. (பறை முழக்கம் சிறிதாக)

காத்— வீரமிகுந்த சித்தர்! இவர் காசியருக்கு முடிசூடியுள்ளாரோ, கவனியுங்கள்.

பர: இருக்கும் வீரர்களில் இவ்வாறு இணைபிரியா வீரர் யாரும் உளரோ? ரோமாபுரிப் பெருமக்கள் வழிக்குறிப்பில் இதுவே இறுதிப் பெயர். ரோமாபுரி இத்தகைய ஒருவரை இனிப்பெறுதல் முடியாத காரியம். ஐய, விடை பெறுகின்றேன். அன்பர்களே, இறந்து கிடக்கும் காசியருக்கு நீங்கள் காண்கிற இவ்வளவில் அல்ல, இன்னும் மிகமிக இரங்கி அழவேண்டியவன் யான். ஆம், அதற்கு ஒரு நாள் வரும்; காசியரே, அன்று உம்மை எண்ணி எண்ணி அழுவேன். சரி, ஈமக்கிரியைகளை இங்கு கோடல் போர்முறைக்கு ஊறுசெய்யுமாதலின் அவர் உடலைத் தேவபுரிக்கு எடுத்துச் செல்லுங்கள். எழிலரே, காத்தரே, வாருங்கள், போர்முனைக்குச் செல்வோம். வேலவர், விழாவர், போரை நடாத்துங்கள். வீரர்களே, மணி மூன்றாயிற்று. பொழுது சாய்வதற்குள் மறுமுறை பொருது வாகைசூடவகை தேடுவோம்.

காட்சி 4. (போர்க்களத்தின் ஒரு சிறை.)

(போர் முழக்கம்—இருதிறப்படைகளின் தோற்றம்—பரதர், காத்த குமாரன் எழிலர், பிறர் வருதல்.)

பர— வீரமக்காள், துணிந்து நின்று போர் புரிவீர்.

காத்— போர்புரியத் துணியாத பேடி இங்கு யாவன் உளன்? எனக்கு இணையாக நிற்கிறவர் யார்? மாற்றலர் கூற்றுவன், நாட்டின் நண்பன், ஆன காத்தவீரியன் திருக்குமாரன் என்று இன்று போரில் பேர் நாட்டுவேன். (பகைவரைத் தாக்குதல்.)

பர— யாம் பரதர்; யாம் பரதர்; நாட்டின் நண்பர்? பரதர் பெருமையை இன்று பார்மின்!

(பகைவரைத் தாக்கி அகல்தல். காத்தன் போரில் சாய்கிறான்.)

எழில— இளமையும் பெருமையும் ஏந்திய காத்தகுமார, வீழ்ந்தாய்! சித்தரைப்போல நீயும் வீரவாழ்வு பெற்றாய். காத்தவீரியன் திருக்குமாரன் என்னும் சீர்த்தி கண்டாய்.

ஒரு வீரன்— பணி; இன்றேல் உன் உயிர் தொலைந்தது.

எழில— சாவு ஒன்றுக்கே யான் பணிபவன். என்னிடம் பெருந்தொகை உள்ளது. என்னை உடன் கொன்று அதனை நீ கொள்வாயாக. (பணம் கொடுக்கிறான்.)

நீர்-பரதரைக் கொன்று அப்பெருமையை உரிமைப் படுத்தலாமே?

1-வீரன்— அது ஆகாது. சிறைவாசப் பெரு நல்லார் அவர்.

2-வீரன்— பரதர் கைப்பற்றப்பட்டார் என ஆநந்தருக்கு அறிவியுங்கள். யானே சென்று அறிவிக்கிறேன்: இதோ தளபதி வருகின்றார். (ஆநந்தர் வருதல்) தேவா, பரதர் கைப்பற்றப்பட்டார்.

ஆந— அவர் யாண்டுள்ளார்?

எழி— ஆனந்தரே, தக்க பாதுகாப்பில் பரதர் வைக்கப்பட்டுள்ளார்: பெருந்தகை பரதர் எங்களில் எவராலும் உயிருடன் மீட்கப்படா முறையில் பாதுகாக்கப் படுகிறார். இத்தகைய அவமானத்திலிருந்து தெய்வங்களே, அவரை விடுவிக்க வேண்டும். இருப்பினும் சரி, இறப்பினும் சரி, நீர் அவரைக் கண்ணுறும்போது பரதர் பெரும் பரதராகவே தோன்றுவார்!

ஆந— நீவிர் அப்பரதர்க்கு உற்ற அன்பர். அவரிற் குறைந்தவரல்லர். தக்க பாதுகாப்பில் இவரை வைத்து நல்ல ஆதரவு அளியுங்கள். இத்தகையோரைப் பகைவராக அன்று, அன்பர்களாக ஆதரிக்கவே விரும்புகிறேன். சரி; உடனே சென்று பரதர் இருக்கிறாரா, இறந்துள்ளாரா என்று பார்த்து; உக்கிரசிம்மன்

பாசறைக்கு வந்து, சகல நடப்புக்கும் எனக்குச் செய்தி தெரிவியுங்கள்.

காட்சி 5. போர்க்களத்தின் ஒரு சிறை.

(பரதர், தார்மீகர், காளியர், சரதர், வேல்மானியர் வருகின்றனர்.)

பர: எஞ்சிய அன்பர்களே, இப்பாறைமீது அமருங்கள்.

காளி: தேவா, தேரையர் காட்டிய தீப்பந்தங் கண்டோம். பின் அவர் கதி என்னாயிற்று, அறியோம். கொலையோ, சிறையோ?

பர: காளியர், அமரும். கொலைபட்டதாக வார்த்தை பரவுகிறது. கொலை என்பது ஒரு நாகரிகமாகி விட்டது. காளியர், ஒரு வார்த்தை. (காதுள் பேசுகிறார்.)

காளி: ஆகா, தேவா, யான்மாட்டேன். இவ்வுலகெல்லாம் கிடைப்பினும் யான் அது புரியேன்.

பர: சரி, அவ்வாறாயின், வாயை மூடியிரும்.

காளி: வேண்டுமாயின், என்னையே மாய்த்துக் கொள்கிறேன்.

பர: தார்மீகர், இங்கு வாரும். (காதுள் பேசுகிறார்.)

தார்: இது புரியவோ யான்?

காளி: தார்மீகர்! (எச்சரித்தல்.)

தார்: காளியர்,

காளி: பரதர் எக்கொடுமைக்கு உம்மை வேண்டிக்கொண்டார்?

தார்: அவரைக் கொல்கிறதற்கே. அதோ பாரும், ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருக்கிறார்.

காளி: அவரின் தூய உள்ளம் துக்கம் நிறைந்து, இப்பொழுது அது கண்களில் வழிகிறது.

பர: வேல் மானவரே, இங்குவாரும், ஒரு வார்த்தை.

வேல்: தேவா, கூறுங்கள்.

பர: வேல் மானவரே, வீரசிம்மனின் ஆவி இராக்காலங்களில் இருமுறை என்முன் தோன்றியுள்ளது: முன்பு சதுரகிரியில் ஒரு முறை; நேற்று இரவு பலிபுரத்தில் ஒருமுறை. எனது நாள் நெருங்கி விட்டது.

வேல்: அது அவ்வாறில்லை. தேவா,

பர: அது அவ்வாறே. நடப்பை எல்லாம் நீரும் கவனிக்கின்றீரே; பகைவர்பக்கம் எழுச்சி; நம்மது தாழ்ச்சி. (போர்ப் பறை கேட்கிறது) அவர்கள் கையால் அழிவதைவிட நம்மை நாமே மாய்த்துக் கொள்ளல் நல முடைத்து. வேல்மானவரே, நாம் இருவரும் ஒரு சாலை மாணவர்; பண்டு தொட்டுப் பள்ளித்தோழர், ஆதலின் உம்மை ஒன்று வேண்டுவேன். என் வாளை இறுகப் பிடித்து நில்லும், யான் அதில் பாய்ந்து நிற்கிறேன்.

வேல்: இதுதான் தோழன் செய்யும் துணைபோலும்!
(போர் முழக்கம்.)

காளி: தேவா, இனியும் தாழ்த்த வேண்டா. உடனே அகலுங்கள், அகலுங்கள்.

பர: வேல்மா னவரே, விடைபெறு கின்றேன்.
விடைபெறு கின்றேன். சரதரே, நீவிர்

இத்துணைப் பொழுதும் நித்திரை செய்தீர்.
சரதரே, உம்பால் விடைபெறுகின்றேன்.
அன்பர்காள், என்உளம் இன்புறு கின்றது:
ஏனோ? என்னைச் சார்ந்த யாவரும்
உண்மை உறவே கொண்டனர் ஆதலின்.
உக்கிர சிம்ம னுடன்ஆ நந்தர்
பெற்ற வெற்றியும் சூழ்ச்சியின் பேற்றியால்
உற்றஎன் தோல்வியில் உறுபுகழ் காண்பல்யான்.
விடைபெறு கின்றேன், பரதர்தம் வாழ்வின்
இறுதி வாய்மொழி இதுவே ஆகும்.
இருள்திரை மூடக் காண்கிறேன். என் உடல்

அரியன செய்து இறுதிகாண் கின்றது:
பெரிய அமைதியே யான்பெறுகின்றேன்.

(உட்புறம்—) அகலும், அகலும், உடனே அகலும்.

காளி: தேவா, அப்பால் அகலுங்கள்.

பர: அப்பால், எப்பால்?

(காளியர், தார்மீகர், வேல்மானவர் அகல்தல்.)

சரதரே, உமக்கு ஒன்றுயான் உரைப்பேன்.
நற்குடிப் பிறப்பு நற்பெருங் குணங்கள்
என்றும் தாங்கினீர், இன்றும் என்கைவாள்
தாங்கி; நீர் உமது முகத்தைத் திருப்பியே
யான்அதிற் பாய இதுசெய் வீரோ?

காளி: தேவா, தேவர் திருக்கரம் நீட்டும்
விடைபெறு கின்றேன் தேவா,

பர: சரதரே விடைபெறு கின்றேன்.

(வாளில் பாய்கிறுர்.)

வீர சிம்மா, உன்னையான் வீழ்த்திய
அதேஎ வேட்கையில் என்னையும் வீழ்த்தினேன்.
இனி நீ உன் சினம் தணி.

(போர்ப்பறை. படை பின் வாங்குதல் ஆநந்தர், உக்கிரன், மாசாலர், எழிலர் படை வருதல்.)

உக்: அவர் யாவரோ?

மாசா: எம் தலைவர்க்கு உரியவர் இவர். சரதரே, நம்தலைவர் யாண்டுளார்?

சர: மாசாலரே, நீர் சிறைப்பட்டுள்ளீர், அவர் அதின் விடுதலை பெற்றுள்ளார். வெற்றிபெற்ற இவர்களும் அவரை என் செய்ய! நெருப்பு ஒன்றையே பற்றவைக்கலாம். யாவருந் தமக்குப் பெருமை கூற முடியாதிலையில், அவர் தம்மைத்தாமே முடித்துக்கொண்டார்.

எழி: நல்லகாரியம் செய்தார் பரதர்: அன்று எழிலன்சொன்ன வாக்கை நன்கு மெய்ப்பித்துவிட்டார்: பரதரே, உம்மைப் பாராட்டு கின்றேன்!

உக்: பரதருக்கு ஊழியரான பலரையும் உடன்கொண்டு ஆதரிக்கின்றேன். நீங்கள் எம்முடனிருந்து உழைக்கலாமன்றோ?

சர: மாசாலர் ஒருப்பட்டால்.

உக்: மாசாலரே, அவ்வாறு செய்யலாமன்றோ?

மாசா: சரதரே, நம் தலைவர் எவ்வாறு இறந்தார்?

சர: நான் வாளை ஏந்தி நின்றேன். அவர் அதில் பாய்ந்து உயிர் நீத்தார்.

மாசா: எம்தலைவர்தம் இறுதி நேரத்தும் தொண்டாற்றியவர் இவர். ஆதலின் இவரைநீர் உடன் கொள்ளலாம்.

ஆந: இவரே பெருமகன்:
இவர் ஒருவரே உரோமா புரிபெறு
பெருமகன் ஆவார்.
இவரை நீத்த பகைவர்கள் பலரும்
வீரசிம் மன்மீது வெறுப்புற் றவராய்ப்
பொறுமையால் பலப்பல புரிந்தனர். பரதரோ
அவர்களுள் ஒருவர்தாம் ஆனபோதிலும்
நாட்டு மக்களின் நலமே கருதினர்:
உள்ளத் தூய்மைகொண் டூழியம் ஆற்றினர்:
நற்பெரு வாழ்வே நடாத்தினர்.
ஐம்பெரும் பூதச் சேர்க்கை இவ்வுடம்பு
திருந்திய முறையை அறிந்த இவ்வுலகம்
இவரே பெருமகன் என்று பாராட்டும்,
என்றும் பாராட்டும்!

108755

ஆந: அவர் பெருந்தகுதிக் கானமேல் முறையே
ஈமக்கிரியை இனிதாய் இயற்றுவோம்.
வீர விருதுகள் விளங்க மேன்மையாய்
அவர்தம் திருஉடல் எனது பாசறையில்
இரவு முழுவதும் இருக்கு மாக!
பொருதொழில் நிறுத்துக!
நாளை விழாவில் யாவரும்
கலந்துகொண்டாடச் செல்லுவோம் நாமே!

(அகல்தல்.)

நடிகர்கள் அவை வணக்கம்.

வணக்க முறை.

மருதன்		சரதர்
தித்தர்		பிசிரர்
எழிலர்		புலியர்
உலூகர்		விழாவன்
வேரியர்	கீசகர்	இலாகிரி
பாமியர்	துச்சசர்	காளியர்
மாசாலர்	உக்கிரன்	களத்திறர்
தார்மீகர்	லோபியர்	துருபதனர்
பண்டையர்		சின்னன்கவி
வேல் மானவர்		காத்தகுமாரன்

காசியர்	பாரதர்	ஊர்வசி	கலாபூரணி	வீரசிம்மன்	ஆநந்தர்